# வ.உ.சி.
# ஒரு பன்முகப் பார்வை

முனைவர் எஸ். கண்ணன்

உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்
INTERNATIONAL INSTITUTE OF TAMIL STUDIES

# வ.உ.சி.

# ஒரு பன்முகப் பார்வை


முனைவர் எஸ். கண்ணன்
இணைப்பேராசிரியர், தமிழ்த்துறை
தன்ராஜ் பெய்த் ஜெயின் கல்லூரி
சென்னை - 96



**உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்**

**INTERNATIONAL INSTITUTE OF TAMIL STUDIES**

இரண்டாவது முதன்மைச் சாலை, மையத் தொழில்நுட்பப்
பயிலக வளாகம், தரமணி, சென்னை - 600 113

வ.உ.சி. அறக்கட்டளைச் சொற்பொழிவு
(அறக்கட்டளை நிறுவியோர் - கொடையாளர் பலர்)
வரிசை எண் : 7 நாள்: 27-1-05

# BIBLIOGRAPHICAL DATA



| | | |
|---|---|---|
| Title of the Book | : | V.O.C. - oru pa<u>n</u>muga-p-pārvai |
| Author | : | **Dr. S. Kannan**<br>Associate Professor<br>Dept. of Tamil,<br>Dhanraj Baid Jain College<br>Thorappakkam, Chennai - 96 |
| General Editor | : | Dr. T. Mahalakshmi<br>Research Assistant<br>Dept. of Literature and Manuscriptology<br>International Institute of Tamil Studies |
| Publisher | : | International Institute of Tamil Studies<br>II Main Road, C.I.T. Campus, Taramani<br>Chennai - 600 113. Ph: 22542992 |
| Publication No. | : | 529 |
| Language | : | Tamil |
| Edition | : | First |
| Year of Publication | : | 2005 |
| Paper Used | : | 18.6 TNPL Maplitho |
| Size of the Book | : | 1/8 Demy |
| Printing type Used | : | 10 points |
| No. of Pages | : | viii + 72 |
| No. of Copies | : | 1200 |
| Price | : | Rs. 25/- (Rupees Twenty Five only) |
| Printing | : | UNITED BIND GRAPHICS<br>101-D, Royapettah High Road, Mylapore<br>Chennai - 600 004 |
| Subject | : | Tamilology |



அறக்கட்டளைச் சொற்பொழிவாளர் கருத்துகளுக்கு
நிறுவனம் பொறுப்பன்று

முனைவர் சா. கிருட்டினமூர்த்தி
இயக்குநர்
உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்
தரமணி, சென்னை-600 113.

# அணிந்துரை

'செக்கிழுத்த செம்மல்' என்று அனைவராலும் பாராட்டப்பெறும் வ.உ.சி. அவர்கள் இந்திய நாட்டின் விடுதலைக்காக ஆங்கில ஆதிக்கத்தை எதிர்த்துக் கடுந் தண்டனைக்குள்ளானவர். அவருடைய வழக்கின் தீர்ப்பினைக் கேட்ட அவருடைய உடன்பிறப்பு சித்தம் கலங்கி வாழ்நாள் முழுவதும் பித்தராக இருந்த செய்தியை உலகறியும். இத்தகு கடும்தண்டனைக்குள்ளாகிய வ.உ.சி. அவர்கள் சிறந்த திறனாய்வாளர்; தேர்ந்த இலக்கண அறிஞர்; போற்றுதற்குரிய சமுதாயச் சீர்திருத்தச் சிந்தனையாளர். வ.உ.சி.யின் மாண்பையும், பெருமையையும், உள்ளக்கிடக்கையையும் நன்கு அறிந்திருந்த காரணத்தினால்தான் மகாகவி பாரதியார் அவர்கள் வ.உ.சி.யை மேலோர் என்றும் நூலோர் என்றும் போற்றிப் பாடினார்.

வ.உ.சி.யின் சிறை வாழ்க்கை உருக்கமும் நெகிழ்ச்சியும் கொண்ட கவிதையைப் பாடச்செய்தது. சிறையின் கொடுமை யையும், அவர் அனுபவித்த இன்னல்களையும் தந்தைக்கும், மனைவிக்கும் எனச் சிறையில் இருந்து எழுதிய கடித வரிகளில் எடுத்துக்காட்டினார். திருக்குறளை ஆங்கிலத்தில் மொழி பெயர்த்துப் பெருமை சேர்த்தவர் வ.உ.சி. அவருடைய தொல்காப்பியப் பதிப்புலகில் குறிப்பிடத்தக்க இடத்தைப் பெற்றுள்ளது என்பதை அறிஞர் பலரும் அறிவர். இத்தகு சிறப்புகளையும் பெருமைகளையும் கொண்ட வ.உ.சி. அவர்களின் நினைவைப் போற்றும் வகையில் அவருடைய அன்பர்கள் பலரால் உலகத் தமிழாராய்ச்சி நிறுவனத்தில் ஓர் அறக்கட்டளை நிறுவப்பட்டுள்ளது. இவ்வறக்கட்டளையில் இதுகாறும் ஆறு சொற்பொழிவுகள் நடைபெற்றுள்ளன. இவ் அறக்கட்டளைச் சொற்பொழிவு வரிசையில் ஏழாம் சொற் பொழிவை நிகழ்த்த இசைவு தந்த சென்னை, தன்ராஜ் பெய்த் ஜெயின் கல்லூரித் தமிழ்ப் பேராசிரியர் முனைவர் எஸ். கண்ணன் அவர்களுக்கு நிறுவனத்தின் சார்பில் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். பேராசிரியர் கண்ணன் அவர்கள் சிறந்த

பேச்சாளர், நல்ல கவிஞர், மக்கள் ஊடகங்களான தொலைக்காட்சி, வானொலி ஆகியவற்றின் நிகழ்ச்சிகளில் அரும்பணிகளை மேற்கொண்டவர். பொதிகைத் தொலைக்காட்சி அன்பர்கள் பேராசிரியர் கண்ணன் அவர்களை நன்கு அறிவர்.

'வ.உ.சி. – ஒரு பன்முகப் பார்வை' என்ற தலைப்பில் அரியதொரு சொற்பொழிவினை அவர் எழுதி உருவாக்கி அளித்துள்ளார்.

வ.உ.சி.யைப் பல்வேறு கோணங்களில் அணுகிப் பார்த்து அரிய கருத்துகளை இந்நூலில் தந்துள்ளார். இளமையும் துடுக்குத்தனமும், நன்றி பாராட்டும் நன்னெஞ்சினர், ஏழைப் பங்காளர், நாட்டுப்பற்று, தொழிற் சங்கவாதி, பெண்ணைப் போற்றும் பெருந்தகையாளர், இலக்கியவாதி, இலக்கியப் புரட்சியாளர், வ.உ.சி.யின் இளகிய மனசு, வ.உ.சி. மெய்யறிவு என்பன போன்ற தலைப்புகளில் எழுதியுள்ளார்.

இந்நூல் தமிழறிஞர்களுக்கும், வ.உ.சி. அன்பர்களுக்கும் சிறந்த நல்வரவாக அமையும்.

இவ்வறக்கட்டளை நூலை வெளிக்கொணர்வதில் துணைநின்ற அறக்கட்டளைப் பொறுப்பாளர் முனைவர் தி. மகாலட்சுமிக்கு நன்றி.

இந் நிறுவன வளர்ச்சிக்கு ஆக்கமும் ஊக்கமும் தந்து வருகின்ற நிறுவனத் தலைவர் மாண்புமிகு கல்வி மற்றும் வணிகவரித் துறை அமைச்சர் திருமிகு சி.வி. சண்முகம் அவர்களுக்கும், தமிழ் வளர்ச்சி பண்பாடு மற்றும் அறநிலையத் துறைச் செயலாளர் திருமிகு பு.ஏ. இராமையா இ.ஆ.ப. அவர்களுக்கும், சிறப்புச் செயலாளர் திருமிகு தா. சந்திரசேகரன் இ.ஆ.ப. அவர்களுக்கும் என் நன்றியறிதலைப் புலப்படுத்திக் கொள்கிறேன்.

இந்நூலுக்கு ஒளி அச்சுக்கோப்புச் செய்த இந்நிறுவனக் கணிப்பொறி உதவியாளர் திரு. ஸ். கோபிநாத்துக்கும், அழகுற அச்சிட்டுத் தந்த யுனைடெட் பைண்ட் அச்சகத்தார்க்கும் பாராட்டுகள்.

சென்னை
நாள் : 5-1-2005

**இயக்குநர்**

# முன்னுரை

மூன்று என்ற எண்ணிக்கை (முத்தமிழ், முச்சங்கம், முத்தெய்வம், முக்கனி) எப்போதுமே முதல் மரியாதையைப் பெற்றுத் திகழுகிறது. அதிலும் **வ.உ.சி.** என்ற **மூன்று எழுத்துகள்** தமிழக வரலாற்றில் பொன்னெழுத்துகளால் பொறிக்கப்பட்டுத் தனக்கென்று ஒரு தனியிடத்தைக் கொண்டுள்ளது. தமிழும் தேசியமும் வ.உ.சி.யின் இரு கண்கள்; எந்த நிலையிலும் போலித்தனமில்லாத, கள்ளங்கபடமற்ற வாழ்க்கையை 'வாழ்வாங்கு வாழ்ந்து' தம் வாழ்நாள் முழுமையும் இந்நாட்டிற்கும், நம்மொழிக்கும் அர்ப்பணித்தவர் என்று கூறலாம்.


வ.உ.சி. அறக்கட்டளை சார்பில் எனக்குச் சொற்பொழிவு ஆற்ற வாய்ப்புக் கிடைத்தபோது, இதன் தொடர்பாக எனக்கு என்ன தகுதியிருக்கிறது என்று ஒரு நிமிடம் யோசித்தேன். தூத்துக்குடியில் உள்ள வ.உ.சி. கல்லூரியின் தொடக்ககால மாணாக்கன் நான் என்பதே அடியேனுக்குள்ள பெரிய தகுதியாகக் கருதினேன். வ.உ.சி.யின் வாழ்க்கை வரலாறு, அவருடைய சுயசரிதை, அவர் குறித்து இதுவரை வெளி வந்துள்ள கட்டுரைகள், நூல்கள் ஆகியவற்றைப் படித்தேன். அப்போது என் உடல் புல்லரித்தது; உள்ளம் உருகியது; கண்களில் கண்ணீரும் கசிந்தது. வ.உ.சி. போன்ற நாட்டிற்காக உழைத்த உத்தம சீலர்களை, தியாகிகளை எதிர்கால சந்ததியினர்க்கு அறிமுகம் செய்து அடையாளம் காட்ட வேண்டியது நம் அனைவரின் கடமை. அப்பொழுதுதான் இளைய பருவத்தினரின் உள்ளத்தில் நாட்டுப்பற்றும், இனப் பற்றும், மொழிப்பற்றும் இயல்பாக வளர்ந்து வேரூன்றும்.

'கூறியது கூறல்' குற்றமாகையால், அரைத்த மாவை அரைக்காமல் என் சொற்பொழிவினை இரு பிரிவுகளாக வகுத்துக் கொண்டுள்ளேன். முதற்பகுதியில் வ.உ.சிதம்பரம் பிள்ளை அவர்களின் வாழ்க்கை வரலாற்றினைக் கிடைத்த

குறிப்புகளின் அடிப்படையில் தொகுத்து வழங்கியுள்ளேன். வ.உ.சி.யின் வரலாற்றில் நடந்த 'நிகழ்வுகளை' ஆய்வுக் கண்ணோட்டத்தில் அவற்றைப் பல்வேறு தலைப்புகளோடு இணைத்துப் பார்த்தேன். அதன்மூலம் வ.உ.சி.யின் பல்வேறு பரிணாமங்கள் பளிச்சிட்டன. அவற்றை என் சிற்றறிவுக்கு எட்டிய "சொற் தலைப்புகளில்" உங்களுக்கு வழங்கியுள்ளேன். நம் பாரத நாட்டிற்குள் கடல்வழி உள்ளே நுழைந்த "வந்தேறிகளை" சுதேசிக் கப்பலை ஓடச் செய்ததன் மூலம் கதிகலங்க வைத்தவர் வ.உ.சி. உப்புக் கடலில் கப்பலை ஓட விட்டதற்குத் தேசியம், நாட்டுப்பற்று காரணம் என்று கூறலாம். ஆனால் அமுதக் கடலின் (தமிழ்) ஆழங்கண்டுணர்ந்தது மொழிப்பற்று, இனப்பற்று கருதித்தானே? கவிராயர் வீட்டுப் பிள்ளை யல்லவா அவர்? 'குலவிச்சை கல்லாமல் பாகம் படும்' என்பது ஆன்றோர் பொன்மொழி. இத்தகைய அரியதொரு வாய்ப்பினை அடியேனுக்கு நல்கிய சென்னை உலகத் தமிழாராய்ச்சி நிறுவன இயக்குநர் முனைவர் சா. கிருட்டின மூர்த்தி அவர்களுக்குத் 'தலையல்லால் கைம்மாறிலேனே' (நாச்சியார் திருமொழி) என்னும் வகையில், பணிவுடன் என் நன்றியினை உரித்தாக்குகின்றேன்.

*சென்னை 600 041* **எஸ். கண்ணன்**
*01-01-2005*

# ஆசிரியர் பற்றி .........



முனைவர் எஸ். கண்ணன், விருதுநகர் மாவட்டம் ஸ்ரீவில்லி புத்தூருக்கு அண்மையில் உள்ள விழுப்பனூர் என்ற கிராமத்தில் பிறந்தவர். தொடக்கக்கல்வி, உயர் நிலைக் கல்வியை வத்திராயிருப்பு என்ற ஊரில் முடித்தார். இளமறிவியல் (விலங்கியல்) பட்டப்படிப்பினைத் தூத்துக்குடி வ.உ.சி. கல்லூரியிலும், தமிழ் முதுகலைப் படிப்பினைச் சென்னை பச்சையப்பன் கல்லூரியிலும் முடித்தவர். சென்னை உலகத் தமிழாராய்ச்சி நிறுவனத்தில், மேனாள் இயக்குநர் (அமரர்) க.த. திருநாவுக்கரசு அவர்களை நெறியாளராகக் கொண்டு "ஆண்டாள், பெரியாழ்வார் பாசுரங்கள்; சமூக சமயப் பண்பாட்டு ஆய்வு" எனும் தலைப்பில் ஆய்வு செய்து முனைவர் பட்டமும் பெற்றவர். 1974ஆம் ஆண்டிலிருந்து சென்னை தொரப்பாக்கம் டி.பி. ஜெயின் கல்லூரியில் தமிழ்த் துறையில் பணியாற்றி வருகிறார்.

பல ஆய்வரங்குகளில் கலந்து கொண்டு, இலக்கியம் தொடர்பான கட்டுரைகளை அளித்து வருபவர். சென்னைப் பல்கலைக்கழகம் அஞ்சல் வழிக் கல்வி நிறுவனம் உட்பட பல்வேறு பல்கலைக் கழகங்களில் பயிலும் மாணாக்கருக்கு உரிய பாடங்களை எழுதுதல், வகுப்பு நடத்துதல் மற்றும் தேர்வுப் பணிகள் ஆகியவற்றுடன் தொடர்பு கொண்டவர். சென்னைத் தொலைக்காட்சி (தூர்தர்ஷன் - பொதிகை), அகில இந்திய வானொலி ஆகிய மக்கள் தொடர்புச் சாதனங்கள் மூலம் 20 ஆண்டுகளுக்கும் மேலாக இலக்கிய நிகழ்ச்சிகளை வழங்கி வருபவர். தரமான இதழ்களில் அவ்வப்போது புத்தக மதிப்புரைகளும் எழுதும் வாய்ப்புப் பெற்றவர்.

வைணவ மரபுவழி வந்தமையின், ஆழ்வார்களின் ஈரச் சொற்களில் ஆழ்ந்த ஈடுபாடு கொண்டவர்.

# பொருளடக்கம்


| | | பக்கம் |
|---|---|---|
| வ.உ.சி. வாழ்க்கை வரலாறு | ... | 1 |
| இளமையும் துடுக்குத்தனமும் | ... | 25 |
| நன்றி பாராட்டும் நன்னெஞ்சினர் | ... | 27 |
| மொழிப்பற்றாளர் வ.உ.சி. | ... | 30 |
| சாதி உணர்வுக்கு அப்பாற்பட்டவர் வ.உ.சி. | ... | 34 |
| ஏழைப் பங்காளன் | ... | 36 |
| உதவிக்கரம் நீட்டும் உயர்பண்பாளர் | ... | 38 |
| நாட்டுப்பற்று | ... | 40 |
| நாட்டுப்பற்றுக் கலந்த இலக்கியப் பணி | ... | 43 |
| 'சுதேசி' சிதம்பரம் பிள்ளை | ... | 45 |
| தொழிற்சங்கவாதி | ... | 46 |
| பெண்மையைப் போற்றும் பெருந்தகையார் | ... | 47 |
| உண்மை விளம்பி | ... | 48 |
| இலக்கியவாதி | ... | 49 |
| இலக்கியத் தொண்டர் | ... | 53 |
| உயிர்க்கொலையை வெறுத்தவர் வ.உ.சி. | ... | 58 |
| வ.உ.சி.யின் இளகிய மனசு | ... | 60 |
| வ.உ.சி. சிறந்த பேச்சாளர் | ... | 62 |
| வ.உ.சி.யும் பத்திரிகை தொடர்பும் | ... | 63 |
| சாமர்த்தியசாலி | ... | 65 |
| வ.உ.சி.யின் 'மெய்யறிவு' | ... | 66 |
| விதி பற்றிய வ.உ.சி.யின் கோட்பாடு | ... | 67 |
| மெய்யறம் | ... | 68 |
| துணைநூற் பட்டியல் | ... | 69 |
| வ.உ.சி.யின் படைப்புகள் | ... | 72 |

# வ.உ.சி. வாழ்க்கை வரலாறு

**கப்பலோட்டிய தமிழர்** என்று பார் போற்றும் வ.உ.சிதம்பரம் பிள்ளை இன்றைய தூத்துக்குடி மாவட்டம், ஒட்டப் பிடாரத்தில் 1872ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் 5 ஆம் நாள் (இன்று நாடெங்கும் கொண்டாடப்படும் ஆசிரியர் தினம்) உலகநாதபிள்ளைக்கும் பரமாயி அம்மைக்கும் மகனாகத் தோன்றினார். வ.உ.சி. என்பதில் உள்ள 'வ' என்ற எழுத்து அவருடைய முன்னோர்களுக்குச் சொந்தமான 'வண்டாணம்' என்ற ஊரைக் குறிப்பதாகச் சொல்வர். ஆனால் வ.உ.சி.யின் திருமகனார் திரு. சுப்பிரமணியம் இக்கருத்தை மறுக்கிறார்.[1] வ.உ.சி.யுடன் பிறந்தவர் எழுவர். அவருடைய பெரியப்பாவின் நினைவாகவே அவருக்கு இப்பெயர் சூட்டப்பட்டது.[2]

வ.உ.சிதம்பரம் அக்கால வழக்கப்படி திண்ணைப் பள்ளியில் படித்தார். ஔவையின் பாடல்கள் மற்றும் நீதி நூல்கள் கற்றுத் தரப்பட்டன. இவருடைய வீட்டில் இவருடைய தாத்தாவும் பாட்டியும் இதிகாசம் மற்றும் புராணக் கதைகளைக் கூறுவார்கள். ஒட்டப்பிடாரத்தில் அவ்வப்போது நடைபெறும் புராணச் சொற்பொழிவுகளுக்கு வ.உ.சி. தன் பாட்டனாருடன் செல்வதுண்டு. இவருக்கு ஆரம்பப் பாடம் சொல்லிக் கொடுத்தவர் வீரப்பெருமாள் அண்ணாவியார். அவரிடம் அரிச்சுவடி, நன்னெறி, மூதுரை போன்ற ஒழுக்க நூல்களை நன்கு கற்றார். உலகநாத பிள்ளை ஒரு வழக்கறிஞர். தம்முடைய மகனும் தம்மைப் போல நன்கு படித்து முன்னுக்கு வரவேண்டும் என்று எண்ணினார். அதனால் தன் மகனுக்காக ஒரு பள்ளியைக் கட்டினார். ஏனென்றால் ஒட்டப்பிடாரத்தில் ஆங்கிலக் கல்வி போதிப்பதற்கு வசதியில்லை. அவர் தன் மகனுக்காக ஒரு நடுநிலைப் பள்ளியைக் கட்டியதன் மூலம் அந்த ஊரில் உள்ள அனைத்துக் குழந்தைகளுக்கும் கல்வி பயிலுவதற்கு ஒரு வாய்ப்புக் கிடைத்தது. உலகநாதபிள்ளைக்குக் கோடிப்

---

1. வ.உ.சி. வாழ்க்கை வரலாறும் இலக்கியப் பணிகளும், ப. 285.

2. மேலது, ப. 3.

புண்ணியம் கிடைத்தது. மகாகவி பாரதியார் வாக்கில் சொல்வதானால்,

"புண்ணியம் கோடி ஆங்கோர் ஏழைக்கு
எழுத்தறிவித்தல்" அல்லவா?

உலகநாதபிள்ளை தான் கட்டிய பள்ளியில் ஆங்கிலம் கற்பிப்பதற்காக "அறம் வளர்த்த நாதபிள்ளை" என்பவரை எட்டையபுரத்திலிருந்து வரவழைத்தார்.[1] ஆனால் வ.உ.சி. அவர்கள் தம்முடைய சுயசரிதையில்[2] கிருட்டினன் என்பவரிடம் தாம் ஆங்கிலம் பயின்றதாகக் குறிப்பிடுகிறார்.

வ.உ.சிதம்பரம் இப்பள்ளியில் தம்முடைய ஆரம்பக் கல்வியைக் கற்றார். பிறகு தூத்துக்குடிக்குச் சென்று செயின்ட் பிரான்ஸிஸ் சேவியர் (St. Francis Xavier) பள்ளியில் உயர்நிலைப் படிப்பை முடித்தார். அங்கிருந்த கால்டுவெல் கல்லூரியில் மெட்ரிகுலேஷன் படிப்பை முடித்தார். அப்போதும் அவருக்கு ஆங்கிலத்தைக் காட்டிலும் தமிழறிவே மிகுந்து சிறந்து விளங்குவது ஆயிற்று. மெட்ரிகுலேஷன் தேர்வில் ஒருமுறை தோல்வியுற்றதை அவரே தம்முடைய சுயசரிதையில் ஒப்புக் கொள்கிறார். "என்னுடைய குறையால் இடறினேன் பரீட்சையில்" என்று தன்னுடைய விளையாட்டுப் புத்தியைக் "குறை" எனக் குறிப்பிட்டிருக்கலாம்.

வ.உ.சி.யின் முன்னோர்கள் தமிழ்மொழியில் ஆர்வம் உள்ளவர்களாக விளங்கினர். இவருடைய முன்னோர்கள் கவிஞர்களாகவும் விளங்கினர். ஒட்டப்பிடாரத்தில் இவருடைய வீட்டிற்குக் 'கவிராயர் வீடு' என்ற பெயரும் உண்டு. சிறுவயது முதலே வ.உ.சி. நல்ல உடற்கட்டுடன் இருப்பார். நிறம் கருமை; நெடிய தோற்றம் உடையவர் அல்லர் அவர். சாதாரண உயரம் உடையவர், உருண்டையான முகத்தோற்றத்தைப் பெற்றிருந்தார். நல்ல புயவலிமை உடையவர். எப்பொழுதும் 'துருதுரு'வென இருப்பார்; மிகுந்த விளையாட்டுப் புத்தி.

இக்கால இளைஞர்களுக்கு வ.உ.சி. விளையாடிய விளையாட்டுகள் தெரியுமா என்பதே கேள்விக்குறி. தம்முடைய சுயசரிதையில், இவற்றை நினைவோடு பட்டியலிடுகிறார்:

---

1. கப்பலோட்டிய தமிழன், ப. 37.
2. சுயசரிதை, ப. 12.
3. வ.உ.சி. வரலாறும், பணிகளும், ப. 286.

"சுவர்மேல் நடத்தல், தொன்மரம் ஏறுதல்,
கவண்கொடுங் கைகொடுங் கல்லெறி பழகுதல்,
கண்ணிணைப் பொத்திக் காட்டில் விடுதல்,
எண்ணினைச் சுவாசம் இழுக்காது இயம்பல்,
குதி வட்டாடுதல், கோலி தெறித்தல்,
குதிரை மீது ஊர்தல், கோலேறி நடத்தல்,
காற்றிரி எறிதல், கால்மாறி ஓடுதல்
மேற்றிரி பந்தின் விளையாட்டுப் பலப்பல
சடுகுடு, கிளியந்தட்டு, பல்லி
நெடுகடும் ஓட்டம், நீர்விளையாட்டம்,
கம்பு சுற்றுதல், கத்தி வீசுதல்,
'தம்'மினை அடக்கித் தலைகீழ் நடத்தல்,
கசரத்து, பஸ்கி, கலப்புறு குஸ்தி,
நிசத்துச் சண்டையில் நிற்கும் முறைகள்,
வெடிகொடு சுடுதல், வில்லொடு தெறித்தல்
அடிபிடி சண்டை அளவில் புரிந்தேன்"

இத்துணை விளையாட்டுக்களிலும் தன்னை ஈடுபடுத்திக் கொண்ட வ.உ.சி. அவர்கள் தன்னுடைய பெற்றோரிடம் நல்ல பெயர் வாங்கவில்லை. அவருடைய தந்தை உலகநாதபிள்ளை வ.உ.சி.யை சில சமயம் பொறுமை இழந்து அவரை நையப்புடைப்பார். விளையாட்டுத்தனமாக இருந்த வ.உ.சி.யை நல்வழிப்படுத்த வேண்டும் என்ற நோக்கில் அவருடைய தந்தையார் வ.உ.சி.யைக் கண்டித்திருக்கலாம். இவருடைய தந்தையார் இவரை அடித்ததற்கு வ.உ.சி. வேறு ஒரு காரணத்தையும் தம்முடைய சுயசரிதையில் கூறுகிறார்.

"தகுதியில் கணவனையென் தமக்கைக்கு அளித்துஎன்
வீட்டுடன் இருக்க விளம்பினன் தந்தை, யான்
காட்டினில் சென்றிடுங் கதியினை அடைந்தேன்
பொறாமை மேற்கொடு புறத்திருந் துற்றுஅவன்
அரும்பல பழிகளை ஆக்கிக் கூறுவன்
தந்தை என்னைத் தாறுமாறாக
நிந்தை புரிந்து நினைத்தற் கரிதா
அடிப்பன்; மிதிப்பன் யான்உடன் ஓட்டம்

1. வ.உ.சி. வரலாறும் பணிகளும், ப. 286.
2. சுயசரிதை, ப. 18.

பிடிப்பன் அவன்பின் தொடர்ந்து கொணர்வன்
எண்ணிலாத் தட்வை இப்படி நேர்ந்தன"[1]

என்று தன்னுடைய சுயசரிதையில் பதிவு செய்கிறார். அவருடைய சகோதரியின் கணவர் அவரைப் பற்றிக் "கோள்" சொல்லிச் சொல்லி உலகநாத பிள்ளை தம் மகனான சிதம்பரத்தை அடிப்பார் என்ற உண்மையை வ.உ.சி. அவர்கள் கூறுகிறார். அவருடைய சகோதரியின் கணவர் வீட்டோடு மாப்பிள்ளை. இச்செயல் வ.உ.சி.க்குப் பிடிக்கவில்லை.

உலகநாதபிள்ளை வ.உ.சி.யைப் பல நாட்கள் அடித்திருக்கிறார். அதுவும் மெட்ரிகுலேசன் படிக்கின்ற காலத்திலும் அடி உதைக்குக் குறைவில்லை. ஒருநாள் வ.உ.சி. ஒட்டப்பிடாரத்தை விட்டு வெளியேறுவது என முடிவு செய்கிறார். தலையை மழுங்க மொட்டையடித்துக் கொண்டார். இடையில் ஒரு கோவணத்தைக் கட்டிக் கொண்டார். துறவியாக மாறுவது என்று முடிவு செய்தார்.

"கண்ணிலாது ஒருநாள் கணக்கிலாது அடித்தான்
நினைந்தேன் துறவினை. நீக்கினேன் சிகையினை
புனைந்தேன் கௌபீணம்; பொள்ளென நடந்தேன்"[2]

மெட்ரிகுலேஷன் முடித்த விடலைப் பருவத்தில் வீட்டைவிட்டு வெளியேற முடிவு செய்கிறார். துறவிக் கோலத்தில், தலையை மழித்துக் கொண்டு கோவணத்தை இடையில் கட்டிக் கொண்டு மதுரைவரை சென்று விடுகிறார். ஒட்டப்பிடாரத்தில் உலகநாத பிள்ளை தவித்துப் போகிறார். மதுரையில் வ.உ.சியால் தொடர்ந்து துறவியாக வாழ இயலவில்லை. மதுரையிலிருந்து, தம்முடைய வகுப்புத் தோழருக்குக் கடிதம் மூலம் தான் மதுரையில் இருப்பதை எழுதி அனுப்புகிறார். அவருடைய நண்பன் அந்தக் கடிதத்தை உலகநாதபிள்ளையிடம் கொடுத்து விடுகிறான். அவர் உடனே மதுரைக்குச் சென்று வ.உ.சி.யைக் கண்டுபிடிக்கிறார். தம் மகனை ஆரத்தழுவி அழுகிறார் உலகநாதபிள்ளை. ஒருவாறு சமாதானம் ஆன வ.உ.சி.யும் தம் தந்தையுடன் ஊர் திரும்புகிறார்.

பிறகு சில நாட்களில் தம் தந்தையின் விருப்பத்திற் கிணங்க, ஒட்டப்பிடாரம் தாலுகா அலுவலகத்தில் எழுத்தராகப்

1. சுயசரிதை, ப. 20.
2. சுயசரிதை, ப. 20.

பணியாற்றுகிறார் உலகநாதபிள்ளைக்கு மிகவும் வேண்டியவரான நெல்லையப்பன்[1] என்பவருடைய உதவியால் தான் அப்பணியில் சேர்ந்ததாக வ.உ.சி. தன்னுடைய சுயசரிதையில் குறிக்கிறார் அங்கும் இரண்டு மாதங்களே எழுத்தராகப் பணி புரிந்தார். அந்த வேலையில் வ.உ.சி.க்கு அதிக ஈடுபாடு இல்லை. வ.உ.சி.யின் முன்னோர்கள் வழக்கறிஞர்களாகப் பணி புரிந்தவர்கள். அவருடைய தந்தையாரும் வழக்கறிஞர்தானே!

வ.உ.சி. அவர்கள் தம்முடைய தந்தையிடம் தம் விருப்பத்தைத் தெரிவித்தார். அவருடைய உள்ளத்தில் வழக்கறிஞராக வேண்டும் என்ற அவா மேலோங்கி இருந்தது. அவரைத் திருச்சிக்கு அனுப்பிச் சட்டப்படிப்பு படிப்பதற்கு அவருடைய தந்தையே தூண்டுகோலாக இருந்ததாகத் தன்னுடைய சுயசரிதையில் வ.உ.சி. பின்வருமாறு குறிப்பிடுகிறார்.

> "சிந்தையைத் திருப்பித் திருச்சிக் கேகி
> நடுவினைத் திறக்கும் நன்னிலைக் கல்வியைக்
> கடிதினிற் கல்லெனக் கட்டளை யிட்டனன்."[2]

திருச்சியில் மிகவும் பிரபலமாகியிருந்த கணபதி அய்யர், ஹரிஹர அய்யர் என்ற இரண்டு சட்ட நிபுணர்களிடம் வ.உ.சி.யைச் சட்டத் தேர்வுப் பயிற்சிக்காக உலகநாதபிள்ளை அனுப்பினார். வ.உ.சி. மெட்ரிகுலேசன் படித்து முடித்தவுடன் வக்கீல் தேர்வினை 1894இல் எழுதிவிட்டார். வெற்றியும் பெற்றார். வ.உ.சி. போன்றோரை "இரண்டாம் நிலை வக்கீல்" என்று கூறுவதுண்டு. ஆனால் முதல்நிலை வழக்குரைஞருக்கு உண்டான அனைத்து உரிமைகளும் சலுகைகளும் உண்டு. 1895இல் வழக்குரைஞராகத் தன்னைப் பதிவு செய்து கொண்டார். அப்பொழுது அவருக்கு வயது 23. வ.உ.சி. அவர்களுடைய முன்னோர்களும் வழக்குரைஞர்களாக பணியாற்றியவர்கள் "வக்கீல் ஐயா வீடு" என்று வ.உ.சி. அவர்கள் வீட்டைக் குறிப்பிட்டுப் பேசுவர். வ.உ.சி. அவர்கள் சிவில், கிரிமினல் இரண்டு துறைகளிலும் சிறந்த வழக்கறிஞராக விளங்கினார்.

குறிப்பாக, கிரிமினல் துறையில் மிகுந்த திறமையுடையவராக விளங்கினார். இவருடைய திறமையைக்

---

1. சுயசரிதை, ப. 16.
2. சுயசரிதை, ப. 16.

கண்டு சில வழக்கறிஞர்கள் வ.உ.சி.யைக் கண்டு பொறாமைப் பட்டதும் உண்டு. நல்ல வருமானம் உடையவராக வ.உ.சி. விளங்கினார். ஆனால் பணம் சம்பாதித்தல் ஒன்றையே குறிக்கோளாக வ.உ.சி. எப்பொழுதும் கொண்டதே இல்லை. மாறாக வாய்மை, ஒழுக்கம், பிறர் நலம் பேணுதல் என்பன அவர் கைக்கொண்ட நெறிகள். இவர் எடுத்துக் கொண்ட வழக்குகளில் இவருக்கு எப்போதும் வெற்றிதான்.

எந்த நிலையிலும் தன்னுடைய கட்சிக்காரரைக் கைவிடாத தன்மையுடையவராக வ.உ.சி. விளங்கினார். தன்னிடம் வழக்குக் கொண்டு வருபவர்களிடத்தில், ஏழை, பணக்காரர் என்று வேறுபாடு வ.உ.சி. பாராட்ட மாட்டார். இவருடைய கடமை உணர்ச்சி, நேர்மை உணர்ச்சி ஆகியவற்றைக் கண்டு வெள்ளைக்கார நீதிபதியே இவரைப் பாராட்டுவார். தன்னுடைய சுயசரிதையில், அக்காலத்தில் சில வக்கீல்கள் நடந்து கொண்ட விதத்தைப் பற்றி வெறுப்புடன் எழுதுகிறார். சில வக்கீல்கள் கைக்கூலி கொடுத்துக் கட்சிக்காரரைப் பிடிப்பார்கள். நீதித்துறையிலும் கையூட்டு இருந்ததை வ.உ.சி. வெறுத்துப் பேசுகிறார்.

கட்சிக்காரர்களைக் கண்ணியமற்ற முறையில் நடத்துவது, வழக்குக் கட்டுக்களைக் கருத்தூன்றிப் படிக்காதிருப்பது, சிறு வழக்குகளுக்குப் பெருந்தொகை வாங்குவது போன்ற இழிசெயல்களைப் பிள்ளையவர்கள் வெறுத்தார்கள். "வக்கீலாய் நின்று வழிப்பறியே செய்யும் திக்கிலார்" என்று தம்முடைய சுயசரிதையில் எழுதுவார். நீதிமன்றத்தில் வாதாடுங்கால், தொழிலின் நேர்மையையும், மதியின் கூர்மையையும் காட்டுவார். தம் வாக்கின் வளத்தையும், சட்டத்தின் அடித்தளத்தையும் நீதித் தலைவர்களின் நெஞ்சிற் பதியுமாறு நாட்டுவார். போலி வாதங்களையும் பொய்ச் சான்றுகளையும் வலுவிழந்து போகுமாறு வாதாடுவார். தம் கட்சிக்காரரிடத்தில் நம்பிக்கை ஊட்டுவார். தாம் ஏற்றுக் கொண்ட வழக்குத் தோற்றுப்போய்விடுமென்று தோன்றின் எதிரியை அணுகி அறிவுரை கூறிச் சமரசம் செய்து வைத்துத் தம் கட்சிக்காரரைக் காப்பார். தம் கட்சிக்காரர் ஏழை என்று அறிவாராயின், ஊதியம் பெறாமலேயே அவர் வழக்கை நடத்துவார்.

---

1. தமிழகத் திலகங்கள், ப. 5.

பிள்ளையவர்களின் வன்மை படைத்த வாக்கையும், நேர்மைப் போக்கையும் கண்ட நீதிபதிகள் வ.உ.சி.யைப் பெரிதும் மதித்துப் பாராட்டினர். யார் மீதேனும் காவலர்கள் தவறாக வழக்குக் கொண்டு வந்திருப்பதை வ.உ.சி. அறிந்தால், தாமே வலியச் சென்று குற்றமற்றவர்களின் சார்பில் வாதாடுவார். காவலர்களைச் சாட்சிக் கூண்டில் ஏற்றித் தம்முடைய கேள்விக் கணைகளால் திக்குமுக்காடச் செய்வார்.[1]

தம்முடைய 23ஆவது வயதில் திருச்செந்தூர் சுப்பிரமணியபிள்ளையின் மகளான வள்ளியம்மையைத் திருமணம் செய்து கொண்டார். வள்ளியம்மை நல்ல குணநலன்கள் நிரம்பப் பெற்றவராகத் திகழ்ந்தார். திருமணம் ஆன புதிதில் வ.உ.சி. இராமய்ய தேசிகர் என்பவரைத் தன்னுடைய வீட்டில் தங்க வைத்திருந்தார். இராமய்ய தேசிகர் கண்பார்வையற்றவர்; தாழ்த்தப்பட்ட இனத்தவர். வ.உ.சி.யின் மனைவியான வள்ளியம்மையும் அவருடைய உள்ளத்தைப் புரிந்து கொண்டு நடந்தார். தேசிகருக்குக் கண் பார்வை இல்லாததால் வள்ளியம்மை அவருக்கு உணவு ஊட்டி விடுவதுண்டு. இதைக் காணச் சகிக்காத வ.உ.சி.யின் உறவினர்கள் அவரிடம் இதை மறைமுகமாகச் சாடினார்கள். ஆனால் வ.உ.சி.யும் அவருடைய துணைவியாரும் இது குறித்துக் கவலைப்படவில்லை. வ.உ.சி. தன்னுடைய மனைவியிடம் இது பற்றிப் பேசியபோது "இறைவனுடைய படைப்பில் சாதி வேற்றுமை பாராட்டலாகாது"[2] என்று கூறித் தன் கணவருக்கு உறுதுணையாகச் செயல்பட்டார். ஆனால் இத்தகைய மனைவியோடு வாழ வ.உ.சி.க்குக் கொடுத்து வைக்கவில்லை என்றுதான் சொல்ல வேண்டும். திருமணமாகி 5ஆவது ஆண்டில் அதாவது 1901இல் வள்ளியம்மை அகால மரணம் அடைந்தார். வ.உ.சி. தன்னுடைய சுயசரிதையில் தன் மூத்த மனையாளின் பெருமையினை வானளாவப் புகழ்கிறார். வள்ளியம்மை திருக்குறளை நன்கு கற்றுணர்ந்தவர் என்றும், தனக்கு எல்லா நிலைகளிலும் பெருந்துணையாக இருந்தவர் என்றும், "வள்ளுவர் குறளை வளனுறப் படித்துக் கொள்ளும் விதத்தில் கூறுவள் உரையுடன்"[3] என்று வள்ளியம்மைக்குக் குறள் மீது

---

1. தமிழகத் திலகங்கள், ப. 5.
2. சுயசரிதை, ப. 12.
3. மேலது, ப. 13.

இருந்த ஞானத்தைப் பற்றியும் தம்முடைய சுயசரிதையில் கூறுகிறார். வள்ளியம்மையின் அரிய குணங்களைப் பற்றி அவர் பல இரங்கற் பாடல்களையும் பாடியுள்ளார்.

வள்ளியம்மையின் குடும்பத்தைச் சார்ந்த மீனாட்சி என்னும் பெண்ணை இரண்டாவது மனைவியாக மனமுவந்து ஏற்றுக் கொண்டார். 1901இலிருந்து 1906 வரை வழக்குரைஞராக நல்ல பேரும் புகழும் பெற்றுத் திகழ்ந்தார். அப்போது வைஸ்ராஸ் லார்டு கர்ஸன் வங்கப்பகுதியைக் கிழக்கு வங்கம் (முஸ்லிம் வங்கம்), மேற்கு வங்கம் (இந்துக்கள் வங்கம்) என்றும் பிரித்தார். இதை எதிர்த்து இந்தியாவெங்கும் கிளர்ச்சி வெடித்தது. காங்கிரஸ் கட்சியில் இரு பிரிவினர்கள் இருந்தனர் தீவிரவாதம் மிதவாதம் என்ற இருபிரிவில் பால கங்காதர திலகர் தீவிரவாதப் பிரிவினருக்குத் தலைவராக இருந்து செயல்பட்டார். தென்னாட்டில் குறிப்பாகத் தமிழகத்தில் வ.உ.சி., மகாகவி பாரதி, வ.வே.சு.. ஐயர், சுப்பிரமணிய சிவா போன்றோர் திலகருடைய கொள்கையால் ஈர்க்கப்பட்டவர்கள். வ.உ.சி. தம்முடைய வழக்கறிஞர் தொழிலைக் கைவிட்டுவிட முடிவு செய்தார். நாடெங்கும் 'அன்னிய ஆடை பகிஷ்கார இயக்கம்' தோன்றியது. வெளிநாட்டு ஆடைகளை வீதிகளில் மலைபோல் குவித்தனர். அவற்றைத் தீயிட்டுப் பொசுக்கினர். பம்பாயில் திலகர் தலைமையில் அன்னிய துணி எரிப்புப் போராட்டம் நிகழ்ந்தது. தூத்துக்குடியில் வ.உ.சி. தலைமையில் இப்போராட்டம் கொழுந்துவிட்டு எரிந்தது. அன்னியப் பொருள்களை வாங்குவதில்லை என்றும் உறுதி பூண்டனர்.

1906இல் வ.உ.சி. அவர்கள் சுதேசி ஸ்டீம் நாவிகேஷன் (Swadeshi Steam Navigation) என்ற பெயரில் தூத்துக்குடிக்கும் கொழும்புவிற்கும் இடையே கப்பல் விடுவதென முடிவு செய்தார். பாலவனத்தம் ஜமீன்தார் திரு. பாண்டித்துரைத் தேவர் (துரைசாமித் தேவர்) அவர்கள் தலைவராகவும் மற்றும் 13 பாங்கர்கள் உள்ளிட்ட செல்வந்தர்கள் பலருடைய ஆதரவுடன் வ.உ.சி. அவர்கள் செயலர் பொறுப்பில் இருந்து கப்பல் கம்பெனியைத் தொடங்கினார்கள். 1906 அக்டோபர் 16இல் சுதேசிக் கப்பல் குழு பதிவு செய்யப்பட்டது. தொடக்கத்தில் வாடகைக்குக் கப்பல்களை வாங்கித் தூத்துக்குடிக்கும் கொழும்பு விற்கும் இடையே பயணிக் கப்பல்களை ஓட்டினர். ஆனால் பம்பாய் சென்று திலகர் உதவியுடன் கம்பெனிக்குச் சொந்தமான கப்பல்கள் வாங்க வேண்டும் என்று வ.உ.சி. முடிவு

செய்தார். அதற்கான ஆயத்தங்களுடன் பம்பாய் செல்ல வ.உ.சி. முற்படும்போது ஒரு செய்தி அவரைச் சற்று நிலைதடுமாறச் செய்தது. "அவருடைய மூத்த மகன் உலகநாதன் உடல்நிலை மிகவும் மோசமான நிலையில் இருந்தது; அத்துடன் வ.உ.சி. அவர்களின் துணைவியார் பிரசவத்திற்குத் தாய்வீடு சென்றுள்ளார்" வ.உ.சி.யின் உறவினர்கள் அவரைப் பம்பாய் பயணத்தைச் சற்றுத் தள்ளிப்போடுமாறு அனைவரும் கேட்டுக் கொண்டனர். ஆனால் வ.உ.சி. அவர்கள், "இறைவன் என் குடும்பத்தைக் காப்பான் எனக்கு நாட்டு நலமே முக்கியம். பம்பாய் சென்று கப்பலோடு வருவேன்" என்று சூளுரைத்து விட்டுச் சென்றார். உண்மையில் வ.உ.சி.யின் நம்பிக்கை வீண்போகவில்லை. ஆனால் வ.உ.சி.யைக் கப்பல் வாங்க விடாமல் வெள்ளையர்கள் சூழ்ச்சி செய்தார்கள். எல்லா வற்றையும் வ.உ.சி. தகர்த்து எறிந்துவிட்டு திலகருடைய உதவியால் பிரான்ஸ் நாட்டிலிருந்து இரண்டு கப்பல்களைத் தூத்துக்குடிக்கு அனுப்ப ஏற்பாடுகளைச் செய்துவிட்டு ஊர் திரும்பினார். அந்த இரண்டு கப்பல்களின் பெயர்கள் கலியோ, லாவோ என்பதாகும். சென்னையிலிருந்து வந்து கொண்டிருந்த சுதேசமித்திரன் இதழுக்குத் தம்முடைய கப்பல்கள் குறித்து வ.உ.சி. பாரதிக்கு எழுதி அனுப்புவார். மகாகவி பாரதி அப்பத்திரிகையில் அப்போது பணியாற்றிக் கொண்டிருந்தார். இவற்றையெல்லாம் தொகுத்து பாரதி, இந்தியா பத்திரிகையில் (புதுச்சேரியிலிருந்து) பின்னாளில் பின்வருமாறு எழுதி நினைவு கூர்கிறார்.

> "சென்னை சுதேசமித்திரன் பத்திரிக்கைக்கு
> ஸ்ரீ சிதம்பரம் பிள்ளை அவர்கள் அவ்வப்போது
> எழுதித் தெரிவித்துக் கொண்டிருந்தார்.
> 2-2-1907 தேதியிட்ட கடிதத்தில் வ.உ.சி.
> வாங்கிய இரண்டு ஸ்டீமர்களும், இரண்டு
> ஸ்டீம் லாஞ்சுகளும் பிப்ரவரி மாத இறுதிக்குள், பம்பாய்
> வந்தடையும் என்று எழுதுகிறார்"[1]

சுதேசி ஸ்டீம் நாவிகேஷன்ஸ் (Swadeshi Steam Navigation Company) கம்பெனிக்குப் பலரும் உதவ முன்வந்ததாகத் தெரிகிறது. தேசபக்தர்கள், செல்வந்தர்கள், வர்த்தகர்கள் முதலியவர்களிடம் ஆதரவு பெற்று 1906ஆம் ஆண்டு பங்கு ஒன்றுக்கு 10 ரூபாய் வீதம் 10 லட்சம் ரூபாய் மூலதனத்துடன்

---

1. சுதேசியத்தின் வெற்றி, ப. 122.

சுதேசியக் கப்பல் கம்பெனியை நிறுவினார். இராஜாஜி அவர்களும் கூட அக்கம்பெனிக்குச் சேலத்தில் தம்மால் இயன்ற நிதியை வசூல் செய்து கொடுத்தார் என்று சொல்லப்படுகிறது.[1]

தூத்துக்குடிக்கும் கொழும்புவிற்கும் இடையே சுதேசிக் கப்பல் போக்குவரத்து நன்கு நடைபெற்றது. வெள்ளையர்கள் கப்பல்களில் வருமானம் குறைந்தது. எப்படியாவது சுதேசிக் கப்பல் கம்பெனியை ஓடவிடாமல் தடுக்கப் பல வழிகளை வெள்ளையர்கள் கையாண்டனர். வ.உ.சி.க்கு ஏராளமான பணத்தைக் கொடுத்து அவரைக் கப்பல் குழுவிலிருந்து விலகிக் கொள்ளச் சொன்னார்கள். ஆனால் வ.உ.சி. அதற்கு இம்மியளவும் அசைந்து கொடுக்கவில்லை மாறாக எப்படியாயினும் சுதேசிக் கப்பல் கம்பெனியை வெற்றிகரமாக நடத்துவது என முடிவு செய்தார். தூத்துக்குடியில் வெள்ளையர்களுக்குச் சொந்தமான கோரல் மில்லில் தொழிலாளர்களுக்கு வேண்டிய உரிமைகள் மறுக்கப்பட்டன; சம்பளமும் சரியாகக் கொடுக்கப்படவில்லை. தொழிலாளர்கள் வேலை நிறுத்தத்தில் ஈடுபட முடிவு செய்தனர். வ.உ.சி.யும், சுப்பிரமணிய சிவாவும் தொழிலாளர் போராட்டத்திற்கு ஆதரவு தெரிவித்தனர். 1908 பிப்ரவரி 3 முதல் மார்ச்சு 9 வரை தூத்துக்குடிக் கடற்கரையில் சுப்பிரமணிய சிவாவுடன் தொடர் சொற்பொழிவுகளை நிகழ்த்தி மக்களுக்கு சுதேசி உணர்வும், வீர உணர்வும், விடுதலை உணர்வும் உருவாகுமாறு செய்தனர். அதே ஆண்டில் (1908) நெல்லையில் தேசாபிமானச் சங்கம் என்ற பெயரில் ஓர் அமைப்பை நிறுவினார்.

வெள்ளை அரசாங்கம் தூத்துக்குடியில் எந்த விழாவும் நடத்தக் கூடாது என்று ஆணையிட்டது. அதற்கு முன்பே, வ.உ.சி. தலைமையில் தூத்துக்குடியில் கோரல் மில் தொழிலாளர்களை ஆதரித்து வ.உ.சி. தலைமையில் ஒரு கைத்தடி ஊர்வலம் நடைபெற்றது. வ.உ.சி. தொழிலாளர்களைத் தூண்டிவிடுகிறார் என்று வெள்ளையர் அரசாங்கம் முடிவு செய்தது. அவரே விடுதலை உணர்வைத் தூண்டும் சொற்பொழிவுகளையும் நிகழ்த்துகிறார் என்றும் அவர்கள் (வெள்ளையர்கள்) முடிவு செய்தனர். எப்படியாவது வ.உ.சி.யைச் சிறையில் அடைத்துவிட வேண்டும் என்று திட்டம் தீட்டினர். வ.உ.சி.யிடம் நன்னடத்தை ஜாமீன் எழுதித் தருமாறு

---

1. வீரசுதந்திரம் வேண்டி நின்ற தமிழகத் தியாகிகள், ப. 11.

நீதிமன்றத்தில் கேட்டனர். சுப்பிரமணிய சிவாவிடமும் இது போல் கேட்டனர். பொதுக்கூட்டங்களில் பேசக் கூடாது என்றெல்லாம் புதிய நிபந்தனைகளை வெள்ளை அரசாங்கம் விதித்தது. விபின் சந்திரபால், அரவிந்த கோஷிற்கு எதிராகச் சாட்சி சொல்ல மறுத்ததால், அரசாங்கம் அவரைச் சிறைத் தண்டனைக்குள்ளாக்கியது.

1908ஆம் ஆண்டு மார்ச்சு மாதம் 9ஆம் நாள் விபின் சந்திரபால் விடுதலை அடைந்தார். தேசியவாதிகள் அவர் விடுதலை அடைந்த நாளை நாட்டின் பல பாகங்களிலும் கொண்டாடினர். சிதம்பரம்பிள்ளை தூத்துக்குடியில் பெரிய ஊர்வலம் ஒன்றை நடத்த ஏற்பாடுகள் செய்தார். ஆங்கிலேயர் ஆத்திரங் கொண்டு, ஊர்வலத்திற்கும் பொதுக் கூட்டத்திற்கும் தடை விதித்தனர். சிதம்பரம் பிள்ளை கலெக்டரின் உத்தரவை எதிர்த்தார். சுதேசிக் கப்பல் கம்பெனியர்களும் வெள்ளையரை எதிர்த்து அதிகமாகப் போராட வேண்டாம் என்று கோரிக்கை விடுத்தனர். ஆனால் வ.உ.சி. அதை ஏற்கவில்லை. தூத்துக்குடியில் ஆயிரக்கணக்கான மக்களை ஒன்று திரட்டினார், ஒரு மாபெரும் ஊர்வலத்தையும் பொதுக்கூட்டத்தையும் வெற்றிகரமாக நடத்திக் காட்டினார். இச்செயல் ஆங்கிலேயரைக் கலங்கச் செய்தது. வெள்ளையர்கள் இரவில் தூத்துக்குடி அருகே கப்பலை நங்கூரம் பாய்ச்சி அதில் பல இரவுகளைக் கழித்தனர். அப்போது திருநெல்வேலி மாவட்ட கலெக்டராக வின்சு என்பவர் இருந்தார். அவர் வ.உ.சி.யையும் சுப்பிரமணிய சிவாவினையும் திருநெல்வேலிக்கு வருமாறு அழைத்தார். கலெக்டரின் அழைப்பை அவமதியாமல் சிதம்பரம் பிள்ளையும், சிவாவும் திருநெல்வேலி சென்றனர். 1908 மார்ச்சு மாதம் 12ஆம் தேதி அந்தச் சந்திப்பு நடந்தது. வ.உ.சி. அவர்கள் திருநெல்வேலி மாவட்டத்தைவிட்டு வெளியேற வேண்டும் என்றும், கப்பல் கம்பெனியை விட்டு விலக வேண்டும் என்றும், தேசிய இயக்கத்தில் சேருவதில்லை என்ற உறுதிமொழியினையும் தரவேண்டும் என்றும் பல்வேறு நிபந்தனைகளைக் கலெக்டர் முன்வைத்தார். வ.உ.சி. அவர்கள் இவற்றில் எதற்கும் ஒத்துக் கொள்ள மறுத்தார். முடிவு? வ.உ.சி. கைது செய்யப்பட்டார். உடன் இருந்த சிவாவும் கைது செய்யப்பட்டார்.

இவ்விருவரையும் கைது செய்த வெள்ளை அரசாங்கம் இவர்களைச் சிறையில் அடைத்தது. மறுநாள் இச்செய்தி

காட்டுத் தீ போல் எங்கும் பரவியது. திருநெல்வேலியிலும் தூத்துக்குடியிலும் கண்டனக் கூட்டங்களும், மறியலும் ஊர்வலங்களும் நடந்தன. சில இடங்களில் ஆத்திரம் அளவிற்கு மீறியது. 'வந்தே மாதரம்' கீதம் ஒலிக்க, மக்கள் அடக்கு முறையை எதிர்த்தனர். சில இடங்களில் துப்பாக்கிச் சூடும் நடந்தது. அதில் சிலர் மாண்டனர். ஓரிரண்டு இடங்களில் அரசு அலுவலகங்கள் தீக்கிரையாயின. மகாகவி சுப்பிரமணிய பாரதி நெல்லையில், வ.உ.சி.யையும், சிவாவையும் சிறையில் சந்தித்தார்.[1] வ.உ.சி.யின் நிலை கண்டு அவர் மனம் வருந்தினார். அரசாங்கம் சிதம்பரம் பிள்ளையின் மீதும் சுப்பிரமணியசிவாவின் மீதும் வழக்குத் தொடங்கிற்று. 1908 மார்ச்சு மாதம் 26ஆம் தேதி "அரச நிந்தனை வழக்கில்" வ.உ.சி.மீதும் சுப்பிரமணிய சிவா மீதும் விசாரணை நாடகம் தொடங்கியது.[2] அந்த நாடகம் மூன்று மாதம் தொடர்ந்து நடந்தது இந்த வழக்கு விசாரணையைக் கூடுதல் மாவட்ட நீதிபதி வாலஸ் தொடங்கி வைத்தார். இறுதியில் நீதிபதி பின்ஹே சிதம்பரனாருக்கு இரட்டை ஆயுள் தண்டனையாக நாற்பதாண்டு காலம் விதித்துத் தீர்ப்பளித்தார். வ.உ.சி. மீதான அரச நிந்தனைக் குற்றத்திற்காக 20 ஆண்டுக்கால தீவாந்திர சிட்சையும், சுப்பிரமணிய சிவாவிற்கு உடந்தையாக இருந்த குற்றத்திற்காக இருபது ஆண்டு சிறைவாச தண்டனையுமாகச் சேர்த்து மொத்தம் 40 ஆண்டுகளாகத் தீர்ப்பில் எழுதப்பட்டது. சுப்பிரமணிய சிவாவிற்கும் 10 ஆண்டு தீவாந்திர சிட்சையும் வழங்கப்பட்டது. இதைக் கேட்டுத் தமிழகம் கொதித்தது. அஞ்சாநெஞ்சம் படைத்த வ.உ.சி. சென்னை உயர்நீதி மன்றத்திற்குத் தனது வழக்கை எடுத்துச் சென்று, தனக்குக் கிடைத்த தண்டனையை மொத்தம் ஆறு ஆண்டு சிறைவாசமாக மாற்றச் செய்தார்[3] 4-11-1908 அன்று இது நடந்தது. இந்தியா வெங்கும் சிதம்பரம் பிள்ளைக்கு அளிக்கப்பட்ட தண்டனை குறித்து மக்கள் கொதித்து எழுந்தனர்.

நல்ல பட்டாடைகள் உடுத்திய வ.உ.சி. சிறையில் எப்படி இருந்தார் தெரியுமா? காலில் இரும்பு வளையம் அணிந்த நிலை. எந்த மாதிரி ஆடை அவருக்குக் கொடுக்கப்பட்டது? அவரே தன்னுடைய சுயசரிதையில் விளக்குகிறார்.

---

1. வீ.ஓ.சி. கண்ட பாரதி, ப.20.
2. நான் அறிந்த தமிழ்மணிகள், ப. 125.
3. தமிழ்நாடு தந்த தலைவர்கள், ப. 35.

"கால், கை என்று எதுவும் இல்லாத கால் சட்டை, கைச் சட்டை, சிவப்புக் குல்லா மூன்றையும் அணிந்தால் முண்டமே யாகத் தோன்றுவது அல்லது சொரூபம் தோன்றாது"[1] சிறையில் அடைக்கப்பட்டவுடன் இரண்டு மண் கலயங்களைக் கொடுத்தார்களாம். சாப்பிட ஒரு மண் கலயம். நீர் பருக மற்றொரு கலயம். சாப்பாடு? கேழ்வரகுக் கூழே ஆகாரம். அதிலும் மண் கலந்து இருக்கும். பகலிலும் மாலையிலும் கேழ்வரகுக் களிதான் சிறைக் கைதிகளுக்குக் கொடுக்கப் பட்டது[2]

சிதம்பரம்பிள்ளை முதலில் கோயம்புத்தூர் சிறையில் அடைக்கப்பட்டார். இவருக்கு அளிக்கப்பட்ட தண்டனையைக் கேள்விப்பட்டு இவருடைய தம்பி மீனாட்சி சுந்தரம் பிள்ளை சித்தப்பிரமை பிடித்தவராகி விட்டார். வ.உ.சி. காலம் ஆன பின்பும் சித்தப்பிரமை குணம் ஆகாமலே 1943இல் இவர் காலமானார். வ.உ.சி. கோவைச் சிறையில் இருந்தபொழுது பரலி சு. நெல்லையப்பர் அந்தச் சிறைச்சாலைக்கு அருகிலேயே ஒரு வீட்டில் குடியிருந்தார். அத்துடன் பிள்ளைக்கு வேண்டிய புத்தகங்கள், மற்றும் அவருக்கு வேண்டிய உதவிகளையும் பரலி சு. நெல்லையப்பர் செய்து வந்தார். இந்தச் செய்தியை சுத்தானந்த பாரதியார் தம்முடைய நூலில் குறிப்பிடுவதாக பி.ஸ்ரீ. ஒப்புக் கொள்கிறார்.[3] ஆரம்பத்தில் வ.உ.சி. மிகக் கடுமையான வேலைகளைச் செய்து வந்தார். கல் உடைத்தார்; செக்கிழுத்தார்; ஆட்டுத் தோலைச் சுத்தம் செய்தார். இவற்றையெல்லாம் தம்முடைய சுயசரிதையில் மிக விளக்கமாக எழுதியுள்ளார். ஒருநாள் ராமன் என்ற கைதி வ.உ.சி.யைக் கையெடுத்துக் கும்பிட்டான்[4] அதைக் கவனித்த சிறை அதிகாரி அவனைக் கண்டித்தான். வ.உ.சி.யை மறுபடி வணங்கினால் அவனைச் செருப்பால் அடிப்பதாகக் கூறினான். இது சிறையிலுள்ள மற்ற குற்றவாளிகளின் ஆத்திரத்தைக் கிளப்பியது. பிறிதொரு முறை சிதம்பரம் பிள்ளையின் சிரிப்பு குற்றமாகவும் கருதப்பட்டது இவற்றின் முடிவு? கோயம்புத்தூர் சிறையில் ஒரு பெரிய கலவரம் ஏற்பட்டது. போலீஸார் துப்பாக்கியினால் சுட்டு, அடக்கு முறையைக் கையாண்டனர். சிலருக்குப் பலத்த காயம்

1. வீர சிதம்பரனார், ப. 62.
2. மேலது, ப. 63.
3. நான் அறிந்த தமிழ்மணிகள், ப. 143.
4. தமிழ்நாடு தந்த தலைவர்கள், ப. 37.

ஏற்பட்டது. நீதிமன்றத்தில் வ.உ.சி.க்கு ஆதரவாக கோவை சுப்ரமணிய முதலியார் என்னும் வழக்கறிஞர்[1] வாதாடினார். வ.உ.சி. குற்றமற்றவர் என்று நிரூபிக்கப்பட்டது. இருப்பினும் கோவையிலிருந்து கண்ணனூர் சிறைக்கு வ.உ.சி. மாற்றப்பட்டார்.

வ.உ.சி. சிறையில் இருந்தபொழுது ஆங்கிலேயருடைய சூழ்ச்சியால் சுதேசிக் கப்பல் கம்பெனியில் பிளவு ஏற்பட்டது. கம்பெனியில் பலம் குறைய ஆரம்பித்தது. ஏனென்றால் வ.உ.சி.யைப் போல் கம்பெனியைத் திறம்படவும், தைரிய மனத்துடனும் நடத்துவோர் யாரும் இல்லை. கம்பெனி நிர்வாகம் சரிவர நடைபெறவில்லை. நண்பர்கள் அறிவுறுத்தியதன் பேரில் அந்தக் காலகட்டத்தில் மகாகவி பாரதி புதுச்சேரியில் தங்கியிருந்தார். வ.உ.சி. சிறையில் இருந்த நேரத்தில் "சுதேசிக் கப்பல் தருமநிதி" என்ற பெயரில் 1909ஆம் ஆண்டில் எல்லோரிடமும் (நாட்டுப் பற்றுடையோர்) பணம் வசூலித்து அதைப் பட்டியலிட்டுத் தம் 'இந்தியா' பத்திரிகையில் புதுச் சேரியிலிருந்து வெளியிடுகிறார். முதலில் 'காலியா' என்ற கப்பல் கடனிலிருந்து மீட்கப்பட்டதைப் பெருமையுடன் 2-2-1909 தேதியிட்ட இந்தியா பத்திரிகையில் வெளியிட்டார்.[2] சுதேசிக் கப்பல் தருமநிதிக்குக் காலணா அரையணா என்று நிதி வழங்கியோரும் உண்டு[3] பாரதி இந்த வசூல் நிதியை ஊக்குவிக்கவும், தேசிய உணர்வைத் தட்டி எழுப்பும் வகையிலும் தம்முடைய இந்தியா பத்திரிகையில் பின்வருமாறு எழுதுகிறார்.

"நம்மையெல்லாம் நம்பித்தான் சிதம்பரம் பிள்ளை இந்தக் கம்பெனியை ஆரம்பித்தார். பணமெல்லாம் நம்மிடத்திலேதான் வாங்கினார். அவரும் நம்மைப் போன்ற ஏழையே. ஜமீன்தார்கள், பிரபல ஸாவுகார்கள் இவர்களுடைய முகத்திலேயே அவர் விழிப்பது வழக்கமில்லை. ஆகையால் இதைப்படிக்கும் ஒவ்வொருவரும், எழுதுபவரைப் போலவே, இந்த க்ஷணமே தமது கையில் அகப்பட்டதை - அது அரைக் காசாயிருந்தாலும் சரி - அனுப்பி நமது மாதாவின் மானத்தைப் பாதுகாக்க வேண்டும்"[4] ஆனால் பாரதி போன்ற சுதேசிகளின் முயற்சி முழுமையாக வெற்றி பெறவில்லை. சுதேசிக் கப்பல் கம்பெனி கலைக்கப்பட்டு விட்டது. அத்துடன் இரண்டு கப்பல்

1. தமிழ்நாடு தந்த தலைவர்கள், ப. 37.
2. சுதேசியத்தின் வெற்றி, ப. 162.
3. மேலது, ப. 164.
4. சுதேசியத்தின் வெற்றி, ப. 152.

களும் வெள்ளைக்காரர்களுக்கே விற்கப்பட்டுவிட்டன.[1] இச் செய்தி சிறையிலிருந்த சிதம்பரம்பிள்ளையின் நெஞ்சில் ஈட்டியைப் பாய்ச்சியது போலிருந்தது. மற்றும் கம்பெனி நிர்வாகிகள் சிதம்பரம் பிள்ளையின் அரசியல் போக்கே கம்பெனியின் முறிவுக்குக் காரணம் என்ற பழியையும் அவர் மீது சுமத்தினர். மேலும் வ.உ.சி.யே தங்கள் நஷ்டத்திற்கு ஈடுகட்ட வேண்டும் என்று சட்ட நடவடிக்கை எடுக்கவும் துணிந்தனர்[2] இதைக் கேள்வியுற்ற சிறையில் இருந்த சிதம்பரம் பிள்ளையின் துயரத்திற்கு அளவேயில்லை கம்பெனியின் சட்ட ஆலோசகரா கவும், வ.உ.சி.யின் அந்தரங்க நண்பராகவும் விளங்கிய சேலம் சி. விஜயராகவாச்சாரியாருக்கு அவர் எழுதின கடிதத்தில்,

"கம்பெனி முறிந்ததனால் ஏற்பட்ட நஷ்டத்தைப் பங்குதாரர்கள் ஏற்பதே நியாயம். அவர்கள் மறுத்தால் அக்கடன்களை நானே கொடுத்துவிடுகிறேன்"

என்றார். விஜயராகவாச்சாரியார் ஒரு நாள் சிதம்பரம் பிள்ளையைச் சிறையில் சந்தித்த பொழுது சிதம்பரம்பிள்ளை அவரைக் கட்டித்தழுவிக் குழந்தைபோல் கதறினார்.[3] தென்னாட்டுத் திலகரைக் (வ.உ.சி.) கட்டித் தழுவிக் கொண்ட தென்னாட்டுச் சிங்கமும் (விஜயராகவாச்சாரியார்) கண்ணீர் உகுத்தது என்றென்றும் மறக்க முடியாத சம்பவமாகும். இதுதான் தேசத் தொண்டில் ஏற்பட்ட உறவுமுறை!

சுதேசிக் கப்பல்கள் விற்கப்பட்ட செய்தி பாண்டிச் சேரிக்கும் எட்டியது. தம்முடைய இந்தியா பத்திரிகையில்[4] ஆத்திரத்துடனும், வருத்தத்துடனும் பாரதி பின்வருமாறு எழுதினார்.

> "கேவலம் காசுக்காகக் கப்பல்களை ஆங்கிலே யருக்கு விற்று விட்டார்களே! அதைவிட அக்கப்பல்களை உடைத்து மன்னார்குடாக் கடலில் எறிந்திருக்கலாமே"

என்று எழுதினார்.

---

1. தமிழ்நாடு தந்த தலைவர்கள், ப. 36.
2. மேலது, ப. 36.
3. தமிழ்நாடு தந்த தலைவர்கள், ப. 36.
4. வீரசுதந்திரம் வேண்டி .......... ப. 17.

1908இல் சிறை புகுந்த வ.உ.சி. தொடக்கத்தில் மிகவும் ஈவிரக்கமற்ற முறையில் நடத்தப்பெற்றார். சென்னை உயர்நீதி மன்ற ஆணையின்படி அவருக்குச் சில சலுகைகள் அளிக்கப் பட்டன. அவர் விருப்பப்படி பணிகளைச் செய்யவும், ஓய்வு எடுக்கவும் வாய்ப்புகள் கிடைத்தன. அதனால் இலக்கியப் பணியில் தம்முடைய கவனத்தைச் செலுத்தினார். கண்ணனூர் சிறையில் உடனிருந்த கைதிகளின் வேண்டுகோளுக்கு இணங்க 'மெய்யறிவு', 'மெய்யறம்' ஆகிய செய்யுள் நூல்களை எழுதினார். ஜேம்ஸ் ஆலன் என்பார் ஆங்கிலத்தில் எழுதிய தத்துவ நூல்களைத் தமிழில் 'வலிமைக்கு மார்க்கம்', 'அகமே புறம்', 'மனம் போல வாழ்வு' எனும் தலைப்புகளில் வெளிக் கொணர்ந்தார். திருக்குறள் அறத்துப்பாலை ஆங்கிலத்தில் மொழிபெயர்த்தார். சாந்திக்கு மார்க்கம், வள்ளியம்மை சரித்திரம் என்ற நூல்களை எழுதினார். திருக்குறள் மணக்குடவர் உரையினைத் திருத்தமான பதிப்பாக வெளியிட விரும்பினார்.

1912இல் வெள்ளை அரசின் கருணைச் சட்டத்தால் வ.உ.சி. டிசம்பரில் வெளிவந்தார். 1912இலிருந்து சென்னையில் வாழத் தொடங்கினார். சிறையிலிருந்து வ.உ.சி. வெளிவரும் போது, சுப்பிரமணிய சிவா மட்டும், வெளியே நின்று கொண்டிருந்தார். அதுவும் சிவாவுக்கு உடல் நலம் குன்றி நோய் பிடித்துவிட்டது. வ.உ.சி.யின் தேசிய உணர்வையும், தியாகத் தையும் அன்றைய தமிழ்நாட்டு மக்கள் மறந்துவிட்டனர். சென்னைக்கு வருவதற்குமுன் முதலில் கோவைக்குத் தன் குடும்பத்தாருடன் சென்றார். கோவை சி.கே. சுப்பிரமணிய முதலியாருக்கு நன்றி தெரிவித்தார்[1]

பிறகு கோயம்புத்தூருக்கு அண்மையிலுள்ள திருப்போரூர்த்தலத்தில்[2] சிலகாலம் தங்கியிருந்தார் அப்பொழுது ஒரு வங்கியில் அலுவலராகவும் பணி புரிந்தார் அதன்பின்பு நீண்ட காலம் சென்னையில் தங்கி இருந்தார். சென்னையில் மயிலை, சிந்தாதரிப்பேட்டை, பெரம்பூர் போன்ற பகுதிகளில் வாழ்ந்தார். அரிசி, நெய், பருப்பு முதலியவற்றை விற்று வாழ்க்கை நடத்தினார். மளிகைக் கடை வியாபாரியாக வ.உ.சி. தம்முடைய வாழ்க்கையை மிகுந்த சிரமத்துடன் நடத்தி வந்தார். வ.உ.சி. சென்னையில் இருந்த காலத்தில் மகாகவி புதுச்சேரியில்

1. வ.உ.சி. சுயசரிதை, ப. 155.
2. மேலது, ப. 56.

வாழ்ந்தார். 1908இலிருந்து 1918 வரை பாரதியார் புதுச்சேரியில் தங்கினார். வ.உ.சி. ஒருமுறை புதுச்சேரி சென்று, பாரதியைச் சந்தித்து நலம் விசாரித்தார். அங்குச் சில நாட்கள் தங்கி இருந்தார்.

1915இல் மார்ச்சு 6ஆம்தேதி பூனாவுக்குச் சென்று திலகரைச் சந்திக்கிறார். திலகர்தான் அவரை அங்கு வருமாறு அழைக்கிறார். அங்கேயே சில நாட்கள் தங்கினார். திலகருடன் முதல் உலகப் போர் பற்றி விவாதிக்கிறார். ஜெர்மனி உதவியுடன் இந்தியாவில் புரட்சி நடத்துவது பற்றியெல்லாம் விவாதிக்கிறார். ஆனால் எதுவும் நடைமுறைக்கு ஒத்து வந்ததாகத் தெரிய வில்லை. சென்னையில் இருந்தவரை (1919 வரை) அவ்வப்போது சுதேசமித்திரன் அலுவலகத்தில் உதவி ஆசிரியரான பாரதியைச் சென்று சந்திப்பார். 1912இலிருந்து 1919 வரை சென்னையிலேயே வ.உ.சி. இருந்தார். அப்பொழுதுதான் திரு.வி.க., திருமணம் செல்வக் கேசவராய முதலியார் ஆகியோர் நட்பைப் பெறுகிறார். புத்தக வெளியீட்டிலும் நாட்டம் செலுத்துகிறார். சென்னையில் அவர் 'மெய்யறம்', இன்னிலை, பாடல் திரட்டு, மெய்யறிவு, மனம் போல் வாழ்வு ஆகிய நூல்களையும் திருக்குறள் மணக்குடவர் உரையின் திருந்திய பதிப்பினையும் வெளியிடுகிறார், தொழிற்சங்கவாதியாகவும் வ.உ.சி. திகழ்ந்தார். பெரம்பூரில் அஞ்சல்துறை ஊழியர் சங்கத்தைத் தோற்றுவித்தார். 1917-18 வாக்கில் சபர்மதி ஆசிரமத்தில் காந்தியடிகளைச் சந்திக்கிறார். தென்னாப்பிரிக்கத் தமிழர் தில்லையாடி வேதியப்பிள்ளை இவருக்குக் கொடுத்தனுப்பிய ரூ. 5000த்தை மகாத்மாவிடம் கேட்டுப் பெற்றார். தில்லையாடி வேதியப்பிள்ளையின் நினைவாகத் தனக்குப் பிறந்த பெண்ணிற்கு வேதவல்லி என்று வ.உ.சி. பெயரிட்டார். 1918இல் சென்னையில் நடைபெற்ற கூட்டத்தில் திலகரின் பேச்சைத் தமிழில் மொழிபெயர்த்தார். அவ்வப்போது சுதேசமித்திரனுக்குக் கட்டுரை எழுதி அனுப்புவார். 1919இல் "ரௌலட் சட்ட" எதிர்ப்புக் கூட்டத்தில் கலந்து கொள்ள காந்திஜி சென்னை வந்தார். அண்ணலின் தலைமையில் வ.உ.சி. அவர்கள் எழுச்சிமிகு சொற்பொழி வாற்றினார். காந்தியின் தலைமையில் வ.உ.சி. பேசினார் என்றாலும் அவரைப் பொறுத்தவரை திலகரே வழிகாட்டியாக இருந்தார். பம்பாயில் திலகரைச் சந்தித்துப் பேசுகிறார். வ.உ.சி. வறுமையில் இருப்பதைத் திலகர் நன்கு அறிவார். அதனால் வ.உ.சி.க்கு அவ்வப்போது திலகர் பண உதவி செய்வார்.

ஏழு ஆண்டுகள் சென்னையில் வ.உ.சி. இருந்தார். 1918இல் புதுச்சேரியை விட்டு வெளியேறிய பாரதி 1919 வாக்கில் சென்னைக்கு மறுபடியும் வந்து சேர்ந்தார். சுதேசமித்திரன் பத்திரிகையிலேயே வேலைக்குச் சேர்ந்தார். வ.உ.சி. பெரம்பூரில் குடியிருக்கிறார். ஒருநாள் இரவு 10 மணிக்கு மேல் இருக்கும். வ.உ.சி. கடை வைத்து வியாபாரத்தில் ஈடுபட்டிருக்கிறார். சிந்தாதிரிப்பேட்டையில் கடை. இரவில் கடையை மூடிவிட்டு வீட்டிற்கு வர இரவு பத்துக்கு மேல் ஆகிவிட்டது. அவர் வந்த பொழுது வீட்டு வாசல் திண்ணைப் பகுதியில் இரண்டு பேர் படுத்து உறங்கிக் கொண்டிருந்தனர். வ.உ.சி. வீட்டிற்குள் வந்தவுடன் கைகால்களைச் சுத்தம் செய்து கொண்டு சாப்பிட உட்கார்ந்தார். அவருடைய மனைவி மீனாட்சி அவருக்கு உணவு பரிமாறினார். "வாசல் திண்ணையில் படுத்து உறங்குவது யார்?" என்று சாப்பிட்டுக் கொண்டே கேட்டார். அதற்கு மீனாட்சி, "உங்கள் மாமா பாரதியும் அவருடைய நண்பரும் வந்தார்கள். மிகவும் பசியுடன் இருந்ததால் சாப்பிட்டுவிட்டு தூங்கப் போய்விட்டார்கள்" என்று சொன்னார். வ.உ.சி. சாப்பிட்டு முடித்துவிட்டு, திண்ணையில் படுத்து உறங்கி கொண்டிருந்த பாரதியை எழுப்பினார். பாரதி எழுந்து வ.உ.சி.யிடம் பேசினார். அவருடன் வந்திருப்பது அவருடைய நண்பர் என்றும், அவர் ஒரு சாமியார் என்றும் கூறினார். சிறிதுநேரம் பேசிக் கொண்டிருந்துவிட்டு வ.உ.சி.யும் உறங்கச் சென்றுவிட்டார்.

மறுநாள் காலை வ.உ.சி. தன் மாமாவிடம் (பாரதியிடம்) அன்பொழுகப் பேசினார். பாரதி வ.உ.சி.யிடம் ஒரு வேண்டுகோள் விடுத்தார். அவருடன் வந்துள்ள சாமியாரை நன்கு குளிப்பாட்டி புதிய வேட்டி துண்டினை அவருக்குக் கொடுக்க வேண்டும் என்று வற்புறுத்தினார். அதற்கு வ.உ.சி. உடன்பட்டார். உடனே வெந்நீர் வழங்கச் செய்து அந்தச் சாமியாரைக் குளிக்கச் செய்தார். பிறகு புதிய வேட்டி துண்டினை அவருக்கு அளித்தார். பிறகு அவர்களுக்கு உணவு பரிமாறப்பட்டது. அன்று ஞாயிற்றுக்கிழமையாதலால் வ.உ.சி. கடைக்குச் செல்லவில்லை. அவரும் மதிய உணவு சாப்பிட்டவுடன் சற்றுக் கண்ணயர்ந்தார்.

திடீரென்று பெரிய சத்தம். பாரதியும் அந்தச் சாமியாரும் உரக்கச் சிரித்துப் பேசிக் கொண்டிருந்தனர். வ.உ.சி. விழித்துக் கொண்டார். அப்பொழுதுதான் அவருக்கு ஓர் உண்மை புரிந்தது. சாமியார் கையில் ஒரு டப்பா இருந்தது. அதிலிருந்து

ஓர் எலுமிச்சம் பழ அளவுக்கு பாரதியும் சாமியாரும் வாயில் போட்டுக் கொண்டனர். வ.உ.சி.க்குப் புரிந்துவிட்டது. போதை தரக்கூடிய மருந்தைத்தான் பாரதியும் சாமியாரும் சாப்பிட்டனர். வ.உ.சி. பாரதியைச் சற்று வியப்புடனும் வெறுப்புடனும் பார்த்தார். அதற்குப் பாரதி என்ன கூறினார் தெரியுமா? வ.உ.சி. இருப்பதால் மிகக் குறைந்த அளவில் "மருந்தை" சாப்பிட்டதாகக் கூறினார் பாரதி. பாண்டிச்சேரியில் பாரதிக்கு இந்தப் பழக்கம் ஏற்பட்டிருக்கலாம் என்று வ.உ.சி. உணர்ந்து கொண்டார். 'லாகிரி வஸ்து'வைச் சாப்பிட ஆரம்பித்ததிலிருந்து பாரதியின் போக்கில் ஏதோ மாற்றம் ஏற்பட்டது. இதை வ.உ.சி. நன்கு புரிந்து கொண்டார்.[1]

1915இல் வ.உ.சி. தாம் சிறையில் எழுதிய பாடல் திரட்டு என்னும் நூலை அச்சில் கொணர்ந்தார். 1917இல் 'மெய்யறம்' என்ற நூலை வெளியிட்டார். இன்னிலை என்ற பதினெண் கீழ்க் கணக்கு நூலுக்கு விரிவான உரை எழுதி வெளியிட்டார். திருக் குறளை மணக்குடவர் உரையுடன் பதிப்பித்தார். பிறகு சென்னை யிலிருந்து கோயமுத்தூருக்குச் செல்கிறார். அங்கு 1919-1922 வரை இருந்தார். 1912இலிருந்து தீவிர அரசியலில் அவர் ஈடுபடவில்லை. காரணம் காந்தியின் அஹிம்சை, ஒத்துழையாமை இயக்கம் ஆகியவற்றில் வ.உ.சி.க்கு நம்பிக்கை இல்லாமல் இருந்தது. காந்திஜியின் கொள்கைகளால் நாடு விடுதலை ஆவதற்கு வெகு காலம் ஆகலாம் என்று எண்ணினார். அவர் திலகர் வழிவந்தவர் ஆயிற்றே! அதற்காக அவர் காங்கிரஸ் எனும் மாபெரும் இயக்கத்தையோ அல்லது காந்தியையோ வெறுக்கவில்லை. அவருடைய மனத்திற்கு ஒத்துப்போகாத விஷயத்தில் அவர் அதிக ஈடுபாடு காட்டமாட்டார்.

வ.உ.சி. அவர்கள் கோவையில் வாழ்ந்தாலும் சென்னைக்கு வந்து செல்வதுண்டு. 1919 மார்ச்சு மாதம் காந்திஜி தென்னாட்டு விஜயத்தின் போது சென்னைக்கு வருகிறார். சென்னையில் காந்தி தலைமையில் "ரௌலட் சட்ட" எதிர்ப்புக் கூட்டம் நடைபெறுவதாகத் திட்டம். சென்னை வந்த காந்திஜிக்குக் காங்கிரஸ் கட்சியின் சார்பில் ஒரு வரவேற்புக் கூட்டம் நடந்தது. அக்கூட்டத்தில் காந்திஜிக்கு வரவேற்புரை நல்கியவர் வ.உ.சி. நாடு விடுதலை ஆக வேண்டும் என்ற ஒரே குறிக்கோளினைக் கொண்டவர் வ.உ.சி. விடுதலைப் போராட்டம்

---

1. வி.ஓ.சி. கண்ட பாரதி, ப. 20.

யார் தலைமையில் நடக்கிறது என்று அவர் கவலைப்பட்டது இல்லை. அதே ஆண்டில் (1919) டிசம்பர் மாதம் திலகர் சென்னைக்கு வந்தார். அவரைச் சந்திப்பதற்காக வ.உ.சி. அவர்கள் கோவையிலிருந்து ஓடோடி வருகிறார். திலகர் மீது அத்துணைப் பிடிப்பு வ.உ.சி.க்கு அசைக்க முடியாத அளவில் இருந்தது. வ.உ.சி. பாரதி, வ.வே.சு. ஐயர், சுப்ரமணிய சிவா போன்றோருக்கு அரசியல் குரு திலகர் தானே!

1920இல் மகாத்மா காந்தி கோயம்புத்தூருக்கு வந்தார். வ.உ.சி.யின் வீட்டிற்கு காந்திஜி வந்து தங்கினார். வ.உ.சி. போன்றோரைத் தம்முடைய இயக்கத்தில் ஈடுபடச் செய்ய வேண்டும் என்பது காந்திஜியின் அவாவாக இருந்திருக்கலாம். அன்று நடந்த கூட்டத்தில் காந்தியின் சொற்பொழிவைத் தமிழில் மொழிபெயர்த்தார் வ.உ.சி. அதே ஆண்டில் (1920) கல்கத்தாவில் கூடிய காங்கிரஸ் மாநாட்டிற்கு வ.உ.சி. சென்றார். அந்த மாநாட்டோடு காங்கிரஸ் கட்சிக்கு வ.உ.சி. "முழுக்கு" போட்டுவிட முடிவு செய்தார். இனி அரசியலில் ஈடுபட வேண்டாம் என்று தீர்மானித்தார். அதற்காகக் காங்கிரஸ் கட்சியின் மீது வெறுப்புக் கொள்ளவில்லை என்றுதான் சொல்ல வேண்டும்"

சிதம்பரம் பிள்ளையைச் சுதந்திர இந்தியாவின் மணிமாலையிலே ஒரு முழுமணியாக மதிப்பதில் தவறு ஒன்றும் இல்லை. காந்தியடிகளின் சாத்வீகக் கொள்கையை வெறுத்தவர் தான். அக்கொள்கையை நேதாஜி சுபாஷ்சந்திரபோசும் எதிர்த்தவர் தானே? எதிர்த்தவர்களுக்குள் முதன்மையானவர் நேதாஜி. அகிம்சைப் போராட்டத்தைக் கல்கத்தாவில் நடந்த காங்கிரசில் ஒரு முக்கியமான தீர்மானமாக காந்தியடிகள் கொண்டுவர முடிவு செய்ததும், அதை எப்படியும் தகர்த்துவிட வேண்டுமென்றே கல்கத்தாவுக்குச் சென்றார் சிதம்பரம் பிள்ளை. ஆகவே நேதாஜிக்கு முன்பே காந்தியடிகளின் கொள்கையைத் தீவிரமாக எதிர்த்தவர் சிதம்பரம்பிள்ளை. தம்முடைய நோக்கம் நிறைவேறவில்லை தேசியப் பேரவை காந்தியடிகளைப் பின்பற்றியே போராட்டம் நடத்தும் என்று தெரிந்ததும், அந்தத் தேசிய கொள்கையைக் கொள்கை அளவில் சிதம்பரம்பிள்ளை ஏற்றுக் கொள்ள மறுத்துவிட்டார்.[1]

---

1. நான் அறிந்த தமிழ்மணிகள், ப. 184.

திலகர் பெருமான் பர்மாவைச் சேர்ந்த மாண்டலே சிறையிலிருந்து விடுவிக்கப்பட்ட பின்பும் புரட்சித் தீயை அணையாது வளர்க்க விரும்பினார். வ.உ.சி.யோ 1912இல் விடுதலையானபோது அத்தகைய மனநிலையில் இல்லை என்றே சொல்ல வேண்டும். இவருடைய அகக்கண்ணுக்கு விடுதலைக் குறிக்கோள் எட்டாத தூரத்திற்கு நகர்ந்து விட்டதாகத் தோன்றியது. இந்த நிலையில் டாக்டர் அன்னிபெசன்ட் அரசியல் மேடையில் தோன்றினார். 1916 ஆகஸ்டு முதல் தேதியில் அன்னிபெசன்ட் தீவிரவாதிகளையும், மிதவாதிகளையும் ஏகாதிபத்தியத்திற்கு விரோதமாக இணைத்துக் கொள்ள முயன்று ஓரளவு வெற்றியும் பெற்றார். திலகரும் அன்னி பெசண்டுடன் இணைந்து போனார். வ.உ.சி. ஒதுங்கியே நின்றார்.[1] 1920 செப்டம்பரில் நடைபெற்ற கல்கத்தா காங்கிரஸ், காந்தியின் சத்தியாக்கிரக வழியை ஒப்புக் கொண்டது. அதனால் வ.உ.சி. காங்கிரசுக்கே ஒரு முழுக்குப் போட்டுவிட்டுத் தமிழ்ப் பணிகளில் தம்மை முழுக்க ஈடுபடுத்திக் கொண்டார். அதற்குள் திலகரும் காலமாகிவிட்டார். சிதம்பரம் பிள்ளை, திருக்குறளிலும் தொல்காப்பியத்திலிலும் ஈடுபடலானார். 1919இலிருந்து 1922 வரை வ.உ.சி. அவர்கள் கோயம்புத்தூரில் வாழ்க்கை நடத்தினார்.

சென்னை உயர்நீதிமன்ற நீதிபதி வாலஸ் (Wallace) அவர்களின் உதவியால் வ.உ.சி. அவர்கள் 1922இல் வழக்கறிஞர் தொழிலை மீண்டும் ஆற்றுவதற்குரிய உரிமத்தைப் பெற்றார். அக்கால கட்டத்தில் வ.உ.சி. நீதிக்கட்சியினரின் நிழலில் இருந்ததாகச் சொல்லப்படுவது உண்டு.[2] இருப்பினும் தேசிய உணர்ச்சி வற்றி வறண்டு சூனியமாகி விட்டது என்று சொல்ல முடியாது. வ.உ.சி. கோவையில் இருந்த காலகட்டத்தில்தான், மகாகவி சென்னையில் காலமானார்.

1922இலிருந்து கோவில்பட்டிக்கு வ.உ.சி. குடிபெயர்ந்தார். அங்குள்ள நீதிமன்றத்தில் வழக்குரைஞராகப் பணியாற்ற ஆரம்பித்தார். இந்தக் காலகட்டத்தில் நீதக்கட்சியின்பால் வ.உ.சி. பெரிதும் ஈர்க்கப்பட்டதாகத் தெரிகிறது. 1926இல் பெரியார் ஈ.வே.ரா. அவர்கள் மதுரையில் நடத்திய பார்ப்பனர் அல்லாதார் மாநாட்டில் வ.உ.சி. பங்கேற்றார். சமுதாயத்தில் இருந்த ஏற்றத் தாழ்வுகளை எண்ணி அவர் வருத்தப்பட்டிருக்கக்

---

1. நான் அறிந்த தமிழ்மணிகள், ப. 189.
2. மேலது, ப. 191.

கூடும். அதனால் பெரியாருடைய கொள்கைகளில் அவருக்கு நம்பிக்கை உண்டாகியிருக்கலாம். பாவேந்தர் பாரதிதாசன் பெரியாரின் கொள்கைகளில் ஈடுபாடு கொண்ட காலகட்டத்தில் "தான் ஒரு நாத்திகன்' என்று எழுதிக் கையொப்பமிட்டு உலகிற்கு அதை வெளிப்படையாக அறிவித்துக் கொண்டார். ஆனால் வ.உ.சி. அவர்கள் அப்படி வெளிப்படையாகத் தன்னை "ஒரு நாத்திகன்" என்று அறிவித்துக் கொள்ளவில்லை. இருப்பினும் அவருடைய உள்மனத்தில் பிற்படுத்தப்பட்டோருக்கு மற்றும் நலிந்தோருக்கு இட ஒதுக்கீடு பற்றிய (பெரியார் கொள்கைகள்) எண்ணங்கள் வேரூன்றி விட்டன என்று சொல்லலாம். எவ்வாறெனில் சேலத்தில் 1927இல் காங்கிரஸ் மாநாடு நடக்கிறது. சேலம் விஜயராகவாச்சாரியார் வ.உ.சி.யை அம்மாநாட்டுக்கு வருமாறு அழைப்பு விடுக்கிறார். சுதேசிக்கப்பல் தொடங்கிய காலத்தில் சேலம் விஜயராகவாச்சாரியார் சட்ட ஆலோசகராக மட்டுமின்றி, பல வழிகளில் வ.உ.சி.க்கு உறுதுணையாகவும் இருந்தவர். அந்த நன்றி விசுவாசம் வ.உ.சி.யின் உள்ளத்தில் என்றென்றும் மறையாமல் இருந்திருக்க வேண்டும். அவருடைய அழைப்பை ஏற்றுச் சேலத்தில் நடந்த காங்கிரஸ் கூட்டத்தில் வ.உ.சி. தலைமை உரை[1] ஆற்றினார் அஃது உண்மையில் 1927ஆம் ஆண்டில் நிலவிய தமிழகத்தை நம் கண்முன் கொண்டுவந்து காட்டுகிறது. 1927ஆம் ஆண்டிற்குப் பிறகு நேரிடையாக அவர் எந்தக் காங்கிரஸ் மாநாட்டிற்கும் செல்லவில்லை. முழுமையாக அரசியல் துறவறம் பூண்டார் என்றே சொல்லாம். 1928இல் இளம்பூரணர் உரையுடன் கூடிய தொல்காப்பியத்தைப் (எழுத்து, பொருள்) பதிப்பித்து வெளியிட்டார்.

1922இலிருந்து 1932 வரை கோவில்பட்டியில் வ.உ.சி. வாழ்ந்தார். 1932இல் கோவில்பட்டியிலிருந்து தூத்துக்குடிக்கு உதவிக் கலெக்டர் தலைமையிடம் மாறியது. வ.உ.சி.யும் தம் வாழ்வைத் தூத்துக்குடியில் தொடர்ந்தார்.[2] வழக்கறிஞராகப் பணியாற்றியதோடு, இலக்கியத்திலும் தம் ஈடுபாட்டை அதிகப்படுத்திக் கொண்டார். 1932இல் வ.உ.சி.க்கு அறுபது வயது. அறுபதாம் பிறந்தநாளை வெகு விமரிசையாகக் கொண்டாடி "பண முடிப்பும்" அளிக்க வேண்டும் என்று சிலர் விரும்பினர். ஆனால் போதிய அளவு பொருள் சேரவில்லை[3] என்ன

1. காண்க. வ.உ.சி. நூல்திரட்டு.
2. வ.உ.சி. சுயசரிதை, ப. 159.
3. வீரசிதம்பரனார், ப. 85.

செய்வது? "புதிய வெள்ளம் வந்து பழைய வெள்ளத்தைக் கொண்டு போயிற்று". வ.உ.சி. போன்றோரின் தீவிர விடுதலை இயக்க உணர்வை காந்தியடிகள் இயக்கம் (ஒத்துழையாமை, அஹிம்ஸை) விழுங்கி விட்டது.

1933ஆம் ஆண்டு காந்தியடிகள் தமிழகம் வந்தார். காரைக்குடியில் காந்தியை வரவேற்க நடந்த ஏற்பாட்டுக் கூட்டத்திற்கு வ.உ.சி. தலைமை தாங்கினார். காந்தியடிகளின் அரிசனக் கொள்கையை முழுமையாக வ.உ.சி. ஆதரித்துப் பேசினார். 1934ஆம் ஆண்டில் திருச்செந்தூரில் முருகப் பெருமான் முன்பு திருக்குறள் அறத்துப்பாலுக்கு இவர் எழுதிய உரை, புலவர்கள் முன்னிலையில் வெளியிடப்பெற்றது. அதே ஆண்டில் "சாந்திக்கு மார்க்கம்" என்ற மொழிபெயர்ப்பு நூலும் வெளியானது.

1935இலிருந்து வ.உ.சி.யின் உடல்நலம் குன்றியது. இருப்பினும் சிவஞான போதத்திற்கு அவர் எழுதிய உரை வெளியிடப் பெற்றது.

தூத்துக்குடியில் வ.உ.சி. படுத்த படுக்கையாய் இருந்தார். அப்போது காங்கிரஸ் கட்சியின் தலைவர் பொறுப்பில் இருந்த பாபு ராஜேந்திர பிரசாத் 1935இல் தூத்துக்குடி வந்தார். சிதம்பரனாரின் இல்லத்துக்குச் சென்று நலம் விசாரித்து ஆறுதல் கூறினார்.

'சிதம்பரனாரின் சேவையே தமக்கு ஓர் உந்து சக்தியாக இருந்தது' என்று மனம் திறந்து பாராட்டினார். "தூத்துக்குடி மண்ணை மிதித்தது தமக்குக் கிடைத்த புண்ணியம்"[1] என்று மகிழ்ந்தார் அந்த மாபெரும் தலைவர்.

1936 நவம்பர் மாதம். வ.உ.சி.யின் உடல்நலம் மிகவும் குன்றியது. அவ்வாண்டின் தொடக்கத்தில் வ.உ.சி. தம்முடைய இறுதி முடிவு தூத்துக்குடி காங்கிரஸ் அலுவலகத்தில்தான் ஏற்பட வேண்டும் என்று விரும்பினார். சில மாதங்கள் தூத்துக்குடி காங்கிரஸ் அலுவலகத்திலேயே அவருடைய குடும்பத்தார் அவரைத் தங்க வைத்தனர். ஆனால் 1936 நவம்பர் மாதவாக்கில் அவரைத் தூத்துக்குடியில் உள்ள அவருடைய இல்லத்திற்கே அழைத்து வந்துவிட்டனர். 1936ஆம் ஆண்டு நவம்பர் 18 வ.உ.சி. அமரர் ஆனார். அவருடைய இருபெரும்

---

3. வீரத்தியாகி வ.உ.சி. ப. 81.

கனவுகள் அவருடைய ஆயுட்காலத்தில் நிறைவு எய்தவில்லை. நாடு சுதந்திரம் அடையவில்லையே என்பது ஒன்று. திருக்குறளுக்குத் தம்முடைய உரை முழுவதும் அச்சிட முடியவில்லையே என்பது மற்றொன்று. இவ்விரண்டும் வ.உ.சி.யின் காலத்திற்குப் பின்பே நிறைவேறின![1]

"தேசநலம் தியாகமின்றி வருமோ? என்று திலகர் பெருமான் செய்த பெருங்கிளர்ச்சியின் அங்கமாகி, நாட்டுக்கு விடுதலைக்காக ஓசைப்படாது உழைத்த பல பெரியோர் தம்முள் உண்மைமிக்க சிதம்பரமும் ஒருவராவார்"[2] என்று நாமக்கல் கவிஞர் வே. இராமலிங்கம்பிள்ளை வ.உ.சி.யைப் பாராட்டுவார். 'சிதம்பரமும் ஒருவராவார் என்று நவில்வதைவிட நாம் "சிதம்பரமே சிறந்தோர் ஆவார்" என்று கூறி மகிழ்வோம்.

இந்திய விடுதலைக்குப் பின் பாரதநாடு தன்னுடைய முதல் கப்பலான 'ஜலப்பிரபா' என்ற கப்பலைக் கடலில் மிதக்க விட்டது. அப்போது இந்தியாவின் துணைப்பிரதமராக இருந்த இரும்பு மனிதர் சர்தார் வல்லபாய் பட்டேல் வ.உ.சிதம்பரம் பிள்ளையின் தியாகத்தை நினைவுகூர்ந்து பாராட்டினார்.

தூத்துக்குடிக்கும் இலங்கைக்கும் இடையே ஒரு கப்பலை வணிகப் பெருமக்கள் கழகம் இயக்கத் தொடங்கியது. 'வி.ஓ. சிதம்பரம்' என்ற பெயரில் அக்கப்பலைச் சக்கரவர்த்தி ராஜகோபலாச்சாரியார் தொடங்கி வைத்து வ.உ.சிதம்பரம் பிள்ளையின் தியாக உணர்வை நினைவு கூர்ந்தார்.

செல்வமும் செல்வாக்குமாக இருந்த காலத்திலும் *(1898-1907)*, வெஞ்சிறையில் வாடிய காலத்திலும் *(1908-1912)*, எல்லாம் இழந்து வறுமையில் வாடிய காலத்திலும் *(1913-1936)* தமிழை மறவாத இலக்கியத் தொண்டைத் தம் வாழ்வின் ஓர் அங்கமாகவே கருதி வாழ்ந்த தன்னலமற்ற தேசபக்தரான கப்பலோட்டிய தமிழரான வ.உ.சிதம்பரம் பிள்ளையின் புகழ் வாழ்க!

---

1. *சுயசரிதை, ப. 160.*
2. *வீரசிதம்பரனார், ப. 85.*

# இளமையும் துடுக்குத்தனமும்

வ.உ.சி. அவர்கள் மிகவும் துடுக்குத்தனமாக விளங்கினார். அவருடைய தோற்றம் எப்படி இருந்தது தெரியுமா? நல்ல உடற்பயிற்சி செய்யக்கூடிய பழக்கம் இருந்ததால் உருண்டு திரண்ட மேனியினைப் பெற்றிருந்தார். ஆனால் சற்றுக் குட்டையான வடிவம், உருண்டையான முகம்; திரண்ட புயங்கள்; நிமிர்ந்த நேரான பார்வை. அவருடைய முகத்தில் இருந்த மீசையோ பணிவுடன் துணிவைப் புலப்படுத்துவதுபோல் கம்பீரத்துடன் இருக்கும். கறுப்பு மேனியழகு. மேல் அங்கியுடன் அங்கவஸ்திரம் அணிந்திருப்பார். தலைப்பாகையும் அணிந்திருப்பாராம்.[1]

இளவயதில் மிகுந்த துடிப்புடன் பல்வேறு வகை விளையாட்டுக்களில் வ.உ.சி. ஆர்வம் காட்டுவார். அவற்றுள் சில முரட்டுத்தனமாகவும் இருக்கும்.

சுவர்மேல் நடத்தல், தொன்மரம் ஏறுதல்,
கவன்கொடுங் கைகொடுங் கல்லெறி பழகுதல்
கண்ணினைப் பொத்திக் காட்டில் விடுதல்
எண்ணினைச் சுவாசம் இழுக்காதி யம்பல்
குதிவட்டாடுதல், கோலி தெறித்தல்
குதிரைமீ தூர்தல், கோலேறி நடத்தல்
காற்றில் எறிதல், கான்மாறி போடுதல்
மேற்றிரி பந்தின் விளையாட்டுப் பற்பல
சடுகுடு, கிளியத் தட்டு, பல்லி
நெடுகடு மோட்டம், நீர்விளையாட்டம்,
கம்பு சுற்றுதல், கத்தி வீசுதல்
தம்மினை அடக்கித் தலைகீழ் நடத்தல்
கசரத்து பஸ்கி, கலப்புறு குஸ்தி
நிசத்துச் சண்டையில் நிற்கும் முறைகள்
தாயம், சோவி, சதுரங்கம், கொக்கட்டான்
காயிதச் சீட்டுக் கரந்திருந்தாடுதல்

---

1. சுயசரிதை, ப. 11.

வெடிகொடு சுடுதல், வில்லொடு தெறித்தல்
அடிபிடி சண்டை அளவில் புரிந்தேன்[1]

என்று முப்பத்தொரு வகையான விளையாட்டுகளை வ.உ.சி. அவர்களே தம்முடைய சுயசரிதையில் குறிக்கிறார். இவற்றில் சில விளையாடல்கள் இன்று வழக்கில் உள்ளனவா என்பது ஐயமே. இப்படி ஓயாமல் விளையாட்டுத்தனமாகவே வ.உ.சி. இருந்தது அவருடைய தந்தையாருக்கு வெறுப்பைக் கொடுத்திருக்கலாம். ஆகையால் அவரை அவருடைய தந்தை அடித்து உதைத்துத் திருத்த முற்பட்டிருக்கலாம். ஆனால் அவருடைய சுயசரிதை[2] மூலம் நாம் வேறுபல செய்திகளை அறிந்து கொள்கிறோம்.

1. சுயசரிதை, ப. 19.
2. மேலது, ப. 21.

# நன்றி பாராட்டும் நன்னெஞ்சினர்

நன்றி பாராட்டும் குணத்தைத் திருவள்ளுவர் பலவிதங்களில் எடுத்துக் காட்டுவார். திணைத்துணை நன்றி செயினும், காலத்தினாற் செய்த உதவி, எந்நன்றி கொன்றார்க்கும் என்று தொடங்கும் குறள்களுக்கெல்லாம் இலக்கணமாகத் திகழ்ந்தவர் வ.உ.சி. அவருடைய சுதேசிக்கப்பல் கம்பெனிக்கு எல்லா வகையிலும் பலரும் உதவினர். குறிப்பாகத் தூத்துக்குடி வணிகர் ஆறுமுகம் பிள்ளை ஏராளமாக உதவி செய்தார். அவருடைய நிவைாக தன்னுடைய இரண்டாவது மகனுக்கு ஆறுமுகம் என்று பெயர் வைத்தார்.

வ.உ.சி. சிறையில் இருந்தபொழுதும் அதன் பின்னரும் அவருக்கு உதவியவர் தென்னாப்பிரிக்கச் செல்வரான தில்லையாடி வேதியப்பிள்ளை என்பவர். அவருடைய நினைவாக வ.உ.சி. தன்னுடைய இரண்டாவது புதல்விக்கு வேதவல்லி என்று பெயரிட்டார்.

வ.உ.சி. அவர்கள் கோயம்புத்தூர் சிறையில் இருந்த பொழுது சிறைச்சாலைக்குள் ஒரு கலவரம் ஏற்பட்டது. சிறையதிகாரிகளின் கொடுமையே இதற்குக் காரணம். சிறைக் கைதிகளின் கலவரத்தை அடக்க சிறைக் காவலர்கள் சிறைக்குள்ளேயே துப்பாக்கி சூடு நடத்தினார்கள். அதில் சிலர் உயிரிழந்தனர். வ.உ.சி.தான் அந்தக் கலவரத்தைத் தூண்டினார் என்று வெள்ளையர் அரசு வ.உ.சி. அவர்கள்மீது குற்றஞ்சுமத்தி, வழக்குத் தொடர்ந்தது. வ.உ.சி. அவர்கள் சார்பில், கோவைப் பெருமகன், சைவக் கிழார் திரு. சி.கே. சுப்பிரமணிய முதலியார் அவர்கள் வ.உ.சி. சார்பாக வாதாடி அவரைக் குற்றமற்றவர் என்று நிரூபித்தார். தாயினும் பரிந்தூட்டிய கோயம்புத்தூர் க. சுப்பிர மணிய முதலியாரின் குடும்பத்தார்க்கு இப்பிறப்பில் மட்டு மல்லாது, வரும் பிறப்புகளிலும் ஏவல்புரிந்து வாழ விரும்புவதாக வ.உ.சி. புலப்படுத்தித் தமது நன்றிப் பெருக்கினை உணர்த்துகின்றார்.

"அருகணைத்துப் பாலூட்டி ஆதரித்த தாயும்
ஒருகணத்து நின்னன்பிற்கு ஒவ்வாள்"[1]

என்று தம்முடைய சுயசரிதையில் வ.உ.சி. குறிப்பிடுவார். சிறையிலிருந்து விடுதலையடைந்தவுடன் குடும்பத்தாருடன் கோவைக்குச் சென்று சி.கே. சுப்பிரமணிய முதலியாருக்கு நன்றி தெரிவித்தார்.[2] 6.12.1925இல் பிறந்த தன்னுடைய மகனுக்கு, சுப்பிரமணியம் என்று சி.கே. சுப்பிரமணிய முதலியார் நினைவாகப் பெயர் சூட்டினார்.[3]

வ.உ.சி. சிறை செல்லக் காரணமாகி இருந்தவர் வாலஸ். 1922ல் அப்போது சென்னை உயர்நீதிமன்ற தலைமை நீதிபதியாக இருந்த அதே வாலேசுதுரையின் கருணையால் மீண்டும் வழக்காடும் உரிமையைப் பெற்றார். வெள்ளைக்காரதுரை செய்த உதவிக்கு நன்றி பாராட்டும் முகமாக அவருடைய கடைசி மகனுக்கு வாலேசுவரன் என்று பெயரிட்டார்.[4] வ.உ.சி. அவர்கள் வெள்ளையரை என்றும் வெறுத்ததில்லை. வெள்ளையரின் ஆட்சியினையும் அடக்குமுறையினையும்தான் அவர் வெறுத்தார்.

வ.உ.சி. அவர்கள் தனக்குப் பல்வேறு காலகட்டங்களில் உதவி செய்தவர்களை நன்றியோடு பாராட்டுகிறார். அறம் வளர்த்த சுந்தரம்பிள்ளை என்பவரைத் தன்னுடைய பெற்றோரைக் காட்டிலும் மிகஉயர்ந்தவராகப் போற்றுகிறார்.

'குலதெய்வ மாவைத்துக் கும்பிட்டு வாழ்வேன்
பலநாளும் அன்பால் பணிந்து'[5]

என்று தமக்கு உதவி புரிந்தமைக்காகச் சுந்தரம்பிள்ளையினை குலதெய்வமாக்கி வழிபடுவதாக அவருக்கு எழுதிய கடிதத்தில் வ.உ.சி. குறிப்பிடுகின்றனார்.

தூத்துக்குடியைச் சார்ந்த இரு பெரியார்களிடமிருந்து தமக்குப் பணம் பெற்றுக் கொடுத்தமைக்காக ஈசுவரமூர்த்தியா பிள்ளையின் பெருஞ்செயலை வ.உ.சி.,

---

1. பாடல்திரட்டு, ப. 35.
2. வ.உ.சி. சுயசரிதை, ப. 155.
3. வ.உ.சி. வாழ்க்கை வரலாறும் இலக்கிய பணிகளும், ப. 295.
4. மேலது, ப. 284.
5. பாடல் திரட்டு, ப. 33.

'கடித்துக் கரும்பினைக் கண்தகர நூறி
இடித்துநீர் கொள்ளினும் இன்சுவைத்தே'[1]

எனக் கரும்பின் சுவைக்கு ஒப்பாக்கிப் பாராட்டுகின்றார். தேவைப்படும் பொழுதில் எல்லாம் தமக்கு உதவி நின்ற சேலம் விசயராகவாசாரியார்க்கு நன்றி பாராட்டுவதோடு,

'என்னுடைய நாவாய்க்கு இருநிதிதந்தோர்க்கெல்லாம்
என்னுடைய மெய்வணக்கம் ஈந்திடுவாய்"[2]

எனத் தமக்கு உதவி புரிந்தோர்க்கெல்லாம் அவர் வாயிலாகவே நன்றியினை வ.உ.சி. புலப்படுத்தியுள்ளார்.

வ.உ.சி. சிறையிலிருந்தபோது அவருடைய குடும்பத்தாருக்கு வேண்டிய உதவிகளைச் செய்த வள்ளிநாயக சுவாமிகளுக்கு நன்றி பாராட்டி மகிழ்கிறார். அவருடைய மைத்துனருடன் ஏற்பட்ட கருத்து வேறுபாடு காரணமாக வள்ளிநாயக சுவாமிகள் அவருடைய வீட்டிலிருந்து வெளியேறுகிறார். ஆனால் மீண்டும் அவரைத்தம் இல்லத்திற்கு வருமாறு வேண்டுகிறார். நன்மை செய்தாரின் நட்பினை மறத்தல் பழியாகும் எனக் கருதிய வ.உ.சி.யின் நல்லியல்பினை விளக்குகிறது.

"என்னுயர் மக்கள் இருவரும் என்றும்
நின்னடி தொழுது நிலைத்து இவண் வாழ்தலே
என்னுளம் கொண்டுளேன்"[3]

---

1. பாடல் திரட்டு, ப. 55.
2. பாடல் திரட்டு, ப. 5.
3. மேலது, ப. 61.

# மொழிப்பற்றாளர் வ.உ.சி.

வ.உ.சி. அவர்கள் தாய்மொழிப் பற்றாளர். அவர்கள் குடும்பமே தமிழ்மொழிமீது ஈடு இணையில்லாத பற்றுக் கொண்ட குடும்பம். அவருடைய முன்னோர்கள் தமிழ்ப்புலவர் களாக விளங்கினர். அதனால் ஒட்டப்பிடாரத்தில் வ.உ.சி.யின் இல்லத்தைக் 'கவிராயர் வீடு" என்றே அழைப்பர். இளமையில் வ.உ.சி.க்குக் கற்பித்த ஆசிரியர்கள் தமிழ் இலக்கண இலக்கியங்களில் தேர்ச்சிபெற்றவர்கள். ஆதலால் இயல்பாகவே இலக்கிய நூல்களைப் பயிலும் வாய்ப்பினை அவர் பெற்றார். ஆத்திசூடி, உலகநீதி முதலிய ஒழுக்க நூல்களைப் பலமுறை கேட்டுப் பயின்றார். கொன்றை வேந்தன், வெற்றி வேற்கை, நளவெண்பா, மூதுரை ஆகிய நூல்களைப் பொருளுணர்ந்து கற்றார்.[1] இவருடைய பாட்டனாரும், பாட்டியும் இவருக்குப் புராணக் கதைகளை அவ்வப்போது கூறி இவரை மகிழ்வித்தனர். சுப்பிரமணியபிள்ளை என்பவர் பாரத வாசகத்தினை (மகாபாரதம்) தொடர்ந்து வாசிப்பார். முற்காலத்தில் ஒருவர் உரத்த குரலில் வாசிக்கப் பலர் அவரைச் சூழ்ந்து உட்கார்ந்து கொண்டு கேட்பர். ஒருவேளை அது கதாகாலட்சேபமாகவும் இருந்திருக்கலாம்.

வ.உ.சி.யை அவருடைய பாட்டனார் (வள்ளிநாயகம் பிள்ளை) அன்றாடம் பாரத வாசகம் படிக்கப்பட்ட இடத்திற்கு அழைத்துச் செல்வாராம்[2] அத்துடன் தம்முடைய பாட்டனார் கூறிய இராகவன் கதையினைத் தம் உள்ளத்தில் இருத்திக் கொண்டதாகவும் வ.உ.சி. ஒப்புக் கொள்கிறார்.[3] இவருடைய பாட்டி கூறிய திருவிளையாடல் புராணக்கதைகள் மற்றும் நீதிக்கதைகளையும் இவர் விரும்பிக் கேட்பாராம். இவ்வாறு இளமையிலேயே அவர் பெற்ற இலக்கிய அறிவு பிற்காலத்தில் அவரைச் சிறந்த இலக்கிய வித்தகராக மாற்றியிருக்கலாம்.

---

1. வ.உ.சி. வாழ்க்கை வரலாறும் இலக்கியப் பணிகளும், ப. 4.
2. வ.உ.சி. சுயசரிதை, ப. 20.
3. வ.உ.சி. வாழ்க்கை வரலாறும் இலக்கியப் பணிகளும், மு.நூ. ப. 4.

குறிப்பாகக் கலைச்சொல்லாக்கம் பற்றிய உணர்வு வ.உ.சி.க்கு மிகுந்திருந்தது. இருபதாம் நூற்றாண்டின் தொடக்கத்தில் தமிழ்க் கலைச்சொல்லாக்கம் குறித்து பாரதி, வ.வே.சு. ஐயர், இராஜாஜி போன்றோரும் தத்தம்பாணியில் சிந்திக்கத் தொடங்கினர். ஆனால் வ.உ.சி.யோ தனித்தமிழ்ப் பாணியில் சிந்திக்கலானார். வேற்றுமொழிக் கலப்பற்ற முறையில்,

> "தனித்தமிழில் மொழிபெயர்த்துக் கொடுக்கத்
> தக்க திறமையுடையேன்"

என்று வ.உ.சி. ஒப்புக் கொள்கிறார்.[1]

வ.உ.சி. உருவாக்கிய சொல்லாக்கங்களுக்கு அவர் எழுதிய 'வலிமைக்கு மார்க்கம்' சான்று பகருகிறது.

ஆன்மா - பேரறிவு (யான் 'எனது' எனக் கருதாது உலக நன்மையைக் கருதுவது)

ஜீவன் - சிற்றறிவு (யான் 'எனது' எனக் கருதத் தனது நன்மையையே கருதுவது)

என்று வ.உ.சி. புதுமையாகவும் பொருத்தமாகவும் புதிய சொற்களை உருவாக்கினார். வெறும் சொல்லாக இல்லாமல் தத்துவக் கருத்துகளை உள்ளடக்கிய சொற்களாக அவை அமைந்தன. தமிழ்ச்சொற்களைப் பயன்படுத்தும்போதும் அவற்றிற்கிடையேயான நுணுக்கமான வேறுபாடுகளை நன்கு உணர்த்தும் ஆற்றல் பெற்றிருந்தார். சான்றாக,

துன்பம் - பொறியால் வரும் வருத்தம்

இன்பம் - பொறிக் களிப்பு

சுகம் - மனக் களிப்பு

என்ற அவருடைய சொல்லாட்சிகளே அவருடைய தமிழ்ப் பற்றுக்குத் தக்க சான்றுகளாகும்.

தமிழ்எழுத்துச் சீர்திருத்தம் குறித்து வ.உ.சி. அன்றே சிந்தித்திருக்கிறார். பாரதியார் தமிழில் வர்க்க எழுத்துகள் இல்லை என்று குறைப்பட்டுக் கொண்டாராம்.[2]

---

1. வ.உ.சி. வளர்த்த தமிழ், ப. 58.
2. வ.உ.சி. வளர்த்த தமிழ், ப. 61.

ஆனால் இக்கருத்துகளை வ.உ.சி.யால் ஏற்றுக் கொள்ள முடியவில்லை. ஞானபாநுவில்[1] தம்முடை மறுப்பை எழுதினார். பாரதியார் இருந்தபோது நடந்தது இந்த நிகழ்ச்சி. பாரதியார் காலமாகி 16 ஆண்டுகளுக்குப் பிறகு (1926) வ.உ.சி. காலமாகி விடுகிறார். "தமிழ் எழுத்துக்களின் குறையும் உச்சரிப்பு முறையும்" என்ற தலைப்பில் ஒரு கட்டுரை வெளிவந்தது. எழுதியவர் இராஜாஜி. "தொல்காப்பியப் போர்", "கலைச்சொல்லாக்க முயற்சிகள்", "பொருளற்ற சண்டைகள்" போன்ற தமிழோடு தொடர்புடைய செய்திகள் பலவற்றைப் பற்றிச் சிந்தித்தவரான இராஜாஜி தமிழ் எழுத்துகள் பற்றியும் எண்ணிப் பார்த்துள்ளார்.[2]

'தமிழ்ச்சொற்களுக்கும் தமிழுக்குமே தமிழ் எழுத்துக் குறிகள் உண்டாக்கப்பட்டவை. பிற பாஷைகளைத் தமிழ் எழுத்தைக் கொண்டு எழுப்புகின்றபோது பலகுறைகள் தோன்றும். அதைக்கொண்டு, தமிழ் எழுத்துக்களை நாம் குறை கூறுவதோ இகழ்வதோ கூடாது. இருபது ஆண்டுகளுக்கு முன்பு ஒலித்த வ.உ.சி.யின் குரலின் எதிரொலியை 1936இல் இராஜாஜியிடம் காணமுடிகிறது.[3]

தூத்துக்குடித் தமிழறிஞர் உ.பொ. முத்துராமலிங்கம் பிள்ளை என்பவரின் துணைகொண்டு இலக்கிய இலக்கண அறிவினை வ.உ.சி. வளர்த்துக் கொண்டார். திருக்குறளில் உரைநூல் அரங்கேற்றத்தின்போது இவர் திருச்செந்தூரில் காவடி எடுத்தார். திருக்குறள் சிறப்புப் பற்றி அடிக்கடி இவர் பிறரிடம் குறிப்பிடுவார். திருக்குறளையே மேற்கோள் காட்டுவார்.[4] வ.உ.சி.யின் பெயரால் ஒரு கலைக்கல்லூரியைத் தூத்துக்குடியில் நிறுவிய ஏ.பி.சி. வீரபாகு அவர்கள், திருக்குறளுக்கு வ.உ.சி. கூறும் புதுப்புது உரைகளைக் கேட்டு மகிழ்ந்ததாகக் கூறுகிறார்.[5]

இன்று, தமிழகத்தில் தமிழ்ப்பல்கலைக்கழகம் நன்கு செயல்பட்டு வருகிறது. தமிழர்களுக்கென்று தமிழ்மொழிப் பல்கலைக்கழகம் இல்லையே என்று ஏக்கக்குரல் கொடுத்தவர்

---

1. வ.உ.சி. வளர்த்த தமிழ், ப. 64.
2. மேற்படி, ப. 63.
3. வ.உ.சி. வளர்த்த தமிழ், ப. 70.
4. வ.உ.சி. வாழ்க்கை வரலாறும் இலக்கியப் பணிகளும், ப. 291.
5. மேலது, ப. 291.

வ.உ.சி. 1927 நவம்பர் 5இல் சேலத்தில் நடந்த காங்கிரஸ் மாநாட்டில், தான் ஆற்றிய தலைமை உரையில் தமிழ்ப் பல்கலைக்கழகம் எப்போது உருவாகும் என்று ஏங்கித் தவித்ததை அவருடைய உரை வெளிப்படுத்துகிறது.

> "நம் தமிழ்நாடு மிகப் பரந்தநாடு. சேரன் சோழன், பாண்டியன் என்று மூன்று பேரரசர்களும் பல சிற்றரசர்களும் கூடி ஆண்டு வந்த பெரிய நாடு. தமிழ்நாட்டில் ஏறக்குறைய நான்கு கோடி ஜனங்கள் இருக்கிறார்கள். தமிழ்மொழி மிகத் தொன்மை யானது. அது மலையாளம், கன்னடம், துளுவம், தெலுங்கு முதலிய பல பாஷைகளுக்கும் தாய்ப் பாஷையாய் விளங்குவது. ஒப்புயர்வற்ற தொன்னூல் எண்ணிறந்தவற்றை உடையது. பேசுவதற்கும், எழுதுவதற்கும், பாடுவதற்கும் மிகப் பொருத்த மானது. இவ்வாறிருந்தும் இந்நாட்டில் இது வரையில் தமிழ் சர்வ கலாசாலை ஒன்றும் ஏற்படுத்த வில்லை"[1]

என்று வருத்தத்துடன் பேசினார்.

---

1. வ.உ.சி. நூல் திரட்டு, ப. 223.

# சாதி உணர்வுக்கு அப்பாற்பட்டவர் வ.உ.சி.

விருதுநகரைச் சேர்ந்த தாழ்த்தப்பட்ட குலத்தைச் சார்ந்த இராமையர்தேசிகர் என்பவரைத் தன்னுடைய வீட்டில் தங்க வைத்திருந்தார் வ.உ.சி. இவருடைய முதல் மனைவியான வள்ளியம்மையும் மிகுந்த அன்புடன் தேசிகருக்குத் தன் கையால் உணவு ஊட்டுவாராம். ஊரார் வ.உ.சி.யைப் பழிக்கத் தொடங்கினர். தன் மனைவி வள்ளியம்மையாரிடம் வ.உ.சி. ஊரார் பழிச்சொல் குறித்துப் பேசினார். அவருடைய மனைவி வ.உ.சி.யின் கருத்துக்கு ஒத்துப் போகக் கூடியவராகத் தோன்றினார்[1] அத்துடன்,

"மதகுல வேற்றுமை மனத்திலும் கொள்ளேன்"

என்று தம்முடைய சுயசரிதையில் வ.உ.சி. குறிப்பிடுகிறார். ஆனால் அதே சுயசரிதையில் இடம்பெறும் சில வரிகள் சற்று முரண்பட்ட நிலையில் அமைந்துள்ளன. அவற்றிற்கு இக்கட்டுரையாளரால் சரியான அமைதி காண இயலவில்லை.

சிறையில் நடந்த ஒரு நிகழ்ச்சி. அதைத் தம்முடைய சுயசரிதையில் பதிவு செய்கிறார்.

மிச்சேல் என்ற சிறை அலுவலர் ஒரு கைதியை வ.உ.சி.க்கு உணவு வழங்கச் செய்தார். அக்கைதி அவரிடம் சென்று நின்றான். உடனே வ.உ.சி. அவன் ஜாதி குறித்துக் கேட்டார்.

.............................. ஜாதி

என்னடா? என்றேன் 'முதலி' என்றான் 'என்னடா முதலி நீ?' என்றேன். விழித்தான். பார்ப்பான் அல்லது பாண்டி வேளாளன் சாப்பாடாக்கித் தந்தால் உண்பேன் என்று ஜெயிலர்பால் இயம்பெனச் சொன்னேன்"[2] ஆனால் அவரே தான் சாதி வேற்றுமை பார்த்ததில்லை என்று தான் இயற்றிய சுய சரிதையில் கூறியுள்ளார்.

---

1. சுயசரிதை, ப. 31.
2. மேற்படி, ப. 34.

"மதகுல வேற்றுமை மனத்திலும் கொள்ளேன்"[1]

என்று சுயவிமரிசனம் செய்து கொள்கிறார். அவ்வாறு சாதி வேற்றுமை பாராட்டுபவராக இருந்தால் தன் வீட்டிலேயே விருதுநகரைச் சேர்ந்த தாழ்த்தப்பட்ட இனத்தவரை வைத்திருப் பாரா? ஜெயிலில் ஏதோ மனவெறுப்பில் இவ்வார்த்தைகளைக் கூறியிருக்க வேண்டும் என்றுதான் நாம் எண்ண வேண்டி யுள்ளது.

வ.உ.சி. அவர்கள் சில காலம் சென்னையில் வாழ்ந்தார். சென்னையில் உள்ள ரிப்பன் அச்சுக் கூடத்தில் சகஜானந்தரைச் சந்திக்கிறார். சகஜானந்தர் தாம் தீண்டத்தகாதவர் என்று அறிமுகம் செய்து கொள்கிறார். வ.உ.சி. சென்னையில் தம் வீட்டிற்குக் கூட்டிச் சென்று உணவு கொடுத்து உபசரித்தார். தம்முடன் இருக்கச் செய்து அவருக்குத் தொல்காப்பியம், திருக்குறள் போன்ற நூல்களைக் கற்பித்தார். சென்னையை விட்டு ஒட்டப்பிடாரத்துக்குச் சென்றபோதும் சகஜானந்தரை உடன் அழைத்துச் சென்றார். தாம் கலந்து கொண்ட எல்லா நிகழ்ச்சிகளுக்கும் அவரையும் அழைத்துச் சென்றார். ஒரு தந்தை தன் மகனிடம் காட்டும் பாசத்துக்கும் மேலாக அவர்மீது இவர் அன்பு செலுத்தினார்.[2]

வ.உ.சி. அவர்கள் தம் வாழ்நாளில் என்றுமே சாதிவேறு பாட்டை ஆதரித்ததே இல்லை அந்தணர் சமூகத்தில் பிறந்த பாரதியை "மாமா" என்று அன்புடன் உரிமை கொண்டாடுவார். உண்மையில் பாரதி இவரைவிட வயதில் சிறியவர். இவருடைய வாழ்வின் இறுதிக் காலத்தில், அதாவது 1933இல் காரைக்குடியில் காந்தியை வரவேற்க நடந்த ஏற்பாட்டுக் கூட்டத்திற்குத் தலைமை தாங்குகிறார். அப்போது காந்தியின் அரிசனக் கொள்கையை ஆதரித்துப் பேசினார். இறைவன் படைப்பில் ஏற்றத்தாழ்வு பார்ப்பது அறிவீனம் என்ற உயரிய கொள்கையைக் கடைப்பிடித்தவர் வ.உ.சி.

1. சுயசரிதை, ப. 134.
2. வீரத்தியாகி, வ.உ.சி. பக். 23, 24.

# ஏழைப் பங்காளன்

ஒட்டப்பிடாரம் வழக்குமன்றத்தில் ஒரு வழக்கு. வாதியோ ஒரு பெரும் நிறுவனத்துக்குச் சொந்தக்காரர்; வெள்ளையர் பிரதிவாதியோ மூன்றுகாணி நிலத்துக்குச் சொந்தக்காரன். ஏழை! வாதியிடமிருந்து பிரதிவாதி கொஞ்சம் கடன் வாங்கியிருந்தான். ஆனால் அவன் அதைத் திருப்பித் தருவதற்குள் அவனுடைய நிலத்தின்மேல் வாதி கண் வைத்தார். எனவே அந்த நிலத்தைக் கடன் கொடுத்த பணத்திற்காகத் தந்து விடும்படி வற்புறுத்தினார். பிரதிவாதியின் மனம் அதற்கு இணங்கவில்லை சிறிது நாளில் அவர் பணத்தைத் திருப்பித் தந்து விடுவதாக உறுதி கூறினான். ஆனால் அந்த வெள்ளைக் காரத் துரையின் கையாள் நிலம்தான் தனக்கு வேண்டுமென்று கூறினான். அந்த ஏழையின் பரம்பரைச் சொத்தைப் பிடுங்கு வதற்குப் பல சூழ்ச்சிகள் நடைபெற்றன. பாவம் அந்த ஏழை செய்வது அறியாது திகைத்தான். இதற்குள் வ.உ.சி.யின் தந்தை உலகநாதபிள்ளையை வைத்து அவ்வெள்ளைக்காரரின் கையாள், அந்த ஏழையின் மீது வழக்குத் தொடுத்தான். அந்த ஏழைக்கு என்ன செய்வதென்றே புரியவில்லை. அப்போது வ.உ.சி.யிடம் சென்று அவன் கண்ணீர் விட்டான். வ.உ.சி. நியாயம் அவன் பக்கத்தில் இருப்பதை அறிந்தார். அவனுக்கு ஆறுதல் கூறினார். "உண்மை வெல்லும். அதனை அழிக்க யாராலும் முடியாது" என்று அவனைத் தேற்றினார். வழக்கு ஆரம்பம் ஆகியது. உலகநாதபிள்ளை எழுந்து வாதாடினார். பல சாட்சிகளைப் பொய்யாக அந்த வெள்ளையரின் கையாள் ஏற்பாடு செய்திருந்தான். அவர்கள் விசாரிக்கப்பட்டனர். அந்த ஏழை கடன் வாங்கியதாகவும் அதற்கு நிலத்தைத் தந்து விடுவதாகக் கூறியதாகவும் சாட்சிகள் கூறினர்[1] அந்த ஏழைக்குப் புறம்பாக நீதி போய்விடுமோ என்று வழக்கு மன்றத்தில் உள்ள அனைவரும் எண்ணினர். வழக்காடுவதோ பெரிய வழக்கறிஞர். உலகநாதபிள்ளை அந்தப் பக்கத்திலேயே பெரும்புகழ் பெற்றவர்.

---

1. தமிழ்நாட்டுத் தவப்புதல்வர்கள், ப. 12.

தோல்வி என்பது அவர் வாழ்க்கையில் கிடையாது. எனவே எல்லோரும் எண்ணியதில் வியப்பில்லை அல்லவா?

நிதிபதி தீர்ப்புக்கூறும் நேரம். பிரதிவாதியைப் பார்த்து "உனக்கு வாதாட யாருமில்லையா?" என்றார். அப்போது "ஏன் இல்லை? நானிருக்கிறேன்!" என்று ஒரு குரல் எழுந்ததும் எல்லோரும் திரும்பிப் பார்த்தனர் வ.உ.சி. சிரித்த முகத்தோடு எழுந்து வந்தார். தந்தை ஒரு பக்கம், மைந்தன் ஒரு பக்கம், வழக்குமன்றம் வியப்புக் கடலில் ஆழ்ந்தது. நீதிபதி அவரை அந்த ஏழைக்காக வாதாடும்படி கூறி அனுமதியளித்தார். வ.உ.சி. சாட்சிகளைக் குறுக்கு விசாரணை செய்தார். அவர் கேட்ட கேள்விகளுக்குச் சாட்சிகள் சரியான மறுமொழி கூற முடிய வில்லை. அது பொய்ச்சாட்சி என்பது தெரிய வந்தது. எனவே வழக்கில் அந்த ஏழைக்கு வெற்றி கிட்டியது. வழக்கு மன்றம் கலைந்தது. அந்த ஏழை ஓடி வந்து வ.உ.சி.யின் காலைக் கட்டிப் பிடித்துக் கொண்டான். ஆனந்தக் கண்ணீர் விட்டான். அன்றிலிருந்து அந்த ஏழை வ.உ.சி.யின் சுதேசி இயக்கத்திற்காகத் தன் உயிரையும் கொடுக்க உறுதி பூண்டான். அந்த ஏழையின் பெயர் மாடசாமி.

வ.உ.சி.யின் தந்தை தன் மகன் தன்னையே வென்று விட்டது கண்டு மகிழ்ந்தார். தம்மின் தம்மக்கள் அறிவுடைமை மாநிலத்து மன்னுயிர்க் கெல்லாம் இனிது என்ற பொய்யாமொழிக்கு இலக்கணமாகத் திகழ்ந்தார் உலகநாதபிள்ளை.

---

1. தமிழ்நாட்டுத் தவப்புதல்வர்கள், ப. 13.
2. தமிழ்நாட்டுத் தவப்புதல்வர்கள், ப. 14

## உதவிக்கரம் நீட்டும் உயர்பண்பாளர்

1926ஆம் ஆண்டு. சென்னை மயிலாப்பூரில் இந்து மத பரிபாலன சபையின் கமிஷனராக இருந்தவர் டி.கே.சிதம்பரநாத முதலியார் (டி.கே.சி.) அவர்கள் வீட்டில் திரு. வையாபுரிப் பிள்ளை அங்கே இருந்தார். அப்போது வ.உ.சி. அவர்கள் அங்கே வந்தார். திருக்குறள் உரை பற்றிய பேச்சு. "பரிமேலழகர் உரை பல இடங்களில் பிழையாக உள்ளது. திருக்குறளின் முதல் நான்கு அதிகாரங்களை வள்ளுவர் இயற்றவில்லை" என்று வ.உ.சி. ஆவேசத்துடன் பேசினார். வையாபுரிப்பிள்ளை அவர்கள் வ.உ.சி.யின் பேச்சுக்கு மறுப்பினை மிக மென்மையாக, எடுத்துரைத்தார். வையாபுரிப்பிள்ளையின் அமைதியும், தருக்கநெறி பிறழாத பேச்சும் ஆழ்ந்த தமிழ் உணர்ச்சியும் வ.உ.சி. அவர்களைக் கவர்ந்துவிட்டன. அன்றிலிருந்து வ.உ.சி. அவர்கள் சென்னை வந்த பொழுதெல்லாம் வையாபுரிப்பிள்ளையைப் பார்த்துவிட்டுச் செல்வார். தொல்காப்பிய பொருளதிகாரத்தில் இரண்டு இயல்களை திருமணம் செல்வக்கேசவராய முதலியாரின் உதவியுடன் வ.உ.சி அவர்கள் பதிப்பித்து வெளியிட்டார். எஞ்சிய இயல்களை வையாபுரிப் பிள்ளை வெளியிட வேண்டும் என்று கேட்டுக்கொண்டார். அதன்படியே வையாபுரிப்பிள்ளை கூடிய விரைவில் வ.உ.சி./வையாபுரிப் பிள்ளை எனும் பெயர்களால் தொல்காப்பியத்தைப் பதிப்பித்தார். மற்றும் வையாபுரிப்பிள்ளைக்குத் தேவையான ஏடுகளை ஆழ்வார் திருநகரியில் கவிராயர் வமிசத்தினர் வீட்டிலிருந்து வாங்கி வ.உ.சி. அனுப்பி வைத்தார்.

இதை விட வ.உ.சி. செய்த மிக முக்கியமான உதவி ஒன்று உண்டு. 1936இல் சென்னை சர்வகலாசாலையில் தமிழ்த்துறைத் தலைவர் பதவிக்கு நியமனம் நடைபெற இருந்தது. அச்சமயம் வ.உ.சி. அவர்கள் சென்னைக்கு வர நேர்ந்தது. பிறர் செய்யும் முயற்சிகளை யெல்லாம் ஒருவாறு தெரிந்துகொண்டு தாமே

---

1. தமிழ்நாட்டுத் தவப்புதல்வர்கள், ப. 15
2. தமிழ்ச் சுடர்மணிகள், ப. 380

வையாபுரிப்பிள்ளையைச் சந்தித்து அந்த முயற்சியில் வெற்றி பெறவேண்டும் என்று வாழ்த்தினார். அவர்கள் இருவர் பெயராலும் பதிப்பித்து வெளியிடப்பட்டிருந்த தொல்காப்பியப் பிரதிகள் சில தந்து, அவற்றை நியமனக் கமிட்டி அங்கத்தினர் களுக்கு அனுப்ப வேண்டும் என்று வற்புறுத்திச் சொன்னார். அம்முயற்சியில் வையாபுரிப்பிள்ளையும் வெற்றி பெற்று தமிழ்த்துறைத் தலைவர் ஆனார்.[2] சில மாதங்களில் வ.உசி. காலமானார். தம்முடைய இறுதிக்காலத்தில்கூடப் பிறருக்கு உதவ வேண்டும் என்ற உயர்ந்த பண்பினை உடையவராகத் திகழ்ந்தார் வ.உசி.

'அக்கிரகாரத்து அதிசய மனிதர்' என்று அறிஞர் அண்ணாவால் பாராட்டப் பெற்ற வரா. என்ற வ. ராமசாமி அய்யங்கார் என்ற எழுத்தாளரும், வ.உசி.யும் நெருங்கிய நண்பர்கள்.

1935ஆம் ஆண்டு ஜுன் மாதம் 8ஆம் நாள். வரா. என்கிற வ.ராமசாமி அய்யங்கார், அப்பொழுது திருப்பழனத்தில் (திருவையாறுக்கு அருகில்) தங்கியுள்ளார். அவரைக் கொழும்பு வீரகேசரி தினசரிப் பத்திரிகையின் தலைமை ஆசிரியர் பதவிக்குச் செல்லுமாறு பரிந்துரைத்து வேண்டுகிறார். வ.உ.சி. தன் வறுமை நிலையினையும் குறிப்பால் சொல்கிறார். இருப்பினும் தம்முடைய நண்பர்கள் நன்கு வாழவேண்டும் என்ற மனப்பாங்கு உள்ளவராக வ.உசி. இருந்தார் என்பதை இந்த நிகழ்ச்சி புலப் படுத்துகிறது. வ.உசி. அவர்கள் வ.ரா.விற்கு எழுதிய கடிதத்தின் ஒரு பகுதியே இக்கருத்துக்குச் சான்றாக அமைகிறது.

"தாங்கள் தேசத்திற்குச் சேவை செய்து முடித்துவிட்ட தென்று கருதித் திருப்பழனத்தில் போய்த் தூங்கத் தொடங்கி விட்டீர்களா? அல்லது தாங்கள் பெரும்பொருள் மீதப்படுத்தி விட்டமையால், இன்பம் துய்க்கத் தொடங்கிவிட்டீர்களா? இரண்டில் எது நினைத்தாலும் தவறு. தேசம் அடிமைபட்டே இருக்கிறது. என் போன்ற உண்மைத் தேசாபிமானிகள் பலர் வறுமையில் ஆழ்ந்திருக்கின்றோம். இது நிற்க.

தேசத்திற்குச் சேவை செய்ய வெளிக் கிளம்புக. கொழும்பு வீரகேசரி - தினசரி-க்குத் தலைமை ஆசிரியர் தேவை.

---

1. தமிழ்ச் சுடர்மணிகள், ப. 381
2. மேலது, ப. 382

அப்பதவியைத் தாங்கள் வகித்துத் தேசத்திற்குச் சேவை செய்ய வேண்டுமென்பது எனது விருப்பம். அதன் அதிபர் எனது நண்பர். நல்ல தேசாபிமானி. என் சொல்படி தங்கள் செலவுக்குப் பணம் கொடுப்பார். தாங்கள் உடனே புறப்பட்டுப் பாம்பன் மார்க்கம் கொழும்புக்குச் சென்று வீரகேசரி ஆசிரியர் பதவியை ஏற்று அதனைச் செம்மையுற நடத்தித் தேசத்திற்குச் சேவை செய்துவர வேண்டும். கடவுள் துணை.

*தூத்துக்குடி*
*8-6-1935*

தங்கள் அன்பன்
வ.உ. சிதம்பரம்

## நாட்டுப்பற்று

தூத்துக்குடியில் சிதம்பரனாரும் சுப்ரமணிய சிவனாரும் சேர்ந்து செய்து வந்த சொற்பொழிவுகள் அவ்வூரிலிருந்த ஆங்கிலேயர்களுக்குப் பீதியை உண்டு பண்ணியது. மக்கள் கொண்டிருந்த தேசவெறியின் விளைவாகத் தங்களுக்கு எந்தச் சமயத்தில் என்ன நேரிடுமோ என்று அஞ்சினர். எனவே கரைக்குச் சிறிது தொலைவில் ஒரு கப்பலைக் கொண்டு வந்து நங்கூரம் பாய்ச்சச் செய்து தினந்தோறும் இராப்பொழுதை அதில் வெள்ளையர்கள் கழித்தனர். சுமார் மூன்று மாத காலம் இப்படி நடந்தது.[2] இதிலிருந்து வெள்ளையர் கொண்டிருந்த அச்சமும் மக்கள் கொண்டிருந்த தேசப்பற்றும் எவ்வளவு உச்ச நிலையில் இருந்தனவென்பது ஒருவாறு புலனாகும்.

திருநெல்வேலி ஜில்லா கலெக்டராயிருந்த வின்ச் என்ற ஆங்கிலேயர் சிதம்பரனாரை அழைத்துப் பேசினார். சுதேச இயக்கத்தை தாம் மெச்சுவதாகவும், நாட்டுப்பற்றைப் போற்றுவதாகவும் ஆனால் இவற்றால் வ.உ.சி.யின் எதிர்கால வாழ்க்கை பெரிதும் பாதிக்கப்படக்கூடும் என்றும் அறிவுரை கூறுவது போலவும் மிரட்டினர்.

---

1. வ.உ.சி. நூல் திரட்டு, ப. 12.
2. நான் கண்ட நால்வர், ப. 208.

சுதேசி இயக்கத்தையும், சுதேசிக்கப்பல் கம்பெனி முயற்சியையும் விட்டுவிட்டு வேறு இடத்திற்குப் போய்விடு மாறும் கூறினார். ஆனால் வ.உ.சி. அதற்கு இணங்கவில்லை.[1]

ஒருநாள் இரவு பத்து மணி இருக்கலாம். வ.உ.சி. கப்பல் கம்பெனி அலுவலகத்தில் ஏதோ கணக்கு வழக்குகளைப் பார்த்துக் கொண்டிருந்தார். அப்போது யாரோ கதவைத் தட்டுகிறார்கள். வ.உ.சி. சென்று கதவைத் திறக்கிறார். வாசலில் ஒரு தமிழரோடு வெள்ளைக்காரன் ஒருவரும் நிற்கிறார். தமிழனுக்கே உரிய உயர்பண்பாட்டின் அடிப்படையில் உரிய வ.உ.சி. அவர்களை வரவேற்றுப் பாலும் பழமும் கொடுத்து உபசரித்தார். வந்தவர்கள் வ.உ.சி.க்கு அறிவுரை கூறினார்கள். கப்பல் வாணிகத்திலிருந்து அவர் பின்வாங்கிக் கொண்டால் இலட்சக்கணக்கில் பணம் கொடுப்பதாகவும் வாக்களித்தனர். ஆனால் வ.உ.சி. மசியவில்லை. "என் தாய்க்கா வஞ்சனை புரிவேன்? இப்பணம் எம்மாத்திரம்? எனது மானமும் தேசத்தின் மானமுமே உயர்ந்தவை. விலை கொடுத்து இச்சிதம்பரத்தை வாங்க முடியாது." என்று அடக்கத்துடனும் அழுத்தத்துடனும் கூறி அவர்களை அனுப்பி வைத்தார்.[2] பணத்திற்காக மயங்காத தேசியவாதி வ.உ.சி. என்பதை இந்த நிகழ்ச்சி உறுதிப் படுத்துகின்றது.

மதுரைத் தமிழ்ச் சங்கத் தலைவராய் இருந்த பாலவநத்தம் பாண்டித்துரைத் தேவரைத் தலைவராகக் கொண்டு 14-10-1906 ஆம் நாள் சுதேசிக்கப்பல் கம்பெனி பதிவு செய்யப்பட்டது.

பம்பாய் ஷா லைன் ஸ்டீம் கம்பெனியாரிடமிருந்து சூசான் என்ற ஒரு கப்பலை வ.உ.சி. வாடகைக்கு வாங்கினார். இலங்கைக்கும் தூத்துக்குடிக்கும் முகம்மது பக்கீர் ஷேட் முதலிய செல்வந்தர்களின் உதவி வ.உ.சி.க்குக் கிட்டியது. கம்பெனிக்குச் சொந்தக்கப்பல் வாங்குவதற்காகப் பம்பாய்க்குப் புறப்பட்டார் வ.உ.சி. அப்போது அவருடைய மூத்த மகன் உலகநாதன் கொடு நோயுற்று, உயிருக்கு ஊசலாடிக் கொண்டிருக்கிறான். அவருடைய கருவுற்ற மனைவியார் நோயுற்று நலிவடைந்து விட்டார். ஆதலால் வ.உ.சி.யைத் திரும்பி வருமாறு உற்றாரும் உறவினரும் தந்தி அனுப்பினர். "கப்பல்கள்

1. நான் கண்ட நால்வர், ப. 208
2. வீர சிதம்பரனார், ப. 31

வாங்காமல் திரும்பி வர மாட்டேன். என் மகனையும் மனைவியையும் ஆண்டவன் காப்பான்"[1] என்று பதில் தந்தி அனுப்பி விட்டார் பிள்ளையவர்கள். வீட்டுப்பற்றைக் காட்டிலும் நாட்டுப்பற்றில் மிகுந்த நாட்டம் கொண்டவராக வ.உ.சி. அவர்கள் விளங்கினார்கள். சில நாட்களில் சிதம்பரனாரின் சீரிய முயற்சியால் 'காலியா', 'இலாவே' என்ற இரண்டு கப்பல்கள் 'வந்தே மாதரம்' என்ற மறைமொழி பொறிக்கப்பட்ட கொடிகள் பட்டொளி வீசி விண்ணில் பறக்கத் தூத்துக்குடித் துறை முகத்தை அடைந்தன.[2] வ.உ.சி.யின் வீரம் கலந்த நாட்டுப்பற்றினை வெள்ளையர்கள் சரியாக எடைபோட்டிருந்தனர்.

"வெள்ளையரே வெறியேறுங்கள் என்று பிற்காலத்தில் நாடு முழுவதும் கிளம்பிய கோஷத்திற்கு வித்தூன்றிய முதல் தலைவர் சிதம்பரனார் என்று நீதிபதி பின்ஹேயும், கலெக்டர் விஞ்சும் கூறினர்"* வ.உ.சி.யின் சுயசரிசையில் அவருடைய வீர உணர்வுகளின் வெளிப்பாடுகளைக் காணலாம். சிறையில் ஒரு கண்காணிப்பாளர் இவரைத் 'தூக்கிலிட்டு விடுவேன்' என்று மிரட்டினாராம். வ.உ.சி.தான் வக்கீலாயிற்றே! உடனே, வ.உ.சி., "பாக்கிய வசத்தால் துலக்க நீ ஐட்ஜலை என்று மொழிந்தேன்; நின்றவன் போயினான்"[3] என்று மறுமொழி கூறி வாயடைக்கிறார்.

மிச்சேல் என்ற சிறையதிகாரி அவருக்கு அறிவுரை வழங்குகிறான். வெள்ளையரைப் பகைத்துக் கொள்ள வேண்டாம் என்று கூறியதற்கு, வ.உ.சி.,

"நீயோ புத்தி நிகழ்த்துகின்றவன்?
வாயை மூடடா மதியிலி உனக்கும்
உன்னப்பனுக்கும் உன்சூப் பிரண்டெண்டு
உன்னையாள் கவர்னர் மன்னராதியர்க்கும்
புத்திகள் கூறும் பெற்றிமை யுடையேன்
என்று பல பகர்ந்தேன்....'

என்று தன் சுயசரிதையில்[4] எழுதுவது வீரமன்றி வேறெதைக் காட்டுகிறது?

---

1. தமிழகத் திலகங்கள், ப. 10
2. மேலது, ப. 11.
3. கப்பலோட்டியத் தமிழன், ப. 108
4. சுயசரிதை, ப. 127.

# நாட்டுப்பற்றுக் கலந்த இலக்கியப் பணி

மெய்கண்டாரின் சிவஞானபோதம் என்பது பதினான்கு மெய்ப்பொருள் நூல்களில் ஒன்றாகும். மெய்கண்டார் இந்நூலை அருளிச் செய்தார். சிவஞானபோதத்திற்கு முதன்முதலாக சிற்றுரையும் பேருரையும் வழங்கியவர் சிவஞானமுனிவர் ஆவார். திருக்குறளுக்கும் சிவஞானபோதத்திற்கும் எளிய உரை காண வேண்டும் என்று வ.உ.சி. ஆசைப்பட்டிருக்கிறார்.[1] நாள் ஒன்றிற்கு இரண்டு மணிவீதம் பன்னிரண்டு நாட்களுக்கு சிவஞான போதத்தை ஆராய்ந்து வ.உ.சி. உரை எழுதியுள்ளார்.[2] சிவஞான போதத்திற்கு எழுந்த உரைகள் பல மதக்கோட்பாட்டுகளையும் அவற்றின் கண்டனங்களையும் காட்டியுள்ளன. ஆனால் வ.உ.சி. அவற்றினைத் தமது உரையிடையில் காட்டினால், அவர் காலத்தில் நிலவிவந்த ஒற்றுமையின்மை, மதவேறுபாடுகளின் அடிப்படையில் மேலும் பெருக வழி பிறக்கும் எனக் கருதினார். எனவே அவற்றினைக் காட்டாது எளிய, நேரிய உரையினை அவர் எழுதியுள்ளமை அவருடைய சமுதாயச் சிந்தனைக்கும் நாட்டுப் பற்றுக்கும் நல்ல சான்றாகும். நாட்டில் மக்களிடையே மதச் சண்டைகள் வந்து விடக் கூடாதே என்பதில் வ.உ.சி. அவர்கள் கவனமாக இருந்திருக்கிறார்கள் என்பதையே இது தெளிவுபடுத்துகிறது. அத்துணை நாட்டுப்பற்று!

நாட்டு விடுதலைக்காகக் "காங்கிரஸ்" என்ற பேரியக்கம் முழுமூச்சுடன் களத்தில் இறங்கியது என்பது உண்மை. ''காங்கிரஸ்' கட்சியிலிருந்து பல்வேறு காரணங்களால் வெளியேறிப் புதிய இயக்கங்களையும், புதிய கட்சிகளையும் உருவாக்கியவர்களும் உண்டு. அவர்கள் எல்லோரும் நாடு, மொழி, இனம் இவற்றைக் கருத்தில் கொண்டவர்கள். வ.உ.சி. அவர்களும் திலகர் பெருமானின் தீவிரவாதக் கொள்கைகளில் பிடிப்பு உடையவராக இருந்தார். காந்திஜியின் வருகைக்குப் பிறகு காங்கிரஸ் கட்சியிலும் இயக்கத்திலும் பல மாற்றங்கள்

---

1. வ.உ.சி. சிவஞானபோத உரை, உரைப்பாயிரம், ப. 3
2. வஉ.சி. வரலாறு, ப. 218

நிகழ்ந்தன. இதனால் வ.உ.சி. போன்றோர் காங்கிரஸ் கட்சியி லிருந்து சற்றுத் தள்ளி இருந்த காலமும் உருவானது. ஆயினும் அவருக்குக் காங்கிரஸ் கட்சியின்மீது வெறுப்பு ஏற்படவில்லை. சில ஆண்டுகள் ஒதுங்கியிருந்தவர், மறுபடியும் காங்கிரஸில் இணைந்து செயலாற்றத் தொடங்கினார். வ.உ.சி. அவர்கள் தம்முடைய இறுதி முடிவு தூத்துக்குடியிலுள்ள காங்கிரஸ் கட்சி அலுவலகத்திலேயே ஏற்பட வேண்டும் என்று விரும்பினார். அவருடைய விருப்பப்படி அந்த அலுவலகத்தில் சென்று தங்கினார். ஆனால் சில நாட்களில் உடல்நிலை மிகவும் மோசமடைந்தது. பிறகு அவருடைய இல்லத்திற்கே அவர் அழைத்து வரப்பட்டார். கடைசியில் 1936ஆம் ஆண்டு நவம்பர் 18ஆம் நாள் தூத்துக்குடியில் அவருடைய இல்லத்திலேயே அவர் அமரர் ஆனார்.[1]

### சாகும் தறுவாயிலும் நாட்டுப்பற்று

*1936 நவம்பர் 18* - உயிர்விடும் தறுவாயில் தேவாரத்தையோ, திருவாசகத்தையோ பாடச் சொல்லிக் கேட்பர் சைவர். ஆனால் சிதம்பரனாரோ, பாரதியாரின் நாட்டுப்பாடலைப் பாடச் சொல்லிக் கேட்டுக் கொண்டே உயிர் நீத்தார். "எந்தையும் தாயும் மகிழ்ந்து குலாவி இருந்ததும் இந்நாடே" என்று துவங்கும் பாடலும், "என்று தணியும் எங்கள் சுதந்திர தாகம்" என்ற முதலடி கொண்ட பாடலும்தான் வ.உ.சி. இறுதியாகக் கேட்ட கவிதைகள். "சாவதற்கு முன்னர்ச் சுதந்திரத்தைக் காணக் கொடுத்து வைக்காமல் போனேனே" என்று கண்களில் நீர் ததும்பக் கூறிய சொற்களே அவர் கூறிய கடைசிச் சொற்கள் ஆகும்.*

---

1. வ.உ.சி. வரலாறும், பணிகளும், ப. 286 (வ.உ.சி. சுப்பிரமணியத்தின் நேர்முகம்)

* கப்பலோட்டியத் தமிழன், பக். 103-104

# 'சுதேசி' சிதம்பரம் பிள்ளை

சுதேசிக்கப்பல் ஓட்டியவரல்லவா வ.உ.சி.! 1932-ஆம் ஆண்டில் சி.ஆர். ரெட்டி தலைமையில் நடைபெற்ற காங்கிரஸ் மாநாட்டில் வேலூர் குப்புசாமி முதலியார் வ.உ.சி. ஆகியோர் கலந்து கொண்டனர். வ.உ.சி. கதர் உடுத்தாமல் கைத்தறி ஆடை உடுத்தியிருந்தார். "வ.உ.சி. கதர் ஆடையை மறந்து விட்டாரா?" என்று கேட்கிறார். உடனே வ.உ.சி. "தாம் கதர்ச் சிதம்பரம் அல்ல; சுதேசிச் சிதம்பரம்பிள்ளை. நான் எப்பவும் கைத்தறி ஆடைதான் உடுத்துவேன்" என்று பதில் கூறினார்.[1] அவருடைய சுயசரிதை யிலும் இக்கருத்துப் பளிச்சென வெளிப்படுகிறது.

"சுதேசியம் வளர்த்ததைச் சொல்லுவேன் இனியே"[2]

என்று கூறுகிறார். இதில் அவருடைய சுதேசியப் பற்று தெளிவாக விளங்குகிறது. பிறிதோரிடத்தில்,

"சுதேசியம் வளர்க்குக, சொல்லுயிர் நீங்கினும்
இதேயென் பிரார்த்தனை"[3]

என்று சுதேசப்பற்றை வெளிப்படுத்துகிறார்.

---

1. வ.உ.சி. வரலாறும், இலக்கியப் பணிகளும், ப. 42
2. சுயசரிதை, ப. 38.
3. மேலது, ப. 74

# தொழிற்சங்கவாதி

சிறை மீண்ட பின்பு சென்னையில் சில ஆண்டுகள் வாழ்ந்தார். அப்போது திரு.வி.க., பேராசிரியர் திருமணம் செல்வக்கேசவராய முதலியார், பூவை. கலியாணசுந்தர முதலியார், வையாபுரிப்பிள்ளை அவர்களுடன் நட்புறவு பூண்டு ஒழுகினார். திரு.வி.க. அவர்களுடன் சேர்ந்து பஞ்சாலைத் தொழிலாளர் களுக்குச் சங்கம் ஏற்படுத்தினார். பெரம்பூரில் அஞ்சல் துறை ஊழியர்களுக்குச் (தபால் ஊழியர் சங்கம்) சங்கம் அமைத்தார்.[1]

சிறை செல்வதற்கு முன்பும் தொழிலாளர் நலனில் அக்கறை கொண்டிருந்தார். இன்றைய 'மதுராகோட்ஸ்' என்று அழைக்கப்படும் தூத்துக்குடி 'கோரல் மில்ஸ்' ஆங்கிலேயருக்கு அன்று சொந்தமானதாக இருந்தது. தொழிலாளர்களுக்குச் சரிவர ஊதியம் வழங்கப்படவில்லை. ஊதிய உயர்வும் இல்லை. அதனால் தொழிலாளர் வேலைநிறுத்தம் செய்தனர். அவர் களுக்கு வ.உ.சி.யும், சுப்பிரமணிய சிவாவும் தலைமை தாங்கினர். தொழிலாளர்களுக்கு வேண்டிய அனைத்து உதவிகளையும் தமது நிலபுலன்களை விற்றுச் சிதம்பரனார் செய்தார்.[2]

அத்துடன் சென்னை விவசாயக் கைத்தொழில் சங்கம், தரும சங்க நெசவுச்சாலை, தேசியப் பண்டக சாலை போன்றவற்றைத் தோற்றுவித்தார்.[3] ஒரு தொழிற்சங்கவாதியாகத் திகழ்ந்தார் என்றே கூறலாம்.

---

1. சுயசரிதை, ப. 156
2. வீரசுதந்திரம் வேண்டி நின்ற தமிழகத் தியாகிகள், ப. 17
3. வீரத்தியாகி வ.உ.சி. ப. 25

# பெண்மையைப் போற்றும் பெருந்தகையார்

"மனைவி அமைவதெல்லாம் இறைவன் கொடுத்த வரம்" என்று ஆன்றோர்கள் உரைப்பர். வ.உ.சி. தம்முடைய 23ஆவது வயதில் திருச்செந்தூரில் வாழ்ந்த சுப்பிரமணிய பிள்ளையின் மகளான வள்ளியம்மையை மணந்தார். வ.உ.சி.யின் குறிப்பறிந்து ஒழுகும் குணவதியாகத் திகழ்ந்தார் வள்ளியம்மை. வ.உ.சி.யின் பெற்றோரையும், உடன்பிறந்தாரையும் தம்முடைய உயிர் போலப் பாவித்து உள்ளன்புடன் வள்ளியம்மை பழகி வந்தார்.

"உயிரெனக் கருதி ஊழியம் புரிந்த
செயிர் இலா மனத்தள்; தெய்வமே அனையள்"[1]

வ.உ.சி.யின் மனங்கவர்ந்தவர் வள்ளியம்மை என்பதை அவரே தம்முடைய சுயசரிதையில் பாராட்டுகின்றார்.

"எனதொரு வடிவமும் எனக்குறு தொண்டுமே
கனவினும் நனவினும் கண்டு அவள் நின்றனள்"[2]

என்று பாராட்டுவார். வ.உ.சி. திருக்குறளை விரும்பிப் படிப்பவர். அவருடைய மனைவி வள்ளியம்மைக்கும் திருக்குறளில் மிகுந்த ஈடுபாடு உண்டு.

"வள்ளுவன் குறளை வளனுறப் படித்துக்
கொள்ளும் விதத்தில் கூறுவள் உரையுடன்"[3]

என்று வியந்து பாராட்டுவார். வ.உ.சி.யைப் போலவே வள்ளியம்மையும் சாதி வேறுபாடுகளுக்கு அப்பாற்பட்டவராக இருந்தார். தம் கணவரைப் போலவே எந்தவித வெறுப்பும் காட்டாமல், தம் வீட்டில் இருந்த இராமய்யதேசிகர் என்ற தாழ்த்தப்பட்ட இனத்தைச் சார்ந்தவரைத் தம் மகனைப் போலவே கவனித்து வந்தார். இராமய்யதேசிகருக்குக்

---

1. வீரசுதந்திரம் வேண்டி நின்ற தமிழகத் தியாகிகள், ப. 6
2. மேலது, ப. 6
3. சுயசரிதை, ப. 6

கண்பார்வை இல்லை. அவருக்குத் தம் கையாலே வள்ளியம்மை உணவு ஊட்டுவார். ஊரார் ஏச்சினையும், பேச்சினையும் உதறித் தள்ளிய உத்தமி வள்ளியம்மை. ஆயினும் வ.உ.சி.க்கு அவருடன் வாழக் கொடுத்து வைக்கவில்லை. திருமணமாகி ஐந்து ஆண்டு களிலேயே வள்ளியம்மை அகால மரணம் அடைந்தார்.

## உண்மை விளம்பி

பொதுவாகத் 'தன் வரலாறு' எழுதுவோர் தமக்கு விருப்பமில்லாத செய்திகளையும், தமக்கு இழுக்குத் தரும் செய்திகளையும் மறைத்துவிடலாம். இதற்கு விதிவிலக்கு 'சத்திய சோதனை'. அண்ணல் காந்தியடிகள் தம்முடைய சத்திய சோதனையில், "சொல்லியாக வேண்டிய" ஆபாசமான விஷயங்களைக் கூட நான் மறைக்கப் போவதில்லை. என்னுடைய எல்லாக் குற்றங்களையும் தவறுகளையும் வாசகர்க்கு அறிவிப்பேன் என்று நம்புகிறேன்"[1] என்று வெளிப்படையாக எழுதுவார். இது போன்றே வ.உ.சி.யும் தன்னுடைய சுயசரிதையில்,

"அறத்தினை என்றும் ஆற்றுவேன்; சொல்வேன்;
புறத்தினில் ஒன்றும் புகலேன்; கேளேன்;
சிந்தையைத் திருப்பிச் செலுத்துவேன் சில தினம்;
பெருமித மின்மையே பெருமையெனக்
கொள்வேன்;
அருமை யுடையவே ஆற்றுதல் புரிவேன்
நீதியில் என்றும் நிலையுற நிற்பேன்"[2]

என்று குறிப்பிடுவதைக் காணமுடிகின்றது.

1. மகாத்மா காந்தியின் சுயசரிதை (மொ.பெ.), ப. x
2. சுயசரிதை, பக். 32-33

# இலக்கியவாதி

வ.உ.சி. அவர்களுக்கு நாட்டுப்பற்றும் இலக்கியப்பற்றும் ஒருசேர அமைந்திருந்தன எனலாம். அவருடைய முன்னோர் களும் தமிழ்மொழியில் ஈடுபாடு கொண்டவர்கள். "கவிராயர் வீடு" என்றே அவருடைய வீடு அழைக்கப்பட்டது. சிறையில் இருக்கும் போது அவருடைய சுயசரிதையைக் கவிதை வடிவில் எழுதினார். தமிழ்மொழியில் தன்னுடைய சுயசரிதையைக் கவிதை வடிவில் எழுதிய முதல் மனிதர் வ.உ.சி. என்றே கூறலாம். பரலி.சு. நெல்லையப்பரின் வேண்டுகோளுக்கு இணங்கி வ.உ.சி. அவர்கள் இதை உருவாக்கினார்.[1] அவருடைய சுயசரிதை ஒரு வரலாற்று ஆவணம். அவருடைய குடும்ப வரலாறு; அக்காலச் சிறைக்கொடுமை ஆகியன சுயசரிதையில் இடம்பெறுகின்றன. வ.உ.சி.க்குக் கவிதை இயற்றும் திறமையும் இலக்கியத்தில் இருந்த ஈடுபாடும் சுயசரிதைக் கவிதைகள் மூலம் வெளியாகின்றன.

சிறைக்குச் செல்லுமுன் வீட்டில் தன் மைத்துனரைச் சுந்தரகாண்டம் படிக்குமாறு வ.உ.சி. வேண்டினார். கம்ப ராமாயணத்தில் அவருக்கு அத்துணை ஈடுபாடு.[2] வ.உ.சி. சிறையில் இருக்கும் பொழுது உயர்நீதி மன்றத்திலிருந்து, சிறையதிகாரிக்கு ஒரு கடிதம் வந்தது. அதன் பயனாகக் கடுமையான வேலை செய்வதி லிருந்து ஒய்வு கிடைத்தது. சொந்த உணவும், சொந்த உடையும், சொந்தப்படுக்கையும் அனுமதிக்கப்பட்டன. மனம் போல அவர் வேலை செய்யவும், காலைமாலை உலாவவும், நூல்கள் படிக்கவும், எழுதவும் அனுமதி வழங்கப்பட்டது. அதன் பயனாகச் சிதம்பரனார் சில ஆங்கில நூல்களைத் தமிழில் மொழி பெயர்த்தார்.[3] அறநூல்களும் எழுதப்பட்டன. 1) அகமே புறம், 2) வலிமைக்கு மார்க்கம், 3) மனம் போல வாழ்வு, 4) மெய்யறிவு, 5) மெய்யறம்.

---

1. சுயசரிதை தோற்றுவாய், ப. 5
2. வ.உ.சி. வரலாறும், பணிகளும், ப. 158
3. தமிழ்நாட்டுத் தவப்புதல்வர்கள், ப. 31

முதலில் அவருக்குச் சிறையில் துன்பகரமான சூழ்நிலை ஏற்பட்டது. கல் உடைத்தல், ஆட்டுத் தோலைச் சுத்தம் செய்தல், செக்கிழுத்தல் போன்ற கொடுஞ்செயல்களுக்கு அவர் ஆளாக்கப் பட்டார். ஆனால் நீதிமன்றம் அவருக்குச் சில சலுகைகளை வழங்கியது. அதன்படி அவருக்குக் கடுமையான வேலைகள் கொடுப்பது நிறுத்தப்பட்டது. எளிய வேலைகளைச் செய்யு மாறும், சிறையில் அவருக்குப் படிப்பதற்குப் புத்தகங்களைக் கொடுக்குமாறும் ஏற்பாடுகள் நடந்தன. பரலி. சு. நெல்லை யப்பரிடம் நன்னூல், தொல்காப்பியம், திருக்குறள், அகராதி, நிகண்டு ஆகியவற்றைக் கொடுத்தனுப்புமாறு வேண்டுகிறார்.[1] முகவூர் இராமசாமிக் கவிராயரிடம் "குற்றாலபுராணம்" எனும் நூலைக் கொடுத்தனுப்புமாறு வேண்டுகிறார். ஔவையின் நூல்கள், நான்மணிக்கடிகை, நன்னெறி போன்ற அற நூல்களில் இளம் பிராயத்திலேயே அவர் பெரிதும் ஈடுபாடு கொண்டு விளங்கினார்.[2] சிறையில் உடனிருந்த கைதிகளுக்கு நன்னூலைப் போதித்தார்; மெய்ப்பொருளையும் கற்றுத் தந்தார். சுயசரிதை தவிர தனிப்பாடல் திரட்டு என்ற கவிதைத் தொகுப்பும் அவரால் எழுதப்பட்டது.

1915ஆம் ஆண்டு தனிப்பாடல் திரட்டு வெளியிடப் பட்டது. இதில் 380 பாடல்கள் உள்ளன. இவற்றுள் 100 பாடல்கள் கடவுளைப் பற்றியன. 100 பாடல்கள் ஒழுக்கம் பற்றி உரைப்பன. எஞ்சிய 180 பாடல்கள் சுற்றத்தார்க்கும் நண்பர் களுக்கும் உறவுமுறைத் தொடர்பில் அமைந்தார்க்கும் எழுதப் பட்டவை. இவையனைத்தும் சிறைக்குச் செல்வதற்கு முன்பும், சிறையில் இருந்த காலத்தும் பாடப்பட்டவை. இப்பாடல் தொகுப்பில் 350 வெண்பாக்கள், 1 தாலாட்டுப்பாடல், 3 விருத்தப் பாடல்கள், 15 கட்டளைக் கலித்துறைப் பாடல்கள், 11 நிலைமண்டில ஆசிரியப்பாக்கள் ஆகியன அடங்கும்.

இறைவழிப் பாடல்களிலும் நாட்டு நலனே முதன்மை பெறுவதைக் காணலாம்.

"மன்னுயிர்கள்
இன்பமுறக் காத்தளிக்கும் என்சிவமே

---

1. வ.உ.சி. வரலாறும், பணிகளும், ப. 158
2. மேலது, ப. 164

என் நாட்டின்
துன்பமற நல்காயோ துப்பு"[1]

'என்னுடைய தேயம் எனக்கு'[2]

வ.உ.சி.யைச் சிறந்த ஆய்வாளர் என்றே கூறலாம். தொல்காப்பியத்திற்கு மிகுதியான பதிப்புகள் வாராதிருந்த கால கட்டத்தில் (1928) வ.உ.சி. தொல்காப்பிய இளம்பூரணர் உரைப் பதிப்பினை மேற்கொண்டார். பாடவேறுபாடுகளோ, உரை வேறுபாடுகளோ தரப்படும் பழக்கமில்லாத காலகட்டத்தில், பாடவேறுபாடுகளையும் உரை வேறுபாடுகளையும் வ.உ.சி. காட்டியுள்ளார். பழம்பெரும் ஏடுகளைத் துருவிப்பார்க்கும் அவருடைய ஆர்வம் "இன்னிலை" எனும் சிறந்த அறநூலைத் தமிழ் உலகிற்கு அறிமுகம் செய்துள்ளது. இவருடைய அரிய பெருஞ்செயல்கள் இவரைச் சிறந்த ஆய்வாளர் என்பதைக் காட்டுகிறது.

தொல்காப்பியம் தவிர திருக்குறள் மீது அபாரக் காதல் கொண்டவர். திருக்குறளை நன்கு படித்தார். மணக்குடவர் உரை கொண்டு திருக்குறளின் சிறப்புகளை தெளிவாகப் புரிந்து கொண்டார். சிறையிலிருந்து விடுதலை ஆன பின்பு திருக்குறளில் அறத்துப்பாலைப் பதிப்பித்து வெளியிட்டார்.

மணக்குடவர் உரையின் துணையுடன் தம்முடைய ஆய்வுக் கண்ணோட்டதில் வெளியான கருத்துகளையும் அந்த பதிப்பில் இணைக்கிறார். வ.உ.சி.யைப் பொறுத்தவரையில், "அறன் வலியுறுத்தல் எனும் அதிகாரமே பாயிரம்ஆக இருந்திருக்க வேண்டும் என்றும், கடவுள் வாழ்த்து, வான் சிறப்பு, நீத்தார் பெருமை ஆகியன இடைச் செருகல்கள்" என்றும் எழுதுகிறார். ஆனாலும் அவர் தம்முடைய கூற்றினை நிறுவிக் காட்டவில்லை.[3] வ.உ.சி.யின் வார்த்தைகளில் சொல்வதானால் "திருவள்ளுவ மாலையின் பாடல்களைப் பாடியவர்கள் திருவள்ளுவர் காலத்திற்குப் பிற்பட்ட காலத்தவர். அவர்களே திருக்குறளில் இடைச்செருக்கல்களாக பலவற்றை இணைத்திருக்கலாம்"[4] என்று எழுதுகிறார்.

---

1. பாடல் திரட்டு, ப. 20
2. மேலது, ப. 50
3. வ.உ.சி. வரலாறும், பணிகளும், ப. 187
4. மேலது, ப. 189

சில அதிகாரங்களில் குறள்களின் வரிசையமைப்பினை மாற்றியமைக்கிறார். சான்றாக வாய்மை எனும் அதிகாரத்தில் மூன்றாவது குறளான "தன்னெஞ்சறிவது பொய்யற்க" எனும் குறளை முதற்குறளாகவும், வாய்மை எனப்படுவது மற்றும் பொய்ம்மையும் வாய்மையிடத்து ஆகியவற்றை இரண்டு மூன்றாம் குறள்களாகவும் கொண்டார்.[1] சிறையில் இருந்தகாலை தம்முடைய ஆய்வுப் பணிக்கு, சிறைக்கு வெளியே இருந்த சான்றோர் பெருமக்களின் துணையை நாடியிருக்கிறார். கோவைச் சிறையிலிருந்து 1908ஆம் ஆண்டு செப்டம்பர் 14ஆம் நாள் (14-9-1908) தமிழ்த்தாத்தா டாக்டர் உ.வே.சாமிநாதையருக்கு ஒரு கடிதம் எழுதுகிறார். "திருக்குறளை ஆராய்ச்சி செய்து வருகிறேன். ஆங்கிலத்தில் மொழிபெயர்த்து எழுதிக் கொண்டிருக்கிறேன். சில ஐயங்கள் உள்ளன. அதற்கு விளக்கம் தேவை" என்று எழுதினார். உ.வே.சா. அவர்களும் வ.உ.சி அவர்கள் கேட்டனுப்பிய ஐயங்களுக்குரிய விடைகளை எழுதி அனுப்பினார்.[2] தன்னிச்சையாக எதையும் செய்யாமல் இலக்கியங்களை நன்கு படித்த சான்றோர் பெருமக்களின் துணையுடன் தம்முடைய இலக்கியப் பணியினை இனிதே ஆற்றினார்.

1. வ.உ.சி. வரலாறும், பணிகளும், ப. 187
2. என் ஆசிரியர் பிரான், ப. 81

# இலக்கியத் தொண்டர்

இக்காலத்தில் 'தமிழன்பன்' என்ற ஜெகதீசனை நாம் அறிவோம். கவிஞர் மு. மேத்தாவிற்கு மேத்தாதாசன் உண்டு. பாரதியின் பாரதிதாசனை அறிவோம். எழுபது ஆண்டுகளுக்கு முன்பு திருக்குறள் அன்பன் என்று தன்னை அறிமுகம் செய்துகொள்ள விரும்பிய அன்பர் யார் என்று தெரியுமா? அவர் வேறும் யாரும் அல்லர். வ.உ.சி. அவர்கள் தான். 1935இல் டாக்டர் உ.வே.சாமிநாதையர் அவர்களின் எண்பது வயது கொண்டாட்டத்தின் போது ஒரு வாழ்த்து மடல் அனுப்பினார். நிலைமண்டில ஆசிரியப்பாவின் 40 வரிகள் அடங்கிய பாடல். அப்பாடலின் இறுதிஇரண்டு வரிகளில்,

"தூத்துக்குடி வாழ் ஒட்டப்பிடாரம்
சிதம்பரம் என்னும் திருக்குறள் அன்பனே"[1]

என்று தன்னைத் "திருக்குறள் அன்பன்" என்று பெருமிதத்துடன் வெளிப்படுத்திக் கொள்கிறார்.

1934-இல் திருச்செந்தூர் திருமுருகப்பெருமான் திருமுன்பு கூட்டப்பெற்ற புலவர் பேரவையில் முப்பாலின் அறத்துப் பாலுக்கு மட்டும் இவர் எழுதிய விருத்தியுரை அரங்கேற்றம் பெற்றது.[2] தம்முடைய வாழ்வின் இறுதி நாட்களில் அன்றாடம் தம்முடைய வீட்டில் இலக்கியச் சொற்பொழிவுகளுக்கு ஏற்பாடு செய்வார். தமிழகத்தின் பல பகுதிகளிலிருந்து சிறந்த சொற் பொழிவாளர்கள் இந்த நிகழ்ச்சியில் பங்குகொண்டு சொற் பொழிவுகள் ஆற்றுவர். சொல்லின் செல்வர் ரா.பி. சேதுப் பிள்ளை போன்றோர் அடிக்கடி தூத்துக்குடிக்கு அழைக்கப் படுவர். குறிப்பாகக் கம்பன், திருக்குறள், சிவஞானபோதம் தொடர்பான சொற்பொழிவுகள் நடைபெறும். "தூத்துக்குடி சைவசித்தாந்த சபை" என்ற அமைப்பை நிறுவி, அதன் மூலம்தான் இத்தகைய சொற்பொழிவுகளை வ.உ.சி. அவர்கள்

---

1. டாக்டர் உ.வே.சாமிநாதய்யர் சதாபிஷேக வரலாறு, ப. 30.
2. வ.உ.சி. வரலாறும், பணிகளும், ப. 158

நடத்திவந்தார்கள். இந்தச் சொற்பொழிவுகளுக்கு வருபவர்களை வ.உ.சி. தம்முடைய இல்லத்திலேயே தங்கவைப்பார். வசதி குறைந்த நிலையிலும், வந்தோரை வரவேற்று உபசரிக்கும் எண்ணம் குறையாத வளமான எண்ணம் வ.உ.சி.க்கு இருந்தது. இத்தகைய சொற்பொழிவு குறித்து நடந்த ஒரு நிகழ்ச்சியை இங்கே நினைவுகூர்தல் நலம். எதிர்காலத்தில் மிகவும் பேரும் புகழும் பெற்ற தமிழறிஞர் ஒருவர் தம் இளமைப் பருவத்தில் நடந்ததை விவரிக்கிறார். தன்னைக் கவர்ந்த பெரியவர்களின் பட்டியலில் வ.உ.சி.யைப் பற்றி எப்படிச் சுவைபட எழுதுகிறார் தெரியுமா?

1931ஆம் ஆண்டு, வ.உ.சி. அவர்களுக்கு 59 வயது. 15 வயது இளைஞர் ஒருவர் தன் தந்தையாருடன் சைவ சித்தாந்தச் சபையில் சொற்பொழிவு ஆற்றுவதற்காகச் சென்றார். தூத்துக்குடிக்குச் சென்றார். அவரும் அவருடைய தந்தையாரும் வ.உ.சி. வீட்டில் தங்கினர். அந்த இளைஞருக்குத் தாங்கள் வ.உ.சி.யின் வீட்டில்தான் தங்கியிருக்கிறோம் என்று தெரியாது. முகக்ஷவரம் செய்யாத நிலையில் ஒரு முதியவர் அவ்வீட்டில் இருப்பதை அந்த இளைஞர் கண்டுகொள்ளவேயில்லை. அவருடைய தந்தையார் மூலம்தான். வ.உ.சி.யை அந்த இளைஞர் அடையாளம் கண்டுகொண்டார். தூத்துக்குடி சைவ சித்தாந்தச் சபைக்கு ஒரு தனிச்சிறப்பு உண்டு. மற்றைய ஊர்களைப் போலக் காலையிலும் மாலையிலும் அங்கு விழா நடைபெறாது. இரவு 9.30 மணிக்குத் தொடங்கி விடியற்காலை 3.30 மணி வரை நடைபெறும். காரணம் வருபவர் அனைவரும் வணிகர்கள். அதனால் கடையை மூடிவிட்டு இரவில்தான் வருவார்கள். அன்றைய இரவில் பேசப்போகும் பேச்சாளர் பட்டியலை வ.உ.சி. தயாரித்தார். சொல்லின் செல்வர் ரா.பி. சேதுப்பிள்ளையைப் பட்டியலில் கடைசியில் போடலாம் என்றார் வ.உ.சி. அனைவரும் ஒத்துக் கொண்டனர். ஆனால் அந்த இளைஞர் அதற்கு ஒத்துக்கொள்ளவில்லை. “அவர் என்ன கொம்பரா? அவருக்குப் பின்னால்தான் நான் பேசுவேன்” என்றார் அந்த இளைஞர். எல்லோருக்கும் ஒரே திகைப்பு. வ.உ.சி. எதிரிலேயே இப்படி மரியாதையில்லாமல் பேசுகிறார் இந்த இளைஞர் என்று அனைவரும் வியப்புடன் பார்த்தனர். அந்த இளைஞனுடைய தந்தை அவரைக் கடிந்து கொண்டார். ஆனால் வ.உ.சி. அதற்காக வருத்தப்படவில்லை; கோபப்படவுமில்லை. ‘அப்படியே

ஆகட்டும். ரா.பி. சேதுப்பிள்ளைக்குப் பின்னால் இந்தத் தம்பி பேசட்டுமே" என்று கனிவோடு பதில் கூறினாராம்.

ஆனால் அன்று இரவு நடந்ததோ வேறு. ரா.பி. சேதுப் பிள்ளை பேசி முடிக்க இரவு 1 மணிக்குமேல் ஆகிவிட்டது. வீறாப்புடன் பேசிய அந்த 15 வயது இளைஞர் 10.30 மணிக் கெல்லாம் மேடையின் பின்புறம் உறங்கிவிட்டார். சொல்லின் செல்வர் பேசி முடித்தவுடன் வ.உ.சி. அவர்கள், எல்லையற்ற அன்புடன் ஈரத் துணியால் அந்த இளைஞனின் முகத்தை துடைத்துத் தூக்கம் கலையுமாறு செய்தார். அந்த இளைஞரை சிறிது நேரம் தூக்கியும் வைத்துக்கொண்டு "பேசு பேசு" என்று ஊக்கப்படுத்தினாராம். அந்த இளைஞர் வேறு யாருமில்லை. 80 வயதுக்குமேல் நிறைவாழ்வு வாழ்ந்து அண்மையில் காலமான பேராசிரியர் அ.ச. ஞானசம்பந்தன் ஐயாதான்.[1] வ.உ.சி. எவ்வாறு இன்முகத்துடன் இளைஞர்களிடம் பழகினார் என்பதையும் இலக்கியச் சொற்பொழிவாளர்களுக்கு அவர் அளித்த நன்மதிப்பும் இதன் மூலம் புலனாகிறது அல்லவா? தூத்துக்குடி சைவசிந்தாந்தச் சபைக் கூட்டத்தின் முடிவில் ஒவ்வொரு நாளும் வ.உ.சி.யின் சிறுபிராயத் தீரச் செயல்கள் பற்றித் திறந்த வாய் மூடாது அனைவரும் கேட்டு வியப்படைவதும் உண்டு.[2] தூத்துக் குடியில் 1930களில் தமிழன், தமிழ் என்று சொல்லிக் கொண்டு வருவோர் போவார்க்கெல்லாம் வ.உ.சி. வீடு சொந்த வீடு போல "அடையாத வாசலை" உடையதாக இருந்தது.[3] வ.உ.சி. அவர்கள் சிறையிலிருந்து வெளிவந்த காலகட்டத்தில் காங்கிரஸ் இயக்கம் மிதவாதிகளின் கட்டுக்குள் வந்துவிட்டது. காந்தியடிகளின் வருகை, அவர் உருவாக்கிய ஒத்துழையாமை இயக்கம் ஆகியன கொஞ்சம் கொஞ்சமாக வலுப்பெற்றன. திலகரின் சீடரும், தென்னாட்டுத் திலகர் என்று போற்றப்பட்டவரான வ.உ.சி. தீவிர அரசியலில் இருந்து சற்று விலகியிருந்தார் என்றுதான் சொல்ல வேண்டும். சிறையிலிருந்து மீண்டகாலை, வழக்கறிஞர் தொழிலில் ஈடுபடமுடியாத சூழ்நிலை. சென்னை, கோவை, ஒட்டப்பிடாரம் என்று வாழ்ந்தார். குடும்பத்தைக் காப்பாற்ற வேண்டிய கடினமான சூழ்நிலை. இலக்கியப் பணியில் ஈடுபட்டார். புத்தக வெளியீடுகள் விறுவிறுப்புற்றன.[4]

1. நான் கண்ட பெரியவர்கள், ப. 30.
2. வ.உ.சி. வரலாறும், பணிகளும், ப. 159.
3. வ.உ.சி. வரலாறும், பண்பாடும், ப. 160
4. மேலது, ப. 160

இலக்கியப் பணியைப் பொறுத்தவரை அவருடைய கனவு அவர் மறைந்த பின்புதான் நிறைவேறியது. திருக்குறள் முழுமைக்கும் அவர் எழுதிய உரையை அவர் உயிரோடு இருந்தபோது அச்சிட்டு வெளியிட முடியவில்லை.[1] ஆனால் அவர் காலமான பின்பு திருக்குறள் முழுமைக்கும் அவர் எழுதிய உரை அச்சு வடிவம் பெற்றது.

பாலகங்காதர திலகர் பர்மாவில் (இன்றைய மியான்மார்) மாண்டலே நகரச் சிறையில் அடைக்கப்பட்டார். அப்போது கீதாரகசியம் என்ற நூலை எழுதினார்.[2] அந்த நூல் உலகப் புகழ் வாய்ந்தது. பண்டித ஜவஹர்லால் நேரு சிறையிலிருந்த போது தான் "நான் கண்டுணர்ந்த இந்தியா" என்ற அழகிய வரலாற்று நூலை எழுதி முடித்தார்.[3] அது போலவே சிதம்பரம் பிள்ளை அவர்களும் சிறையில் இலக்கியப் பணியைச் செவ்வனே செய்து முடித்தார் என்று கூறலாம். திருக்குறளின் 'அறத்துப்பாலை ஆங்கிலத்தில் மொழிபெயர்த்தார்' அவ்வாறு மொழிபெயர்ப்பில் ஈடுபடும்போது தமக்கு ஏற்பட்ட ஐயப்பாடுகளை உ.வே. சாமிநாதஅய்யர் அவர்களுக்குக் கடிதம் வாயிலாக எழுதித் தெளிவுபடுத்திக் கொண்டார்.[4] ஆங்கிலமொழியில் இருந்த தத்துவ நூல்களைத் தழுவி (ஜேம்ஸ் ஆலன் எழுதியவை) மனம் போல வாழ்வு, அகமே புறம், வலிமைக்கு மார்க்கம் என்ற நூல்களை[5] எழுதினார். அத்துடன் மெய்யறிவு, மெய்யறம் என்ற அறநூல்களைக் குறட்பாக்களை அடித்தளமாகக் கொண்டு எழுதினார்.

இலக்கியங்களைப் படைப்பதோடு அவருடைய பணியை வ.உ.சி. அவர்கள் நிறுத்திக் கொள்ளவில்லை. இலக்கியங்களைப் பிறருக்குப் போதிக்கும் நல்லாசிரியராகவும் விளங்கினார். ஒரு முறை சென்னையில் அச்சுக்கூடம் ஒன்றில் சுவாமி சகஜானந்தர் என்ற துறவியைச் சந்திக்கிறார்.[6] தாழ்த்தப்பட்ட வகுப்பைச் சார்ந்தவர் அவர். தன்னை "நந்தனார் சமூகத்தினர்" என்று வ.உ.சி.யிடம் சுவாமி சகஜானந்தர் அறிமுகம் செய்துகொண்டார்.

---

1. வ.உ.சி. வரலாறும், பணிகளும், ப. 158
2. வீரசிதம்பரனார், ப. 73
3. மேலது, ப. 73
4. என் ஆசிரியர் பிரான், ப. 81
5. வ.உ.சி. வரலாறும், பணிகளும், ப. 73
6. மேலது, ப. 76

வ.உ.சி. உடனே அவரைத் தன்னுடன் அழைத்துச் சென்றார். சகஜானந்தருக்குத் தமிழ்ப் பயிற்சி ஊட்டினார். அவருக்குத் தமிழ் இலக்கியங்கள் மற்றும் திருக்குறள், தொல்காப்பியம் ஆகியனவற்றைப் போதித்தார்.[1] பிற்காலத்தில் சிதம்பரத்தில் நந்தனார்க்கழகம், நந்தனார்ப் பாடசாலை ஆகியவற்றை அவர் ஏற்படுத்தினார். சகஜானந்தர் வ.உ.சி.யைப் பற்றிக் குறிப்பிடும் போது,

"சிதம்பரம் என் சற்குருவே"[2]

என்று வ.உ.சி.க்கு எழுதிய கடிதத்தில் அவரைப் பாராட்டுகிறார்.

இராஜாஜியும், வ.உ.சி.யிடம் திருக்குறள் பாடங்கேட்டார். வ.உ.சி. அவர்கள் நல்லாசிரியருக்கு இருக்க வேண்டிய சில நற்குணங்களைப் பெற்றிருந்தார். அதாவது முதல்நாள் தான் நடத்திய பாடங்களைப் பற்றி மறுநாள் கேட்பார். இராஜாஜியால் அவ்வாறு செயல்பட முடியவில்லை. சில நாட்களில் இராஜாஜி திருக்குறள் பாடங்கேட்க வருவதை நிறுத்திக் கொண்டார். "எனக்குப் பாடங் கேட்கும் பொறுமை இல்லை" என்று இராஜாஜி கூறினாராம்.[3]

சிறையிலிருந்து வெளிவந்த பின்பு வறுமை அவரை வாட்டியது. வழக்குரைஞர் தொழிலையும் செய்ய முடியாத சூழ்நிலை. சென்னையில் சில ஆண்டுகள் தங்கினார். சிந்தாதிரிப் பேட்டை, பெரம்பூர் போன்ற இடங்களில் அரிசி, நெய், பருப்பு போன்ற பொருள்களை விற்கும் வியாபாரியாக வாழ்ந்து வந்தார். அப்போதும் தமிழ்மொழி மீது அவர் கொண்ட ஆர்வம் குறைய வில்லை. பெரம்பூரில் அவர் வசித்து வந்தபொழுது, அக்கம் பக்கத்தில் இருந்த பல மாணவர்களை அழைத்து, அவர்களுக்கு இலவசமாகத் தமிழ்ப்பாடம் கற்பித்தார்.[4] திருக்குறள், மற்றும் நீதிநூல்களைப் போதித்தார். தமிழ் இலக்கியங்களில் அம்மாணவர்களுக்கு ஆர்வம் உண்டாகும் வண்ணம் செய்தார்.

## இலக்கியப் புரட்சியாளர்

வணிகக் கொடிபிடித்து வஞ்சக வலை விரித்து வளமார்ந்த திருநாட்டை வளைத்துக் கொண்ட வெள்ளை ஏகாதிபத்தியத்தின்

1. வீரசிதம்பரனார், ப. 76.
2. மேலது, ப. 157.
3. மேலது, ப. 157.
4. தில்லித் தமிழ்ச் சங்க மலர், ப. 86

வாணிப நோக்கத்தினை உச்சந்தலையில் அடித்திடும் வகையில் மெச்சத்தகுந்த பணியாற்றி, கப்பலோட்டி, அரசியலில் புரட்சி யாளராகத் திகழ்ந்த வ.உ.சி., இலக்கிய உலகில் பதினெண்கீழ்க் கணக்கு நூல்களுள் 'இன்னிலை'யையும் ஒன்றாக இணைத்து அவர் 1917களில் தொடங்கி வைத்துச் சென்ற புரட்சித்தீ இன்னும் அணையவில்லை. இலக்கியச் சர்ச்சை தீர்ந்த பாடில்லை. அரசியலில் புரட்சியாளராகத் திகழ்ந்த அஞ்சா நெஞ்சர் வ.உ.சி.; அன்னைத் தமிழ்மொழி வரலாற்றிலும் அழியாப் புரட்சி செய்த மாபெரும் இலக்கியப் புரட்சியாளர் என்றும் கூறலாம்.

## உயிர்க்கொலையை வெறுத்தவர் வ.உ.சி.

சிதம்பரம் பிள்ளை கடுங்காவல் தண்டனை பெறுவதற்குக் காரணமாக இருந்தவர் திருநெல்வேலி கலெக்டர் ஆஷ் துரைதான் என்று நினைத்தார் வாஞ்சிநாதன் என்ற இளைஞர். அவர் செங்கோட்டையைச் சார்ந்தவர். ஆஷ் பிரபு 1911ஆம் ஆண்டு ஜுலை மாதம் 17ஆம் நாள் கொடைக்கானலுக்கு இரயிலில் போய்க்கொண்டிருக்கிறார். வாஞ்சிநாதன் என்ற அந்த இளைஞரும் இரயிலில் அவருடன் பயணம் செய்து கொண்டிருக்கிறார். இரயில் மணியாச்சி நிலையத்தை நெருங்கியதும், வாஞ்சிநாதன் ஆஷ் துரையைத் துப்பாக்கியால் சுட்டுக் கொல்கிறார். தம்மையும், அவர் அதே துப்பாக்கியால் சுட்டுத் தற்கொலை செய்து கொள்கிறார். அதுவும் எப்படி? அதே துப்பாக்கியின் முனையைத் தம் வாயில் வைத்துச் சுட்டுக் கொள்கிறார். அவர் தலை சுக்கல்சுக்கலாகத் தெறித்து அடையாளம் தெரியாமல்தான் ஆகிவிட்டது. ஆனால் யாரோ ஒரு வழிப்போக்கர் அடையாளம் கண்டுபிடித்துக் கூறி விட்டார். அது மட்டுமன்று. அவர் சட்டைப்பையில் இருந்த சில கடிதங்களி லிருந்து அவர் வாஞ்சிநாதன் என்பதும் ஆங்கிலேயரைச் சுடக் காரணம் என்ன என்பதும் புரிந்தன. "வ.உ.சி. கடுங்காவல் தண்டனை பெறக் காரணம் இந்த ஆஷ் துரைதான். ஆகையால்

1. இலக்கியப் புரட்சியாளர், வ.உ.சி. ப. 27
2. வீரத்தியாகி வ.உ.சி, ப. 86

அவர் என்னால் சுடப்படவேண்டியவரே" என்று கடிதங்களில் காணப்பட்டது. இந்தச் செய்தி சிறையிலிருந்த சிதம்பரனாருக்கு எட்டியது. அவர் மிகவும் வருந்தினார்.

"ஆங்கிலேயரை இந்த நாட்டைவிட்டு வெளியேற்றியே தீர வேண்டும். ஆனால் அவர்கள் உயிரைக் கொலைசெய்து வெளியேற்றக் கூடாது. உயிரோடு அவர்களை வெளியேற்ற வேண்டும். இப்படிப்பட்ட பலாத்கார முறையினால் சுதந்திரம் கிடைக்காது. கிடைத்தாலும் அந்தச் சுதந்திரத்திற்குப் பெருமையே இருக்காது" என்று அவர் சிறையிலிருந்து தம் நண்பர் ஒருவருக்கு எழுதிய கடிதத்தில் குறிப்பிட்டிருக்கிறார்.[2] இதிலிருந்து பலாத்காரத்தை வ.உ.சி. எந்த அளவுக்கு வெறுத்தார் என்று புரியும்.

1. *வீரத்தியாகி வ.உ.சி, ப. 87*
2. *மேற்படி, ப. 88*

## வ.உ.சி.யின் இளகிய மனசு

ஒருமுறை வ.உ.சி. அவர்கள் தஞ்சை சென்றிருந்தார். அங்குச் சீனிவாசப்பிள்ளையின் வீட்டில் விருந்தினராகத் தங்கியிருந்தார். அப்போது இவருக்குப் பால் கொண்டு வந்த பாத்திரத்தில் எறும்புகள் இருந்தன. அவற்றைப் பணியாள் மெல்லப் போக்கினான். அது கண்ட சீனிவாசப்பிள்ளை விரைவில் எறும்புகளை அகற்றுமாறு ஆணையிட்டார். எறும்புகள் எல்லாவற்றையும் சேதமில்லாமல் அந்த வேலையாள் உயிருடன் நீக்கினார். இந்தச் செயலைப் பார்த்துக் கொண்டிருந்த சிதம்பரம் பிள்ளை அவர்கள் கண்களிலிருந்து ''கண்ணீர்'' வடிந்தது. அப்போது வ.உ.சி. கூறியது என்ன தெரியுமா?"

"தன்னுயிர் நீப்பினும் செய்யற்க தான்பிறிது
இன்னுயிர் நீக்கும் வினை"

என்ற திருக்குறளுக்கு எடுத்துக்காட்டாக இவருடைய செயல் இருக்கிறது"[1] என்றாராம். ஈயெறும்புகளிடத்தில்கூட இரக்கம் காட்டும் ஈரநெஞ்சினர் வ.உ.சி.

வ.உ.சி.க்கு விதிக்கப்பட்ட சிறைத்தண்டனைச் செய்தியால் மனநிலை குலைந்தார் அவருடைய தம்பி. திரு. மீனாட்சிசுந்தரம். தமது மறைவிற்குப் பின் உணவுக்கும் உடைக்கும் தம்பி இடர்ப் படக் கூடாதே என்று வ.உ.சி. எண்ணி வருந்தினார்கள். திருநெல்வேலி மாவட்டத்தில் எந்த ஓர் உணவு நிலையத்தில் "சிற்றப்பா (மீனாட்சிசுந்தரம்) அவர்கள் சாப்பிடச் சென்றாலும், உணவு அளிக்கும்படியும் துணிக்கடைகளில் அவர்களுக்கு வேட்டிதுண்டு கொடுக்கும்படியும் அதற்குரிய பணத்தைத் தம்மிடம் எழுதிப் பெற்றுக் கொள்ளலாம் என்றும் அறிவித்திருந் தார்கள் (வாய்மொழி, துண்டுக் காகிதம் மூலமாக). அதே மாதிரி சில ஆண்டுகள் செய்தும் வந்தார்கள்"[2] என்று வ.உ.சி.யின் மகனார் கூறுவதுண்டு. வ.உ.சி. மறைந்த பின்பு ஏழு ஆண்டுகள்

1. இ.மு. சுப்பிரமணிய பிள்ளை வீரர், வ.உசி. ப. 2.
2. வ.உ.சி. வரலாறும், பணிகளும், ப. 286 (வ.உ.சி. சுப்பிரமணியத்தின் நேர்முகம்)

கழித்து (1943) குணம் அடையாத நிலையிலேயே மீனாட்சி சுந்தரம் அவர்கள் காலமானார்.

1906ஆம் ஆண்டு வ.உ.சி.க்குத் தூத்துக்குடியைச் சேர்ந்த ஏ.சி.எஸ். கந்தசாமிச் செட்டியார் வீடு தந்து உதவியதுடன் ரூபாய் 100ம் கொடுத்தார்.[1] வ.உ.சி.யின் குடும்பச் சூழல் அவ்வாறு இருந்தது. அப்படிப்பட்ட நிலைமையிலும் 1906ஆம் ஆண்டில் கோரல்மில் போராட்டத்தின்போது வ.உ.சி. தம் வீட்டு நகைகளை அடகு வைத்துத் தொழிலாளர்களுக்கு உணவளித்த நிகழ்ச்சி வ.உ.சி.யின் இளகிய மனத்தைக் காட்டுகிறது.[2]

1922இல் வாலேசுதுரையின் உதவியால் மீண்டும் வழக்கறிஞராகப் பணியாற்றும் வாய்ப்பினைப் பெற்றார். ஒட்டப்பிடாரம் தாலுகாவின் தலைநகர் கோவில்பட்டி ஏழை எளியவர்க்கும் இல்லாதவர்க்கும், இன்தமிழ்ச் செல்வர்களுக்கும் வ.உ.சி. ஒரு சடையப்ப வள்ளல்ஆக விளங்கினார். அக்கால வெள்ளை அரசு, பல தேசபக்தர்களின் மீது (எம்.எஸ். சுப்பிரமணிய அய்யர், ந. சோமயாஜுலு) கோவில்பட்டி நீதிமன்றத்தில் அரசு நிந்தனை வழக்குகளைத் தொடர்ந்தது. அவர்கள் சார்பில் வ.உ.சி. கைம்மாறு ஏதுமின்றித் தோன்றி நியாயம் தேடித்தந்தார்.

1. வ.உ.சி. வரலாறும், இலக்கியப் பணிகளும், ப. 290
2. மேலது, ப. 290
3. வீரர் சிதம்பரம்பிள்ளை, ப. 74

# வ.உ.சி. சிறந்த பேச்சாளர்

இருபதாம் நூற்றாண்டின் தொடக்கத்தில் வ.உ.சி. அவர்களின் சொற்பொழிவு அனைவரையும் குறிப்பாகத் திருநெல்வேலி பகுதி மக்களை வீறுகொண்டெழச் செய்தது. அன்றைய ஆங்கில அரசின் ஆவணங்களும் வ.உ.சி.க்கு எதிராக நடத்தப் பெற்ற வழக்கில் வழங்கப்பெற்ற தீர்ப்புகளும், இந்து, சுதேசமித்திரன் போன்ற நாளிதழ்களும் இது தொடர்பான செய்திகளைப் பதிவு செய்துள்ளன.[1] 1907ஆம் ஆண்டு வ.உ.சி.யின் சொற்பொழிவினை முதன்முதலாகக் கேட்ட பேராசிரியர் வையாபுரிப்பிள்ளை, "அந்நிய அரசாங்கத்தினர் நாம் சிறிதும் முன்னேற வொட்டாதபடி வாணிகம் முதலியன புரிந்து நம் நாட்டுச் செல்வத்தைச் சுரண்டிக் கொண்டு போவதைக் குறித்து விஸ்தாரமாகப் பேசினார். ஒவ்வொருவரும் தேசாபிமான முடையவராக இருத்தல் வேண்டும் என்று வற்புறுத்தினார்"[2] என்று தம்முடைய நூலில் குறிக்கிறார்.

தூத்துக்குடியில் சிதம்பரம் பிள்ளை அவர்கள் முடிசூடா மன்னனாய் விளங்கினார்.[3] இவருடைய எழுச்சியூட்டும் பேச்சும், அதன்மூலம் விளைந்த போராட்ட உணர்வுகளும் குறித்து இந்து[4] (5-3-1908; 6-3-1908) பத்திரிகையில் விரிவான செய்திகள் வெளிவந்தன. சிதம்பரனாரின் வீரமிகு பேச்சு கரைபுரண்டு ஓடும் வெள்ளம்போல இருந்தது[5] மக்களைத் திரட்டி, குறிப்பாகப் பாமர மக்களை ஒன்று சேர்த்து அவர்களுக்கு அரசியலைப் புரிய வைத்தவர் வ.உ.சி. அரசியல் வழியாகச் சிந்திக்கவும் செயல் படவும் பாமர மக்களைப் பயிற்றுவித்தவர் அவர். 'முரசம்' போன்ற தம் பேச்சால் இருபதாம் நூற்றாண்டின் தொடக்கத்தில் தமிழ்நாட்டில் சிறப்பாகத் திருநெல்வேலி மாவட்டத்தில் அரசியல் எழுச்சியை ஏற்படுத்திய பெருமை வ.உ.சி.யின் தனி உடைமை.

1. வ.உ.சி. வளர்த்த தமிழ், ப. 2.
2. மேலது, ப. 3
3. வ.உ.சி. வளர்த்த தமிழ், ப. 6.
4. மேலது, ப. 7
5. மேலது, ப. 8

# வ.உ.சி.யும் பத்திரிகை தொடர்பும்

வ.உ.சி. அவர்கள் விவேகபாநு எனும் இதழோடு தொடர்பு கொண்டிருந்தார் என்று ஆய்வாளர்கள்[1] கருதுகிறார்கள் விவேகபாநு என்பது இருபதாம் நூற்றாண்டின் தொடக்கத்தில் வெளிவந்த ஒரு தமிழ்த்திங்கள் இதழ். முதன்முதலில் குற்றாலத்திலிருந்தும் தூத்துக்குடியிலிருந்தும் வெளிவந்தது. அந்த ஓராண்டில் அவ்விதழ் இரண்டு ஆசிரியர்களைக் கண்டது.[2] விவேகபாநுவின் முதல் இதழில், "இப்பத்திரிகையின் க்ஷேமத்தைக் கருதும் சில கனவான்கள்" என்ற குறிப்பு இடம் பெறுகிறது.[3]

"விவேகபாநுவை வெளிவரச் செய்தேன்"

என்று வ.உ.சி. தன்னுடைய சுயசரிதையில் குறிக்கிறார். அப்படியானால் விவேகபாநுவை நடத்தியவர்கள் பெரும்பாலும் திருநெல்வேலி மாவட்டத்துச் சைவப் பிள்ளைமார் வகுப்பைச் சார்ந்த அறிஞர் பெருமக்களாக இருக்கலாம். அந்தக் குழுவில் வ.உ.சி.யும் இடம்பெற்றிருக்கலாம்.

முதல் இரண்டு ஆண்டு காலம் குற்றாலத்திலிருந்தும் தூத்துக்குடியிலிருந்தும் வெளிவந்த விவேகபாநுவின் வரலாறு மதுரையில் தொடருகிறது.[4] மதுரையிலிருந்து விவேகபாநு 1902 தொடங்கி 1909 வரை வெளிவந்தது. மகாகவி சுப்பிரமணிய பாரதியின் 'தனிமையிரக்கம்' எனும் முதல் கவிதை 1904ஆம் ஆண்டு சூலை மாதஇதழில் வெளிவந்தது[5]

---

1. வ.உ.சி. வரலாறும், இலக்கியப் பணிகளும், அ. சங்கர வள்ளிநாயகம் - நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் (பி) லிட்., சென்னை-98. இர. பதி. 94, ப. 24
2. வ.உ.சி. வளர்த்த தமிழ், மா.ரா. அரசு, உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம், 2002, ப. 26.
3.
4. வ.உ.சி. வளர்த்த தமிழ், மா.ரா. அரசு, உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம், 2002, ப. 38.
5. மேலது, ப. 40.

விவேகபாநு பத்திரிகை மிகச் சிறப்பாக இருப்பதாகத் தமிழ்த் தாத்தா[1] கூறுவதுண்டு. அதன்பிறகு விவேகபாநு தென்னாப்பிரிக்காவிலுள்ள டர்பனுககு இடம்பெயர்ந்தது. வ.உ.சி.யின் பல நூல்களுக்கான மதிப்புரைகள் டர்பன் விவேக பாநுவில் வெளிவந்துள்ளன. வ.உ.சி. அவற்றைத் தம்முடைய நூல்களில் எடுத்தாண்டுள்ளார். பிறையாறு, திரு. சொ. விருத்தாசலம்பிள்ளை அவர்கள் 1900ஆம் ஆண்டில் நேடாலில் குடியேறினார். 1912ஆம் ஆண்டில் ஆங்குச் சரஸ்வதி விலாச அச்சகத்தைத் தொடங்கினார் விவேகபாநு என்னும் பத்திரிகையை நடத்தினார்.[2]

விவேகபாநு உணர்த்தும் பேருண்மை ஒன்று உண்டு. அது வ.உ.சி.யின் தத்துவ ஈடுபாடு பற்றியதாகும்[3]

## இந்துநேசன் இதழோடு தொடர்பு

தம் தந்தையார் இந்துநேச பத்திரிகைக்குச் சிறிது காலம் ஆசிரியராக இருந்ததாக வ.உ.சி. அவர்களின் மகன் தம்முடைய கட்டுரையில்[4] குறிப்பிடுகிறார். ஆனால் இக்கூற்று எவ்வகையிலும் பொருந்தாது என்பது ஆய்வாளர்கள்[5] கணிப்பு. அவர் கணிப்புக்குப் பொருத்தமாக வாதங்களை ஈண்டு நினைவுகூரல் சாலவும் பொருந்தும்.

1906 வரை மு. வீரராகவாச்சாரியர் இந்துநேசன் பத்திரிகையின் ஆசிரியர். அவருக்குப்பின் ல. சுந்தரராஜ அய்யங்கார் ஆசிரியரானார். 1930களில் ல. அனந்தய்யர் ஆசிரியராக இருந்தார். அவருடைய மறைவுக்குப்பின் லட்சுமி காந்தன் என்பவர் பொறுப்பில் வந்தது. அவர் காலத்தில் இந்த இதழ் எல்லாத் தகுதிகளையும் இழந்து 'மஞ்சள் பத்திரிகை' என்ற நிலைக்குத் தாழ்ந்தது. இந்த இதழோடு வ.உ.சி. அவர்களுக்குத் தொடர்பு இருக்கும் என்று கற்பனை செய்துகூடப் பார்க்க முடியவில்லை. ஆனால் வ.உ.சி. சுப்பிரமணியம் 1956இல் கலைக்

1. வ.உ.சி. வளர்த்த தமிழ், மா.ரா. அரசு, உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம், 2002, ப. 40.
2. வ.உ.சி. வளர்த்த தமிழ், மா.ரா. அரசு, உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம், 2002, ப. 44.
3. மா.ரா. அரசு, ப. 45.
4. மேலது, ப. 47.
5. மேலது, ப. 51.

களஞ்சியத்தில் தாம் எழுதிய வ.உ.சி. பற்றிய கட்டுரையில் மீண்டும் இதே செய்தியைக் குறித்துள்ளார்![1] ஆகவே வ.உ.சி. அவர்கள் தொடக்க காலத்தில் விவேகபாநு இதழ் தொடங்க ஆதரவு நல்கி யிருக்கக் கூடும். ஆனால் பத்திரிகைகளில் கட்டுரைகளை எழுதி வழங்குவார். கலைச்சொல்லாக்கம் குறித்தும் காரசாரமான விவாதங்களில் பத்திரிகை மூலமாக வ.உ.சி. அவர்கள் தன்னுடைய மொழிப்பற்றை வெளிப்படுத்திக் கொள்ளத் தவறியதில்லை.

## சாமர்த்தியசாலி

போலீஸ் நிர்வாகத்தில், வெளிப்படையாக அந்தக் கூட்டத்தில் சேராத உளவுக்காரர்களும் இருக்கிறார்கள். இது இன்றும் உண்டு. வ.உ.சி.யைக் கண்காணித்து அவ்வப்போது அரசாங்கத்திற்குச் செய்தி சொல்வதற்குச் சிலர் நியமிக்கப் பட்டிருந்தனர். டாக்டர் தி.சே. சௌ. ராஜன் என்பவர் வ.வே.சு. ஐயருக்கும் நண்பர். வ.உ.சி.க்கும் மிக நெருங்கிய நண்பர். அவர் திருச்சியில் இருந்தபோது வ.உ.சி. ஒருமுறை அவரைக் காணச் சென்றார். வ.உ.சி.யின் மூட்டை முடிச்சுகளை ஒரு வேலையாள் தூக்கி வந்தான். திரு. ராஜன் அவர்கள் வ.உ.சி. அவர்களிடம் இது குறித்துக் கேட்டார். ஏனென்றால் வ.உ.சி.க்கு வேலைக் காரன் ஒருவனை உடன் அழைத்துவரும் வசதி இல்லை. அதற்கு வ.உ.சி. பதில் கூறினார். "இவன் அரசாங்க உளவாளி. என்னைக் கண்காணித்து அரசுக்குச் செய்திகளைச் சொல்வான். நானே அவனிடம் நட்புடன் பேசி என்னுடைய பயணம் பற்றிய விவரங்களை எல்லாம். சொல்லி என்னுடைய வேலையாளாக வைத்துக் கொண்டு விட்டேன். அவனுக்குச் சம்பளம் சர்க்கார் கொடுக்கும். வேலை செய்வது எனக்கு" என்று கூறினார். இவ்வாறு வெள்ளை அரசாங்கத்திற்கே கடுக்காய் கொடுத்த திறமைசாலி வ.உ.சி.[3]

வ.உ.சி.யின் மறைவுக்குப் பின்னர் 1939இல் சென்னை இராயப்பேட்டை காங்கிரஸ் மண்டபத்தில் அவருடைய சிலையைச் சத்தியமூர்த்தி அவர்களின் தலைமையில் திறந்து வைத்தவர் இந்த டி.எஸ்.எஸ். ராஜன் என்பதை நாம் நினைவில் கொள்ள வேண்டும்.

---

1. கலைக்களஞ்சியம், தொகுதி 4, ப. 663.
2. வ.வே.ஸு ஐயர், பக். 2-3..
3. மேற்படி, முன்னுரை.

# வ.உ.சி.யின் 'மெய்யறிவு'

கண்ணனூர் சிறையில் இருக்கும்பொழுது அங்கிருந்த கைதிகளுக்கு அறக்கருத்துகள் பற்றி அடிக்கடி அறிவுரை சொல்லி வருவார். அவர்கள் வேண்டுகோளுக்கிணங்க, மிக எளிய சொற்றொடர்களில் உயரிய அறக்கருத்துகளை உள்ளடக்கி மெய்யறிவு என்ற நூலைக் கவிதை வடிவில் இயற்றினார். உண்மையில் சிறைக்கைதிகள் திருந்துவதற்காக இந்நூல் இயற்றப்பட்டது. ஆனால் உலகமக்கள் அனைவர்க்கும் பயன் தரும் வகையில் இந்த நூல் அமைந்துள்ளது. சிறையிலிருந்து அவர் மீண்ட பின்பு திருமணம் செல்வக் கேசவராய முதலியார் முன்னிலையில் பழைய மரபுப்படி அரங்கேற்றப்பட்டது. இந்நூல் திருக்குறளை அடியொற்றிச் சமயஞ்சார்ந்த அறநூலாக அமைந்துள்ளது. இதில் 10 அதிகாரங்கள் உள்ளன. அவை பின்வருமாறு:

1. தன்னையறிதல், 2. விதியியலறிதல், 3. உடம்பை வளர்த்தல், 4. மனத்தையாளுதல், 5. தன்னிலையில் நிற்றல், 6. மறங்களைதல், 7. அறம்புரிதல், 8. தவஞ்செய்தல், 9. மெய்யுணர்தல், 10. மெய்ந்நிலையடைதல்

இவற்றில் தள்ள வேண்டிய, ஏற்க வேண்டிய பல்வேறு அறக்கருத்துகள் செவ்வனே இடம்பெற்றுள்ளன. மருத்துவம், உடலியல் ஆகிய துறைகள் பற்றிய சிறந்த கருத்துகள் இந்நூலில் காணப்படுகின்றன. இந்த நூலில் திருக்குறள் முதலிய அற நூல்களின் தாக்கம் இடம்பெற்றுள்ளது. வ.உ.சி. பல இடங்களில் பிற அற நூல்கள் கூறியுள்ள அறங்களிலிருந்து மாறுபடுகின்றார். நீதி உணர்த்துவதற்காக விளி உத்தி, முரண் உத்தி, அணி உத்தி ஆகியவற்றை வ.உ.சி. கையாண்டுள்ளார். நீதி இலக்கியங்கள் கையாளும் இத்தகைய விளி மரபினை வ.உ.சி.யும் கையாண்டுள்ளார். திருக்குறள், சிறுபஞ்சமூலம், ஆசாரக் கோவை, திருமந்திரம், சைவசித்தாந்தம் ஆகிய நூல்களின் கருத்துத் தாக்கமும், சித்தர், ஔவையார், தாயுமானவர், இராமலிங்கர் ஆகியோருடைய பாடல்களின் கருத்துத் தாக்கமும் இந்நூலில் அமைந்துள்ளன.[1] இந்நூலின் மரபுச் சொற்களை அவர்

1. வ.உ.சி. வரலாறும் இலக்கியப் பணிகளும், ப. 59.

கருத்திற்கேற்ப ஆக்கிக் கொண்டுள்ளார். வ.உ.சி. வடசொற்களை மெய்யறிவு என்ற நூலில் சற்று மிகுதியாகவே பயன்படுத்தி யுள்ளார். இப்பயன்பாடு அவர் காலத் தமிழ் நடைக்குச் சான்று ஆகலாம். (மார்க்கம், பதார்த்தம், ஏகம், கர்த்தா) ஆயினும் சில வடசொற்களைத் தமிழ் ஒலிக்கேற்ப மாற்றியும் வ.உ.சி. அவர்கள் பயன்படுத்தியுள்ளார். (மோட்சம் - மோக்கம்) இந்த நூலில் ஆய்த எழுத்துப் பயிலும் சொற்களை மிகுதியும் பயன் படுத்துகிறார் (அஃதன், அஃதடுத்து, எஃது, அஃது, இஃதிஃது).

## விதி பற்றிய வ.உ.சி.யின் கோட்பாடு

வ.உ.சி.யின் தந்தையார் இறை நெறிக்கொள்கையில் இமாலய உறுதி பூண்டவர். வ.உ.சி.யும் ஆத்திகர் தான். ஆனால் வெற்றுமதச் சடங்குகளில் அவருக்கு நம்பிக்கை கிடையாது.[1] "திருக்குறள் அறத்துப்பால்" உரைநூல் அரங்கேற்றம் திருச்செந்தூரில் நிகழ்ந்தது. அப்போது அவர் திருச்செந்தூரில் முருகப்பெருமானுக்குக் காவடி எடுத்தார்.[2]

'ஆகூழும் போகூழும் வினையால் வருவன. இறைவனால் வருவனவாகா' என்பதில் வ.உ.சி. உறுதியாக இருந்தார். மெய்யறிவு என்ற தம்முடைய நூலில்,

> "விதிவிதியென்று ஆழ்கின்றார் வீணாகத் துன்பில்
> விதிவிதிக்கத் தம்மையன்றி வேறு - பதியொருவன்
> உண்டென்று நம்பி ஒரு சிலரிங் கன்னாரிற்
> கண்டறியேன் பேதையரைக் காண்"[3]

என்று பாடியுள்ளார். விதிக்குத் தானே யாவான் எனவும், இறைவனல்லன் எனவும் வ.உ.சி. உறுதிபடக் கூறுகின்றார். திருக்குறள் வலியுறுத்தும் உலைவின்றி முயலுவதால் ஊழினையும் வெல்ல முடியும் என்ற கருத்தினை வ.உ.சி. ஏற்றுக் கொள்கிறார். ஆனால் 'ஊழிற் பெருவலி யாவுள" என்ற கருத்தினை ஏற்க அவர் உடன்படவில்லை.[4]

1. வ.உ.சி. வரலாறும் இலக்கியப் பணிகளும், ப. 288 (நேர்முகம்).
2. மேலது, ப. 291 (நேர்முகம்).
3. மெய்யறிவு விதியியல் அறிதல், பா. 1.
4. மெய்யறம், ப. 621.

# மெய்யறம்

திருக்குறளை முதனூல் என்றும், திருக்குறளின் வழிநூல் "மெய்யறம்" என்றும் வ.உ.சி. குறிப்பிடுகின்றார். இந்நூலின் முன்னுரையில் தஞ்சை இராவ்பகதூர் சீனிவாசப்பிள்ளை அவர்களுக்கு இந்நூலைக் காணிக்கை ஆக்கியுள்ளார்.[1] வள்ளுவர் 7 சீர்களில், ஒண்ணே முக்கால் அடியில் குறளை இயற்றினார். ஆனால் வ.உ.சி.யின் மெய்யறப் பாடல்கள் ஒரே அடியில் அமைந்தவை. அறம் பொருள், இன்பம், வீடு என்னும் நான்கு உறுதிப் பொருள்களை அடைதலே இந்நூல் கூறும் பயன் என்று கொள்ளலாம். ஓரளவு எழுதப் படிக்கத் தெரிந்தவர்களும் படித்துப் புரிந்துகொள்ளும் அளவில் அமைந்தது இந்தக் கவிதை நூல். இந்நூலில் ஐந்து இயல்கள் உள்ளன. அவையாவன:

1. மாணவரியல், 2. இல்வாழ்வியல், 3. அரசியல், 4. அந்தணவியல், 5. மெய்யியல். மொத்தம் 125அதிகாரங்கள் ஒவ்வொரு அதிகாரத்திற்கும் 10 பாடல்கள் (ஓரடி) அமைந்துள்ளன.

> அந்தணர் என்போர் அறவோர் மற்றெவ்வுயிர்க்கும்
> செந்தண்மை பூண்டு ஒழுகலான் (குறள்.)

> அந்தணர் அறத்தொடு செந்தண்மை பூண்டவர்
> (அந்தணரியல்பு, 1)

திருக்குறள் பாடல்களின் பிழிவே மெய்யறம் எனலாம். ஆயினும் திருக்குறளே யன்றி ஆத்திசூடி, கொன்றை வேந்தன், திரிகடுகம், கலித்தொகை, தொல்காப்பியம் நன்னூல், புறப்பொருள் வெண்பாமாலை தண்டலையார் சதகம் ஆகிய நூல்களின் கருத்துகளின் அடிப்படையிலும் வ.உ.சி. தமது கருத்துகளை வழங்கியுள்ளார். அறநூல்களுள் எந்த நூலும் கூறாத 'இல்லமைத்தல்' என்ற அதிகாரத்தை வ.உ.சி. வழங்கியிருப்பது சிறப்பாகப் பாராட்டுக்குரியது. தமிழில் கூவ நூல் என்பது வெளி வந்துள்ளது. பொறியியலாளர் சொல்லத்தக்கதுமான வீட்டமைப்பினை வ.உ.சி. பின்வருமாறு விரித்துரைக்கிறார்.

---

1. வ.உ.சி. வரலாறும் இலக்கியப் பணிகளும், ப. 39.

இல்லிற்கு ஈராயிரம்அடி சதுரமாம் (இல்லமைத்தல் 4)

வளிஒளி அளவினுள் வரச்செல வழிசெயல்
(இல்லமைத்தல் 7)

என்ற பாடல் வரிகள் வ.உ.சி. அவர்கள் மனையடி சாத்திரக் கலையறிவினையும் பெற்றவர் என்பதை உறுதிப்படுத்துகிறது.

தமது காலத் தேவைக்கேற்பப் புதுமை அதிகாரங்கள். சில வற்றையும் வ.உ.சி. படைத்துள்ளார். அறநூலார் எவரும் குறிப் பிடாத புதுமை அறங்களைத் தமது நூலில் அவர் குறிப்பிடுகிறார்.

## துணைநூற் பட்டியல்

1. அரசு, மா.ரா., வ.உ.சி. வளர்த்த தமிழ், உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம், 2002.
2. அரசு. வீ., (தொகுப்பாசிரியர்), வ.உ.சி. நூல்திரட்டு, புதுமைப் பித்தன் பதிப்பகம், சென்னை - 83, 2002.
3. அரவிந்தன், மு.வை., உரையாசிரியர்கள், மணிவாசகர் பதிப்பகம், சென்னை, 1983.
4. இராமலிங்கம், என்.இ., இந்திய விடுதலைச் சிற்பிகள், திருவள்ளுவர் பதிப்பகம், சென்னை - 88, 1996.
5. உலகநாதன், மு., தமிழ்நாட்டுத் தவப்புதல்வர்கள், தொல்காப்பியர் நூலகம், சென்னை - 2, 1964.
6. கார்த்திகேசு சிவத்தம்பி, பாரதி மறைவு முதல் மகாகவி வரை, சென்னை, 1984.
7. கிரி. பி.வி., பேட்டியில் பிறந்த கதை, பூங்கொடிப் பதிப்பகம், சென்னை 4, டிசம்பர் 1986.
8. கைலாசபதி, க., பாரதி ஆய்வுகள், சென்னை, 1984.
9. சங்கரவள்ளி நாயகம், அ., வ.உ.சி. வரலாறும் பணிகளும், நியூசெஞ்சுரி புக் ஹவுஸ் (பி) லிட்., சென்னை - 98.
10. சஞ்சீவி, ந., தமிழாய்வு, சென்னைப் பல்கலைக்கழகம், 1973.
11. சாமிநாத சர்மா, வெ., நான் கண்ட நால்வர், பிரபஞ்ச ஜோதி பிரசுராலயம், சென்னை; புதுக்கோட்டை, மே 1959.

12. சாலை இளந்திரையன், புதுத்தமிழ் முதல்வர்கள், தமிழ்ப் புத்தகாலயம், சென்னை, 1972.

13. சிவஞானம், ம.பொ., விடுதலைப் போரில் தமிழ் வளர்ந்த வரலாறு, இன்ப நிலையம், சென்னை, 1970.

14. சிவஞானம், ம.பொ., கப்பலோட்டிய தமிழன், இன்ப நிலையம், மாணவர் பதிப்பு, 1968.

15. சீனி. விசுவநாதன், (தொகுப்பாசிரியர்) சுதேசியத்தின் வெற்றி, பாலாஜி புத்தக நிலையம், சென்னை - 102, 1985.

16. சீனு இராமச்சந்திரன், அறிஞர்களின் வாழ்வும் வாக்கும், முத்துப் பதிப்பகம், விழுப்புரம், டிசம்பர், 1987.

17. சுப்பிரமணிய அய்யர், எம்.எஸ்., வீர சிதம்பரனார், ஆசிரியர் நூற்பதிப்புக் கழகம், 53-56, சென்னை 1, இரண்டாம் பதிப்பு, 1954.

18. சுப்பிரமணிய பிள்ளை, இ.மு., வீரர் வ.உ.சிதம்பரம் பிள்ளை, நெல்லைத் தமிழ்ப் புலவர்கள், 1964.

19. சுப்பிரமணியன், வ.உ.சி., வ.உ.சிதம்பரம்பிள்ளை, சுயசரிதை (பதிப்பு), பாரி நிலையம், சென்னை 1, 1979.

20. சுப்பிரமணியன் வ.உ.சி., வி.ஓ.சி. கண்ட பாரதி, மெட்ராஸ் பிரீமியர் கம்பெனி, 1946.

21. ஞானசம்பந்தன் அ.ச., நான் கண்ட பெரியவர்கள், கங்கை புத்தக நிலையம், சென்னை 17, ஏப்ரல் 2001.

22. தி.சே.சௌ. ராஜன், வ.வே.ஸு ஐயர், கலைமகள் காரியாலயம், சென்னை, 1946.

23. திருச்சி வாசுதேவன், செந்தமிழ் நாட்டுத் தியாகிகள், வீரபத்திரர் பதிப்பகம், சென்னை 5, நான்காம் பதிப்பு, டிசம்பர், 1985.

24. திவான். செ., இலக்கியப் புரட்சியாளர், சுனஹனா பதிப்பகம், பாளையங்கோட்டை, மூன்றாம் பதிப்பு, 18-11-2002.

25. பி.ஸ்ரீ., நான் அறிந்த தமிழ் மணிகள், வானதி பதிப்பகம், சென்னை 17, முதற்பதிப்பு, 1971.

26. புலவர் மணியன், விடுதலை வீரர் வ.உ.சி. வாழ்வும் இலக்கியமும், மாப்பிள்ளைப் பதிப்பகம், சென்னை, 1976.

27. பூவை அமுதன் வீரத்தியாகி வ.உ.சி., தமிழ்ச் சோலைப் பதிப்பகம், சென்னை 33, முதற் பதிப்பு, 1989.

28. பொன். கோதண்டராமன், தமிழ் உணர்ச்சி, தமிழ் வளர்ச்சி, தமிழ் ஆட்சி, அம்புலி வெளியீடு, 1986.

29. முத்து, இரா.சு., வீரசுதந்திரம் வேண்டி நின்ற தமிழகத் தியாகிகள், பாவை பப்ளிகேஷன்ஸ், சென்னை 14, 2001.

30. ராஜலட்சுமி ராகவன் (ஸ்ரீமதி), பாரதப் பெரியார்கள், நான்காம் பாகம் (ஹிந்தியிலிருந்து தமிழாக்கம்), பப்ளிகேஷன்ஸ் டிவிஷன், தகவல் ஒலிபரப்பு அமைச்சகம், இந்திய சர்க்கார், செப்டம்பர் 1971.

31. ராஜேந்திரன், பி.எல்., கட்டபொம்மன் முதல் காந்தியார் வரை, பூவழகி பதிப்பகம், சென்னை 14, 1987.

32. வடிவேல் ராஜன், அ., தமிழகச் சான்றோர்களின் வரலாறு, மணிமேகலைப் பிரசுரம், சென்னை 17, 2000.

33. வள்ளி நாயகம், தி.நெ., செக்கிழுத்த செம்மல் சிதம்பரனார், உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம், சென்னை, 1975.

34. வீரராகவன், தே. வித்துவான், தமிழகத் திலகங்கள், எஸ்.வாஸன் கம்பெனி, சென்னை 4, நான்காம் பதிப்பு, 1968.

35. வெங்கட்ராம், எம்.வி., நாட்டுக்கு உழைத்த நல்லவர், பழனியப்பா பிரதர்ஸ், சென்னை 14, மூன்றாம் பதிப்பு, 1973.

36. வெங்கடாசலபதி, ஆ.நா., வ.உ.சி. கடிதங்கள், சேகர் பதிப்பகம், சென்னை, 1984.

37. வேங்கடராஜுலு, ரா., மகாத்மா காந்தியின் சுயசரிதம் (தமிழ்மொழியாக்கம்).

38. வையாபுரிப்பிள்ளை. எஸ்., தமிழ்ச்சுடர் மணிகள், பாரி நிலையம், 59, பிராட்வே, சென்னை, நான்காம் பதிப்பு, 1968.


மலர்


அ. சுடர், பாரதிய மலர், தில்லி தமிழ்ச்சங்கம், 1961.

ஆ. சுடர் வ.உ.சி. மலர், தில்லி தமிழ்ச் சங்கம், 1964.

இ. சுந்தரம் அய்யர், வே., டாக்டர் வ.உ.சி. சதாபிஷேக வரலாறு, லா ஜர்னல் அச்சுக்கூடம் பதிப்பு, 1936.

ஈ. விடுதலை வீரர் வ.உ.சி. நூற்றாண்டு விழா மலர், புக்ஸ் வொர்ல்டு, கோவை, 1972.


ஆங்கில நூல்


Sivagnanam M.P., The History of the growth of Tamils during the Indian war of Independence, University of Madras, 1980.

# வ.உ.சி.யின் படைப்புகள்

| நூலின் பெயர் | | வெளிவந்த ஆண்டு |
|---|---|---|
| 1. | சுயசரிதை (கவிதை) | 1946 |
| 2. | பாடல் திரட்டு (கவிதை) | 1915 |
| 3. | அரசியல் பெருஞ்சொல் | 1927 |
| 4. | வ.உ.சி. கண்ட பாரதி | 1946 |
| 5. | மெய்யறிவு | 1915 |
| 6. | மெய்யறம் | 1917 |

## பதிப்பித்த நூல்கள்

| | |
|---|---|
| திருக்குறள் - அறத்துப்பால் (மணக்குடவர் உரையுடன்) | 1917 |

## உரை நூல்கள்

| | | |
|---|---|---|
| 1. | இன்னிலை (விருத்தி உரை) | 1915 |
| 2. | சிவஞானபோதம் (உரையுடன்) | 1935 |

## மொழியாக்கம் (ஆங்கிலத்திலிருந்து தமிழுக்கு)

| | | |
|---|---|---|
| 1. | அகமே புறம் | 1914 |
| 2. | மனம்போல வாழ்வு | 1909 |
| 3. | வலிமைக்கு மார்க்கம் | 1930 |
| 4. | சாந்திக்கு மார்க்கம் | 1934 |

**உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம், சென்னை - 600 113**

**அண்மை வெளியீடுகள்**

| | |
|---|---|
| இலக்கிய இதழ்கள் | 110.00 |
| தொல்காப்பியத் தொடரியல் | 120.00 |
| தமிழில் பிற துறைக் கோட்பாட்டாய்வுகள் | 25.00 |
| இலக்கண நூல்களில் கருத்து வளர்ச்சி | 35.00 |
| தெ.பொ.மீனாட்சிசுந்தரனாரின்தமிழ்த்தொண்டும்மொழியியல்பங்களிப்பும் | 25.00 |
| இஸ்லாமியத் தமிழ்ப் புதினங்கள் சித்திரிக்கும் அறியப்படாத வாழ்வும் பண்பாடும் | 40.00 |
| பண்டைத் தமிழக வரைவுகளும் குறியீடுகளும் | 80.00 |
| தமிழெனப்படுவது | 115.00 |
| தமிழியல் ஆய்வுச் சிந்தனைகள் - இலக்கணம் & மொழியியல் | 105.00 |
| வலங்கை மாலையும் சான்றோர் சமூகச் செப்பேடுகளும் | 70.00 |
| தொல்லியல் நோக்கில் சங்ககாலம் | 45.00 |
| உலகத் தமிழிலக்கிய வரலாறு (தொன்மை முதல் கி.பி.500 வரை) | 45.00 |
| உலகத் தமிழிலக்கிய வரலாறு (கி.பி.501 - கி.பி.900) | 70.00 |
| பின்னத்தூர் அ. நாராயணசாமி ஐயர் | 35.00 |
| திருமணம் செல்வக்கேசவராய முதலியார் | 30.00 |
| அருந்தமிழ் நூற்காவலர் அடிகளார் | 55.00 |
| சிவக்கவிமணி சி.கே. சுப்பிரமணியமுதலியார் | 40.00 |
| மூதறிஞர் மு. இராகவையங்கார் | 40.00 |
| ம.பொ.சி. யின் பார்வையில் தமிழ்மொழி இலக்கியம் பண்பாடு | 30.00 |
| தணிகைமணி வ.சு. செங்கல்வராயப் பிள்ளை | 50.00 |
| அருந்தமிழ் அறிஞர் அ.ச.ஞா | 50.00 |
| ஆராய்ச்சிப் பேரறிஞர் தி.வை. சதாசிவ பண்டாரத்தார் | 45.00 |
| விவிலியத் தமிழ் | 40.00 |
| இக்கால உலகிற்குத் திருக்குறள் தொகுதி-1 | 80.00 |
| இக்கால உலகிற்குத் திருக்குறள் தொகுதி-2 | 85.00 |
| இக்கால உலகிற்குத் திருக்குறள் தொகுதி-3 | 95.00 |
| திராவிட மொழி இலக்கியங்கள் | 180.00 |
| நாவல்கலையியல் | 50.00 |
| சங்கரநமச்சிவாயர் | 60.00 |
| பண்டைத் தமிழ் எழுத்துக்கள் | 40.00 |
| அறிவியல் தமிழ் அறிஞர் பெ. நா. அப்புசுவாமி | 60.00 |
| சங்க பெண்பாற் புலவர்களின் மொழியும் கருத்தும் | 30.00 |
| தமிழியல் ஆய்வுச் சிந்தனைகள் | 100.00 |
| தமிழக வரலாறு மக்களும் பண்பாடும் | 125.00 |
| தெசிணி-யின் தமிழாக்கப் பாடல் திரட்டு | 50.00 |
| தமிழ்ச் சமூகவியல் ஒரு கருத்தாடல் | 25.00 |
| தமிழ் நாட்டுப்புறவியல் ஆய்வின் வரலாறு | 50.00 |
| நாடகமும் நாடகக் கம்பெனி அனுபவங்களும் | 60.00 |
| தொல்காப்பியப் பாவியல் கோட்பாடுகள் | 40.00 |
| தமிழ்ச் சுருக்கெழுத்து நூல் | 50.00 |
| தமிழர் நாட்டு விளையாட்டுகள் | 75.00 |

**Pub.No. 529 வ.உ.சி. ஒரு பன்முகப் பார்வை 25.00**